## 1

### மகேந்திரகிரி வனம்!

பாரத தேசத்தின் வித்யாசமான மலைக்காடு இது... பொதுவில் காடுகளே வித்தியாச மானவைதான்! விதம்விதமான தாவரங்கள், விலங்கினங்கள், அருவிகள், ஓடைகள், பறவைக் கூட்டங்கள் என்று அதன் உள் ளடக்கமே மிக பலமானதாகும். அதேசமயம் காடுகளில் பேராபத்துகளும் உண்டு. புதை குழிகளும், ஆள் விழுங்கி மலைப்பாம்பு களும் சிங்கம் புலி போன்றவற்றின் தாக்கு தல்களும் காடுகளில் அச்சமூட்டுவதாக இருக் கின்ற போதிலும், இவற்றுக்கு அப்பால் சில அதிசயமான விஷயங்களும் காடுகளில் உண்டு. அதில் ஒன்றுதான் தங்க மணல் திட்டு!

**மு**ல்லைப்புதூர் விலக்கு!

பிரதான தார்ச்சாலையில் இடதுபுறமாக பிரியும் ஒரு மண்சாலையின் தொடக்கத்தில் ஒரு பெயர் பலகை யில்தான் மேற்படி பெயர் எழுதப்பட்டிருந்தது.

நேராகச் செல்லும் அந்த தார்ச்சாலை நாகர் கோவில் நோக்கி நீண்டிருந்தது.



அந்த பெயர்ப்பலகையை ஒட்டி நின்றது ஒரு அரசுப் பேருந்து. அதன் உடம்பெங்கும் பல மாதத்து அழுக்கு... டிரைவர் சீட்டுக்கு முன்னால் உள்ள கண்ணாடி மட்டும் துடைக்கப்பட்டு சுத்தமாக இருந்தது. அங்கேயும் மண் மூடியிருந்தால் அவரால் எப்படிப் பேருந்தை ஓட்ட முடியும்? எனவே போய்த் தொலை கிறது என்று அவன் தன் முன் உள்ள கண்ணாடியை மட்டும் துடைத்து சுத்தமாக வைத்திருந்திருக்க வேண்டும் என்று தோன்றியது.

நின்ற அந்த பேருந்தில் இருந்து பாலாவும், இளங்கோவும் இறங்கினர். இருவர் கையிலும் ஆளுக்கொரு சூட்கேஸ் வைத்திருந்தனர். ஒருவன் கருப்புக் கண்ணாடி அணிந்திருந்தான். இன்னொருவன் தலைக்கு கேப் அணிந்திருந்தான். இறங்கிய ஜோரில் அவன் கேப்பை விலக்கவும்தான் அவனது வழுக்கைத் தலை வெளியே தெரிந்தது.

இருவரும் முல்லைப் புதூருக்குள் செல்லத் தொடங்கினர். அங்கிருந்து நடைதான்! இருபுறமும் கத்தாழை தழைத்து வளர்ந்திருந்தது. அதற்கு அப்பால் வயலில் சின்ன வெங்காயம் நட்டிருந்தார்கள். அதன் தாள்கள் மெல்லிய காற்றில் ஆடியபடி இருந்தன.

“இதாண்டா பாலா எங்க ஊர்... இங்க இருந்து ரெண்டு கிலோ மீட்டர் நடக்கனும். தகவல் கொடுத் திருந்தா என் தம்பியோ இல்ல அத்தை பையனோ அவங்ககிட்ட இருக்கற எம். 80ஐ எடுத்துகிட்டு வந்து காத்திருப்பாங்க.”

“நாம திடுதிப்னு புறப்பட்டதால தகவல் தரல.. இன்னிக்கு நடைதான்...” என்றான் இளங்கோ.

"ஏண்டா இப்ப போன் பண்ணி சொன்னா வர மாட்டாங்களா?"

"நானும் பண்ணித்தான் பார்க்கறேன். ஸ்விட்ச் ஆஃப்னே வருது. இந்த செல்போன்ங்கறது வரமா சாபமான்னே தெரியல. கடன்காரன்தான் பதில் சொல்லணுமேன்னு பயந்து போய் ஸ்விட்ச் ஆஃப் பண்ணி வைப்பான். என் தம்பி எதனால ஸ்விட்ச் ஆஃப் பண்ணி வெச்சிருக்கான்னு தெரியல. அவனை பாத்த வுடனே நல்லா இருக்கியாடா மூர்த்தின்னுகூட கேட்கப் போறதில்ல. நீயெல்லாம் எதுக்குடா செல்போன் வெச்சிருக்கேன்னுதான் ஆரம்பிக்கவே போறேன்." - இளங்கோவின் குரலில் கோபம் கொப்பளித்தது.

"விடு இளங்கோ... சென்னை டிராஃபிக்ல சிரழிஞ்சு போய் கிடக்கற உனக்கும் எனக்கும் ஆளரவமில்லாத இந்த ரோட்டுல நடந்து போறதுங்கறது ஓர் ஆனந்தமான அனுபவம் தான். நடப்போம், பொலூஷன் இல்லாத சுத்தமான காத்து, ஆளரவம் இல்லாத மண்ரோடு... ஆமா இது என்ன கொத்து கொத்தா புல்லு மாதிரி..." பாலு வெங்காய நாற்றுக்களைக் காட்டி கேட்கவும் இளங்கோ சிரித்து விட்டான்.

"ஆமா, நீ மருந்துக்குக்கூட கிராமத்துப் பக்கம் வந்ததில்லையா?"

"ஆமாம் இளங்கோ... பிறந்து வளர்ந்ததுல இருந்து படிச்சது, வேலைக்கு போனதுன்னு எல்லாமே தர்மமிகு சென்னைலதான்."

"சரிதான்... இது வெங்காய நாத்து...! எங்க ஊர்ல புஞ்சை வயல்தான் அதிகம். புஞ்சைன்னா தெரியுமில்ல?"



"அப்படின்னா?"

"நெல்லும் கரும்பும் வாழையும் விளையற வயலுக்கு நஞ்சைக் காடுன்னு பேர் - மத்தபடி மரவல்லி கிழங்கு, வெங்காயம், கத்தரி, வெண்டைன்னு பயிர் பண்ணா அதுக்கு புஞ்சைக்காடுன்னு பேர்..."

"ஏன் இந்த நிலத்துல நெல் போட்டா விளையாதா?"

"நெல்லு, கரும்பு, வாழை எல்லாம் நீர்ப் பயிருங்க... அதுங்களுக்கு தண்ணி நிறைய விடணும். அதாவது எங்க ஊர் கொஞ்சம் வானம் பார்த்த பூமி. கிணத்துப் பாசனம்தான். இதுக்கு அப்பப்ப தண்ணி காட்டினா போதும்..." இளங்கோ தானறிந்த விவசாயம் பற்றி பேசிக் கொண்டே நடந்தான். அப்போது சைக்கிளில் ஒருவர் பின்னால் பன்றி ஒன்றைக் கட்டிக் கொண்டு கடந்து போனார். அந்தக் காட்சியே பாலாவுக்கு வியப்பளித்தது.

"என்ன பாக்கறே... இங்க மினி பஸ்ல ஆடு மாடு கோழின்னு எல்லாமே பயணம் செய்யும். சைக்கிள்ள பன்னி கறிக்கடைக்கு போகுது. அரைமணி நேரத்துல அதோட ஆவி பரலோகத்துக்கு போயிடும்..." - இளங்கோ சொல்லச் சொல்ல பாலாவுக்கு மிகவே ரசமாக இருந்தது.

இருவரும் சென்னையில் ஒரு கார் விற்பனைப் பிரிவில் ஒன்றாக பணியாற்றுகிறார்கள். இளங்கோ நாகர்கோவில் கல்லூரியில் டிப்ளமோ படிப்பை முடித்து விட்டு தெரிந்த ஒருவர் சிபாரிசில் சென்னையில் இந்த வேலையில் போய் சேர்ந்தான். அங்கே இளங்கோவுக்கு முன்பாகவே பாலா சேர்ந்திருந்தான்.

கருத்து ஒற்றுமை, சம வயது, நல்ல மனது என்கிற மூன்றும் இருவருக்கும் இடையில் ஆழ்ந்த நட்பை வளர்த்துவிட்டது. அந்த நட்புதான் பாலாவை பொங்கல் விழாவுக்காக தன் கிராமத்துக்கும் அழைத்து வந் திருக்கிறது.

ஒரு வார விடுமுறை!

உலகை மறந்து குறிப்பாக கார் விற்பனைப் பிரிவில் வருகின்ற போகின்றவர்களிடம் எல்லாம் ஷோரூமில் நிற்கும் காரைக் காட்டி வாய் வலிக்கப் பேசும், செயற்கையாக சிரிக்கும் கொடுமைக்கு இந்த ஒரு வாரத்தில் இடமில்லை.

கூடவே கொடூரமான மெஸ் சாப்பாட்டில் இருந்தும் விடுதலை.

நினைக்கும் போதே இனித்தது இளங்கோவுக்கு!

ஊரும் தெரியத் தொடங்கியது.

“பாலா அதான் ஊர்... அதோ அந்த தண்ணி தொட்டி மேலே தான் நான் ஏறி உக்காந்துக்குவேன். அங்க இருந்து பார்த்தா மகேந்திரகிரி மலைல இருந்து வள்ளியூர் வரை பளிச்சின்னு தெரியும்... ஆனா கொஞ்சம் தலை சுத்தும்...”

குழந்தைத்தனமாக அவன் சொன்னதைக் கேட்டபடி நடந்தான் பாலா.

ஊர் தொடக்கத்தில் நாடாரின் மளிகைக் கடை. மளிகைக்கடை முகப்பிலேயே சைக்கிள் கடையையும் சேர்த்து வைத்து இரட்டை குதிரை சவாரி செய்பவர் நாடார்.

அவரது கடை பன்னீர் சோடா தான் ஊருக்குள் வரும் விருந்தினர்களுக்கான முதல் உபசார சரக்கு



இளங்கோவும் ஒரு சோடா குடிக்காமல் ஊருக்குள் போகமாட்டான். கடை வரவும் முகப்பு வாடகை சைக்கிள் மேல் சூட்கேஸை சரித்து வைத்தபடி கல்லாவில் அமர்ந்திருந்த நாடாரைப் பார்த்தான்.

“நாடாரே...”

“யாரு...இளங்கோவா?”

“பொறவு... அப்புறம் சேம சௌக்யமெல்லாம் எப்படி?”

“இருக்கேம்ப்பா... ஆமா உன் வீட்ல இப்பதான் நீ வேலை பாக்கற கார் கம்பெனிக்கு தந்தி கொடுத்தாங்க. ஆனா அதுக்குள்ள வந்து நிக்கறே. இவ்வளவு வேகமா எப்படி வந்தே? விமானத்துல வந்தா கூட தூத்துக்குடி வந்து அங்க இருந்து இங்க வர எப்படியும் ரெண்டு மணி நேரம் ஆவுமே?” - நாடார் சொன்னதும் கேட்டதும் இளங்கோவை கிள்ளியது.

“என்ன நாடாரே சொல்றீங்க... என் வீட்ல என் கம்பெனிக்கு தந்தி கொடுத்தாங்களா... எதுக்கு?”

“அப்ப உனக்கு எதுவும் தெரியாதாக்கும்?”

“என்ன விஷயம் நாடாரே... பட்டுன்னு முதல்ல சொல்லுங்க...”

“அத ஏம்ப்பா கேக்கறே... உன் தம்பி மூர்த்தியும், ஊர் பிரசிடெண்ட் மவன் ஆனந்தனும் நாலு நாள் முந்தி மகேந்திரகிரி மலைப்பக்கம் போயிருக்காங்க. இந்த நொடி வரை திரும்பி வரக்காணோம்! நேத்து முழுக்க பிரசிடெண்ட்டய்யா ஒருத்தருக்கு பத்து பேரை மலைக்கு அனுப்பி தேடச் சொல்லியிருக்காரு... மேல ஃபாரெஸ்ட் ஆபீஸ்காரங்கள பாத்தும் பேசி யிருக்காரு. இதுல கொடுமை என்னா அவங்கள தேடிப்

போனவங்கள்ள இரண்டு பேரும் காணம போய்ட்டாங்க! எட்டு பேர் மட்டும் கீழ இறங்கி வந்து தயவு செய்து எங்கள விட்றுங்க நாங்க உசுர் தப்பி வந்ததே சாமி செஞ்ச புண்ணியம்னுட்டாங்க..." - நாடார் சொல்லி முடிக்கவும் இளங்கோவுக்கு நெஞ்சை அடைத்தது.

"ஆமா... எதுக்கு மகேந்திரி கிரி காட்டுக்கு போனாங்களாம்?"

"யாருக்குப்பா தெரியும்... அங்க ஒரு எல்லைக்கு மேல மலைப்பளியனுங்களே போகமாட்டாங்க. சித்தர் சாமிங்களும் வானத்துல இருந்து வர்ற கவுனர்களும் நடமாட்ற இடம்... மனுஷக் காலடி அங்க பட்றது பாவம்னு சொல்வாங்க. இவங்க அந்த பக்கம் ஒரு வேளை போயட்டாங்களோ என்னவோ?" - நாடார் சொல்லி முடிக்குமுன் சூட்கேஸை எடுத்துக் கொண்டு வீடு நோக்கி ஓடத் தொடங்கினான். பின்னாலேயே பாலாவும்.

## 2

தட்டையான பூமியில் அங்கங்கே கூம்பு கூம்பாய் பெருமலைகள் இருப்பது எப்படிச் சாத்யமாயிற்று என்பதுதான் நிலவியல் அறிஞர்களின் பிரதான கேள்வி. தொடர்ச்சியாக மலையும் சமதளமும் இருந்தால் சமதளப் பகுதியில் மலை இருந்து அது காலத்தால் இடிந்தும் கரைந்தும் சமதளப் பகுதி உருவாகிவிட்டதாக கருத இடம் இருக்கிறது. ஆனால் பல நூறு மைல்களுக்கு தட்டையான நிலப்பரப்பு. இடையில் ஒரு



இடத்தில் மட்டும் ஒரு சில கிலோ மீட்டர் சுற்றளவுக்கு மலை. அதுவும் கருங்கற்களால் பெரும் பாறைகளால் ஆன மலை. திரும்பவும் சமதளமான நிலப்பரப்பு... இது எப்படி சாத்யம்? நிலவியல் ஆய்வாளர்கள் இப்படி ஒரு கேள்வியுடன் பூமி குறித்து ஆய்வு நிகழ்த்தும் போது குறிப்பிட்ட இடத்தில் மலை இருப்பதற்கான காரணங்களை துல்லியமான விஞ்ஞான காரண காரியங்களோடு அறிய முடியவில்லை.

அதை ஒரு இயற்கை வினோதமாகத்தான் கருத முடிந்தது. ஆனால் புராணங்களில் குறிப்பாக வால்மீகி இராமாயணத்தில் சுந்தரகாண்டப் பகுதியில் மலைகள் சிறகுகளோடு பறக்க கூடியவைகளாக இருந்தன என்கிற செய்தியை அறிய நேர்ந்தபோது அது அந்த மலைகளோடு பொருந்திப் போயிற்று!

இளங்கோவின்வீடு ஒன்றும் பெரிய வீடெல்லாம் இல்லை. கூம்பு வடிவ ஓட்டுக் கூரையும் அதன் மேல் பரவிக் கிடக்கும் சுரைக்கொடியுடன் கூடிய எளிய வீடு. வீட்டுக்கு பின்புறத்தில் மாட்டுத் தொழுவம். அதில் ஒரு பசுமாடும், இரண்டு எருமை மாடுகளும் இருக்கின்றன. முன்னாலே முருங்கை மரமும் அகத்தி மரமும் உள்ளது. மரத்துக்கு கீழே பஞ்சாரத்துக்குள்ளே கோழிகள். தினமும் நான்கிலிருந்து ஆறு முட்டைவரை கட்டாயம் போடும்.

பசும்பால், முருங்கை கீரை, கோழி முட்டை இதெல்லாம் எத்தனை ஆரோக்யமான விஷயங்கள்! முன்பு இவற்றோடு நெல் கொட்டாரம், கடலைக் கொட்டாரம், ஆட்டுக் கொட்டில் என்று பல சமாச் சாரங்கள் இருந்தன. காலம் கிராமங்களையும் விழுங்க

ஆரம்பித்ததில் அதெல்லாம் போய்விட்டது. ஏதோ மாடும் கோழியுமாவது மிஞ்சியிருக்கிறதே என்று ஆறுதலடைய வேண்டியதுதான்.

அப்படி ஒரு வீட்டுக்குள் ஒரு புயல் காற்று போல புகுந்த இளங்கோவை அவன் தாயும் தந்தையும் பார்த்து ஒருவித ஆச்சரியத்தோடு நிமிர்ந்தனர்.

இளங்கோவின் தங்கை வேணியும் 'அண்ணே' என்று அவனருகில் வந்தாள். அவன் தாயின் முகத்தில் கண்ணீரின் தழும்புகள். அப்பா முகத்தில் அழுத்தமான சோகம்.

"யம்மா அப்பா... வார வழில நாடாரை பாத்துட்டு தான் வாரேன். நம்ம மூர்த்தி மலை பக்கம் காணாம போயிட்டானாமே... நெசமாப்பா?" - என்று சூட்கேஸை ஒரு இடத்தில் வைத்தபடியே கேட்டான்.

"ஆமாப்பா... ஆமா நீ சேதி தெரிஞ்சு தான் வந்தியா, இல்லை வழக்கமா வர்ற மாதிரி வந்தியா?"

"பொங்கப் பண்டிகைக்கு என் சினேகிதன் பாலா வோட ஆச ஆசையா வந்தேன். ஐயோ பதட்டத்துல பாலாவை தெருவுலவே விட்டுட்டு வந்துட்டேன். நான் ஒரு கூமாப்பய..." - என்றபடியே திரும்பி வாசல் பக்கம் செல்லத் தொடங்கியவன் எதிரில் பின் தொடர்ந்து வந்த பாலாவும் வந்துவிட்டான்.

"சாரிடா பாலா... பதற்றத்துல உன்னை மறந்துட்டேன். நல்லவேளை நீ பின்னாலேயே வந்து சேர்ந்தியே..." - என்று பாலாவை உள் அழைத்துச் சென்று தாய் தந்தையரையும் தங்கையையும் காண்பித்தான்.

"இவங்கதான் என் அப்பா அம்மா.... இது என் தங்கச்சி வேணி +2 படிக்கறா..."



"சந்தோஷம் .... உன் தம்பி காணோம்னு ஓடி வந்தியே அது விஷயம் என்னாச்சு...?"

"இனிமேட்டுதான் விசாரிக்கணும். சொல்லுங்க. அந்தக் கோட்டிப்பய எதுக்கு மலைக்கு போனான்? அதான் அவன் செல்போனுக்கு நான் கூப்பிட்டப் பல்லாம் சுச்சு ஆஃப், சுச்சு ஆஃப்னே வந்துச்சா?"

"என்னத்தப்பா சொல்ல... மனசு கெடந்து அடிச்சிக்குது. ஒருத்தருக்கு நாலு பேர்காணாம போயிட்டாங்க. ஒரு தகவலும் இல்லை."

"மலைல இவங்களுக்கு என்னப்பா ஜோலி!"

"நான் என்னான்னு சொல்ல... மகேந்திரகிரி மலைப் புராணம்னு ஒரு பழைய புத்தகம் ஒண்ணு ஊட்டுல கிடந்துச்சு. உன் தாத்தா காலத்து புத்தகம். அந்த நாள் அரையணா அதோட விலை."

"அதுக்கென்னப்பா இப்போ?"

"நீ இப்படி படபடன்னு கேட்டா நான் என்னத்த சொல்ல...? நான் தான் விலாவரியா விபரமா சொல்றேன்ல..."

"சரி சொல்லுங்க..."

"தம்பி முதல் முதலா எங்க ஊருக்கு வந்துருக்கீங்க. அப்படி அந்த பாய்ல முதல்ல உக்காருங்க. ஏ புள்ள வேணி அடுப்பங்கரைக்கு போய் முதல்ல சூடா டீ போட்டு எடுத்தா..." - இளங்கோவின் அப்பா அந்த நிலையிலும் விருந்தோம்பலை விட்டுவிடவில்லை. வேணியும் ஒதுங்கினாள். ஆனால் அவர் மனைவியும் இளங்கோவின் அம்மாவுமான கோமதி அழுதபடியே இருந்தாள்.

“அப்பா விஷயத்துக்கு சட்டுன்னு வாங்கப்பா...”

“வாரேண்டா... அந்த புத்தகத்தை எடுத்து உன் தம்பி படிச்சு கிட்டிருந்தான். படிச்சு முடிச்சிட்டு என் கிட்ட வந்து அப்பா அப்பா நம்ம மகேந்திர கிரி மலைல தங்க மணல் திட்டு இருக்கிறதா இந்த புத்தகத்துல போட்டுருக்குது அது நிஜமாப்பான்னு கேட்டான்.”

“தங்க மணல் திட்டா?”

“ஆமாப்பா... புத்தகத்தை படிச்சா உனக்கும் புரியும். புராணம் தானேப்பா... அஞ்சுதலை நாகம், சக்கர வாகப் பறவை, தங்க மணல் திட்டு, ரக்கை முளைச்ச தேவதைங்கன்னு அதுல கண்ட கதையும் இருக்கத்தானே செய்யும்...?”

“அப்ப மூர்த்தி அதை உண்மைன்னு நம்பி அந்த மலைக்கு போயிட்டானா?”

“அப்படித்தாம்ப்பா தோணுது. இங்க பக்கத்துல தான் இருக்குது. யாரும் போய் பாத்தது கிடையா தான்னு கேட்டான். அதெல்லாம் சும்மா கட்டுக்கதைப் பான்னேன்...”

“அது எப்படிப்பா கட்டுக்கதையை ஒரு புத்தக மாவே அச்சடிச்சு விப்பாங்க? எனக்கென்னவோ நிஜமா இருக்கும்னு தான் தோணுதுன்னான்! அடபோடா கோட்டி... போய் வேலை வெட்டிய பாருடான்னுட்டு நான் போய்ட்டேன். ஆனா இந்த பய பிரசிடெண்ட் டய்யா மவன் குமாரைக் கூட கூட்டிக்கிட்டு நாலு நாள் முந்தி மலைப்பக்கம் போயிருக்கான். வழில நம் மாளுங்களும் பாத்துருக்காங்க. அவங்க கிட்டயும் மேல உச்சிக்கு எந்த பாதைல போகணும் எப்படிப் போகணும்னுல்லாம் விசாரிச்சிருக்கான்.



அவங்களும் சொல்லிட்டு ஒரு குறிப்பிட்ட தூரத் துக்கு மேல போகாதப்பா. ஆபத்துன்னு சொல்லி யிருக்காங்க. இந்தப் பய கேக்கல. ஏறிப் போயிருக்கான். அவுங்க கீழ வள்ளியூர் டீக்கடைல என்னை பாக்கைல என்னவே சுந்தரலிங்கம் உம்ம இளைய மகன் மூர்த்தியும், பிரசிடெண்டய்யா மவன் குமாரும் மேல ஆபத்தான மலைப்பக்கம் போறாங்கன்னாங்க. அப்பவே எனக்கு சுருக்குன்னுச்சு. கடைசில நான் பயந்தா மாதிரியே ஆயிடுச்சு... நான் ஒரு பக்கம் தேடி அலுத்துட்டேன்... பிரசிடென்ட்டும் விடாம தேடிகிட்டிருக்கார்... இதோ இவளும் அழுது வடிஞ்சுகிட்டே இருக்கா...” - இளங்கோவின் அப்பா சுந்தரலிங்கம் அவன் தாய் கோமதியை சுட்டிக்காட்டிய படியே சொல்லி முடித்தார்.

இளங்கோவுக்கு அடுத்து என்ன செய்வது என்பதில் குழப்பம் தான் மேலிட்டது. இந்த பொங்கல் திருவிழாவை பிரமாதமாய் கொண்டாடப் போவதாக எண்ணிக் கொண்டு சென்னையை விட்டு புறப்பட்டு வந்தவனுக்கு மிகவே ஏமாற்றமாக இருந்தது.

அந்த ஏமாற்றத்தோடு நண்பன் பாலாவை பார்த்தான். பாலாவுக்கும் புரிந்தது.

“இளங்கோ கவலைப்படாதே... நமக்கு பொங்கல் பண்டிகை முக்கியமில்லை. தம்பி மூர்த்திதான் முக்கியம். இந்த பண்டிகை அடுத்த வருஷம் கூட வரும். ஆனா தம்பி விஷயம் அப்படி இல்லை. நல்லவேளை 1 வார லீவு போட்டுட்டு வந்துருக்கோம். குளிச்சிட்டு நாமளும் தேடல்ல இறங்குவோம் - இரண்டுல ஒண்ணு பார்த்துடுவோம்” - என்று மிக நம்பிக்கையாக பேசினான். இளங்கோ அப்பா சுந்தரலிங்கத்தையே பாலாவின் பேச்சு சிலிர்க்க

வைத்துவிட்டது. இளங்கோவுக்கும் மனதுக்குள் ஒரு பலம் வந்து சேர்ந்ததுபோல் இருந்தது.

இடையில் காபியோடு வந்து நின்றாள் இளங்கோவின் தங்கையான வேணி. வீட்டுப் பசுவின் பாலினைக் கொண்டு காபி பொடியை நேரடியாக பாலில் போட்டு கொதிக்க வைத்து பின் வடிகட்டிப் போடப்பட்ட கிராமத்துக் காபி இதமாகவே இருந்தது.

குடித்து முடிக்கும்போது வெளியே 'டபட' என்று சட்டிப் பானை முரசை தட்டிக் கொண்டு பஞ்சாயத்து ஏவலாளி மாடசாமி வந்து நின்றிருந்தான்.

அவனைச் சுற்றி தெருவில் வசிப்போர் ஒன்று சூழ்ந்திருந்தனர். அவனும் 'டபடப' வென்று பிரம் பாலே முடிந்த அளவு அடித்து எல்லோர் கவனத்தையும் ஈர்த்து விட்டு நாலாபுறமும் பார்த்தான். அவன் வந்து விட்டது தெரிந்து வீட்டில் இருப்பவர்களும் வாச லுக்கு வந்துவிட்டனர். இளங்கோவும் பாலாவும்கூட வாசலுக்கு வந்தனர். மாடசாமி அப்படி வந்து நின்றால் ஊருக்கு பொதுவாக சேதி சொல்லப் போகிறான் என்றுதான் அர்த்தம்.

இதனால நம்ம முல்லைப் புதூர் குடி ஜனங்களுக்கு பஞ்சாயத்து சேதி என்னான்னா, நம்ம ஊரைச் சேர்ந்த நாலு பேர் மலைக்கு போன இடத்துல தொலைஞ்சு போனதால வீட்டுக்கு வீடு அதே பேச்சாகத்தான் இருக்கு. இந்த நிலைல தை மாசம் பொறந்து பொங்கத் திருநாளும் வருது. துக்கம் பிடிச்ச நிலைல ஊர் இருக்கைல பொங்கலை கொண்டாட்றதும் உசிதமில்லை. அதனால தொலைஞ்சு போனவங்க கிடைக்கற அன்னிக்கு இந்த பொங்கத் திரு நாளை சந்தோஷமாவும், ரொம்பவே சிறப்பாவும்,



இத்தாப்பாவும் கொண்டாடிக்கலாம்னு நம்ம பிரசிடெண்டெய்யா ஈஸ்வரய்யா உத்தரவு போட் டுட்டாரு. அதேசமயம் தொலைஞ்சு போனவங்கள பத்தின மீட்டுத்தர்றவங்களுக்கோ இல்லை, அவங்கள பத்தின தகவல் தர்றவங்களுக்கோ பத்தாயிரம் ரூபா இனாமும் கூடவே பத்து வெள்ளாடும், பத்து சேவலும் பரிசா கொடுக்கப்படும். இந்த நிமிசத்துல இருந்து இந்த இனாமும் பரிசும் நடைமுறைக்கு வருது. இதுல முக்கியமா குறிப்பிடப்பட வேண்டியது என்னன்னாக்கா தொலைஞ்சவங்களை தேட்றேன்னு தேட்றவங்க விவர மில்லாம நடந்துகிட்டு அவங்களுக்கு ஆபத்தை வரவழைச்சுக்க கூடாது. சூதானமா நேர்த்தியா தேடணும். கூட்டமா போய் ஒத்துமையா தேட்றது ரொம்ப நல்லது. இது விசயத்துல போலீசுக்கும் தகவல் கொடுத்து அவங்களும் தேடித்திரியறாங்க. இதையும் கவனத்துல வெச்சிகிட்டு செயல்படணும்.

நம்ம ஊர் காவல் தெய்வமான பனைக்குளம் சுடலை மாடன் அருளால எல்லாம் நல்லபடியா முடிய வேண்டியது... டம்டம்டம்டம் - ஏவலாளி மாடசாமி சொன்ன செய்தியும் அந்த பாஷையும் சென்னைத் தமிழை மட்டுமே அறிந்த பாலாவுக்கு மிகவே புதிது.

வெகுவாக ரசித்தான் பாலா. "இந்த செல்போன் யுகத்துலயும் தெருவுக்கு வந்து இப்படி சேதி சொல்றது ரொம்ப வித்யாசமாவும் நல்லாவும் இருக்கு இளங்கோ..." என்றான்.

"சரி பாலா... வா நாம குளிச்சு டிபன் சாப்ட்டு அடுத்து என்ன செய்யறதுன்னு யோசிப்போம்..."

இளங்கோ பாலாவை உள்ளே அழைத்துச் சென்றான்!

◆◆◆

முல்லைப் புதூரில் பிரசிடெண்ட் ஈஸ்வரய்யாவின் வீடு, அந்த ஊர் பாஷையில் சொல்வதானால் முரட்டு மச்சு வீடாக காட்சி தந்தபடி இருந்தது. காம்பவுண்டு வாலும், வேல் கம்பு கிராதிக் கதவும் உட்புறத்தில் வீட்டைச் சுற்றி தோட்டமும் பழ மரங்களுமாக காட்சி தந்தது.

வாத மரம் ஒன்றின் கீழ் ஈஸ்வரய்யா பயன்படுத்தும் டாடா சுமோ நின்றபடி இருந்தது. எதிர் திசையில் பெரிய பன்னீர்மரம் - அதற்கு கீழே நெல் மூட்டைகளோடு அரவைக்காக மில்லுக்கு போக தயாராக இருந்தது டிராக்டர் ஒன்று.

ஏராளமான வேலையாட்கள்! ஒரு பக்கம் சில பெண்கள் உரலில் கைக்குத்தல் அரிசியை குத்தியபடியே சலித்துக் கொண்டும், மூட்டை கட்டிக் கொண்டும் இருந்தனர். வாசல் கிராதிக் கதவுக்கு முன்னாலே ஒரு கால் டாக்சி ஒன்று வந்து நின்று ஹாரன் சப்தமிட்டது.

அதில் கணக்குப்பிள்ளை கணபதி முன்பக்கமாய் அமர்ந்திருக்க சப்தம் கேட்டு ஓடி வந்த ஒரு வேலைக்காரன் அவரைப் பார்த்துவிட்டு கதவை வேகமாக திறந்தான். அப்படியே பின்பக்கம் காருக்குள் யார் என்றும் பார்த்தான்.

கலியக்காவிளையில் உள்ள பகவதி அம்பலத்தில் குறி சொல்லும் கிருஷ்ணப் பணிக்கர் தான் பின் பக்கத்தில் இருந்தார்.

அவரைப் பார்க்கவுமே அவனுக்கு விஷயம் புரிந்துவிட்டது. பிரசிடெண்ட் ஈஸ்வரய்யா மகன் காணாமல் போனதால் கிருஷ்ணப் பணிக்கரை அழைத்து பிரசன்னம் பார்க்கப் போவது... கால் டாக்சியும் அந்த மச்சு வீட்டு முகப்பு வரை போய் நின்றது. உள்ளே இருந்து கிருஷ்ண பணிக்கரும் இறங்கினார். பார்க்க கம்பீரமான தோற்றம். கேரள வேட்டிக்கட்டு - மார்பில் சட்டை இல்லை. துண்டைக் கூட அலட்சியமாக ஒரு பக்கமாக போட்டிருந்தார்.

அவர் கையில் ஒரு சிறு ஓலைப் பெட்டி. அதை கை அக்குளில் வைத்து அண்டக் கொடுத்து பிடித்தபடி நிமிர்ந்தார். அவர் வந்தது தெரிந்து பிரிசிடெண்ட் ஈஸ்வரய்யாவும் வாசலுக்கு வந்துவிட்டிருந்தார்.

அவரோ அவர் மனைவி வள்ளி நாயகி. அவர் தங்கை புவனேஸ்வரி தங்கை கணவர் ராம சுந்தரம் என்று அவ்வளவு பேரும் வாசலுக்கு வந்துவிட்டனர்.

ஈஸ்வரய்யா முதற்காரியமாக கிருஷ்ண பணிக்கரைப் பார்த்து வணங்கினார்.

"நமஸ்காரம் பணிக்கரே.."

"நமஸ்காரம் நமஸ்காரம்....சகல விஷயங்களையும் கணபதி சொன்னார். பொன்னு களவு போகும் - பொருள் களவு போகும் - இது உயிர்க்களவு... சேதி காதுல விழுந்த மாத்ரத்துல அதிர்ச்சியாதான் இருந்தது. இருந்தாலும் வாழ்க்கைங்கறது என்ன...? எதுவேணா எப்பவேணா எப்படி வேணா நடக்கறது தானே...?" - பணிக்கர் பேசிக் கொண்டே அவர்களோடு உள்ளே சென்றார்.

"பணிக்கரே....காசும் பணமும் களவு போனா சம்பாதிச்சுக்கலாம். உயிர் போனா அப்படியா? நாலு நாளாச்சு நாங்க தூங்கி..."

விசும்பி அழ ஆரம்பித்துவிட்டாள் ஈஸ்வரய்யா மனைவி வள்ளிநாயகி.

"பேடிச்சாண்டா... கரையாண்டா.... நான்தான் வந்துட்டேனே. பிரசன்னம் பாத்தா தெரிஞ்சிட்டுப் போகுது..." என்ற பணிக்கர் "இங்க கேணி இருக்கு தானே?" என்றும் கேட்க, "பின்பக்கம் இருக்கு பணிக்கரே" என்றார் ஈஸ்வரய்யா.

"நான் போய் குளிச்சுட்டு வரேன். சுத்தபத்தமா பிரசன்னத்துல உக்காந்தா தான் தேவதைகள் கிட்ட இருந்து சரியான பதில் வரும்" என்றபடியே பின்பக்கம் செல்ல முனைந்தவரை கணபதி அழைத்துச் செல்லத் தொடங்கினார்!

## 3

"மலைகளுக்கு பறக்கும் ஆற்றல் இருந்தது என்பதை கற்பனை செய்து பார்க்கக்கூட நம்மால் முடியவில்லை. ஏன் என்றால் பறக்கும் சக்தியை நாம் உயிர்களுக்கு மட்டுமே சாத்யப்பட்டு பார்த்திருக்கிறோம். ஆனால் ஒரு மலை எனப் படுவதோ பெரும் கற்குவியல்களால் ஆன ஒன்று! இப்படிப்பட்ட கற்குவியலை நாம் ஜடப் பொருளாகத் தான் கருதுவோம். ஜடப் பொருள் என்பது கிடப்பது. அதனால் அசைய முடியாது. காற்று மழை என்று எல்லாத் தாக்கங்களையும் எதிர் கொண்டு எனக்கென்ன என்று கிடப்பது தான் அவைகளின் இயல்பு. அப்படி இருக்க ஒரு மலை பறக்கும் என்றால் அதை நினைக்கும் போது மிகப் பெரிய ஒரு பொய்யாகத்தான் மனதுக்கு தோன்றும்.



அப்படியென்றால் மிகப்பெரிய ஒரு சம தளத்துக்கு நடுவில் எப்படி மலைகள் அங்கங்கே தோன்றியிருக்க முடியும்? பூமி முழுக்க மலைகள் இருந்து கால மாற்றத்தால் பூமியின் கீழ் தளத்தில் அசைவுகள் ஏற்படும் போது பூகம்பம், நில நடுக்கம் போன்றவற்றால் மலைகளும் உடைந்து சிதறி அங்கங்கே அதன் காரணமாக சமதளங்கள் தோன்றியிருக்க வாய்ப்பு உண்டு. என்றால் பூமி முழுக்க மலைகளே அதிகமாக இருக்க வேண்டும். சமநிலமானது அதைவிட குறைவாகவே இருக்க வேண்டும். ஆனால் நமது பூமிப் பரப்பளவில் நூற்றுக்கு பத்து சதவிகித அளவுக்கே மலைகளின் பரப்பளவு உள்ளது. தொண்ணூறு சதவிகிதம் சமதளமே உள்ளது. இதை வைத்து பார்க்கும்போது மலைகள் பறந்து வந்து அங்கங்கே அமர்ந்துவிட்டது போலத்தான் எண்ணத் தோன்றுகிறது. அப்படியானால் அந்த பறக்கும் சக்தி இப்போது அவைகளிடம் எப்படி இல்லாமல் போனது?

இல்லையென்றால் இந்த பத்து சதவிகித மலைகள் வேறு புவியியல் காரணங்களால் உருவானவையா? இப்படி மலைகளை பற்றி சிந்திக்க நிறையவே இடம் இருக்கிறது. இப்படிப் பட்ட மலைகளில் வியப்பூட்டும் விஷயங்களை தன்னகத்தே கொண்ட மலைகளும் நிறையவே உள்ளன.

அவற்றில் ஒன்றுதான் மகேந்திரகிரி மலை!

பணிக்கர் குளித்துவிட்டு வந்தார். குளிக்கும்போது கூட தான் கொண்டு வந்திருந்த ஓலைப் பெட்டியை அருகில் பார்க்கும்படியாக ஒரு மாவிலைக் கொத்து

கொண்டு வரச் சொல்லி அதன் மேல் வைத்து விட்டுத்தான் குளித்தார்.

ஈர வேட்டியை உலரப் போட்டுவிட்டு காரில் இருந்த தனது வேட்டியை எடுத்துவரச் சொல்லி கட்டிக் கொண்டார்.

அப்படியே கிணற்றடியில் நின்ற நிலையில் அண்ணாந்து பத்து மணிச் சூரியனை வானத்தில் பார்த்து கண்கள் இடுங்க கன்னத்திலும் போட்டுக் கொண்டார்.

பிரசன்னம் என்பது ஒருவர் தனது நோயின் உண்மை நிலையை துல்லியமாக அறிந்து கொள்வதற்காக ரத்தப் பரிசோதனை செய்து கொள்வது போன்றது.

காலத்தை குடைந்து சில சமிக்ஞைகளை ஒன்று சேர்த்து எது உண்மை என்று அறிவது, ஒரு வகையில் விஞ்ஞான பூர்வமானதும்கூட. ஒரு கம்யூட்டரும் கோள்களின் நிலை பற்றிய சாஃப்ட்வேர் ஒன்றும் இருந்தால் போதும். கூட்டிக்கழித்து வகுத்துப் பெருக்கி கேள்விக்கான பதிலை கண்டுபிடித்து விடலாம். அதே விடையை நம்பூதிரிகளும், பணிக்கர்களும் சோழி போட்டும், சூழ்நிலை அரவங்களை வைத்தும் கணிப்பார்கள்.

பணிக்கரும் ஹாலுக்கு வந்தார்.

"இங்க எங்க இருக்கு பூஜை அறை?" - என்று கேட்டு பூஜை அறை முன் போய் நின்றார். பூஜை அறையில் ஒரு சிறு கொலு மண்டபம். அதனுள் ஒரு அம்பாள் விக்ரகம். பக்கவாட்டில் சுவர்களில் எல்லாவித கடவுளர் படங்களும் காணப்பட்டது. அதில் பதினெட்டு சித்தர்களுக்கான படம் ஒன்றின் மேல் நன்கு வளர்ந்த பல்லி ஒன்று படுத்திருந்தது. பணிக்கர் வணங்குவதை கவனித்தது போல ஒருமுறை சப்தமிட்டது.



பணிக்கருக்கு சுருக்கென்றது. எதிர் சுவற்றை அப்படியே சதுரப்படுத்தி அதில் பல்லி இருந்த இடத்தை திசைப்படுத்திப் பார்த்தவருக்கு பகீர் என்றது. தென் பகுதியின் மையத்தில் அக்னி மூலைக்கும் கன்னி மூலைக்கும் நடுவில் எமனுக்குரிய பகுதியில் அந்த பல்லி இருந்தது. அவர் முகமும் மாறத் தொடங்கிவிட்டது.

அப்படியே அங்கேயே ஒரு பலகையை கொண்டு வரச் சொல்லி அதன் மேல் அமர்ந்து கொண்டார். பின் தன் முன்னால் தண்ணீர் தெளித்து அதன் மேல் ஒரு வட்டக் கோலம் போடச் சொல்லி நடு மையத்தில் கோலத்தாலேயே ஸ்வஸ்திக் சின்னத்தை போட்டு அதன் மேல் இன்னொரு பலகையை கொண்டு வைக்கச் சொன்னார். சுற்றி நிற்பவர்களை எதிரில் அமரச் சொல்லிவிட்டு கைகளை மார்பு முன் கட்டிக் கொள்ள வேண்டாம் என்றும் கட்டளையிட்டார். பின் கற்பூரம் கொண்டுவரச் சொல்லி அதை ஏற்றி துதி செய்து முடித்துவிட்டு சோழிகள் கொண்ட ஓலைப் பெட்டியை திறந்து சோழிகளை கைகளில் அள்ளி பலகை மேல் குவித்து வைத்தார். அப்படியே ஈஸ்வரய்யாவை பார்த்தார்.

"இப்ப உங்க கேள்வி என்ன?"

"காணாம போன எங்க மகன் இப்ப எப்படி இருக்கான்னு தெரியணும் பணிக்கரே?"

"நல்லது..." - என்றவர் சோழிகளை அள்ளி குலுக்கிப் போட்டுவிட்டு இரண்டு இரண்டாக இரு தடவை மூன்று மூன்றாக மூன்று தடவை, நான்கு நான்காக நான்கு தடவைக்கு முயன்றபோது ஒரு சோழி

மீந்து போனது. இரண்டாவது முறை அதேபோல் குலுக்கிப் போடு வகை பிரிக்கும்போதும் ஒரு சோழி மீந்து நின்றது. மூன்றாவது முறையும் அதேபோல் ஆயிற்று.

பணிக்கரிடம் ஒரு ஆழ்ந்த பெருமூச்சு!

"என்ன பணிக்கரே... பிரசன்னம் என்ன சொல்லுது?"

"ஒண்ணும் சொல்லிக்கும்படியா இல்லை. கவுளி சொன்னதை சோழிகள் ஊர்ஜிதம் செய்யுது."

"கவுளி என்ன சொல்லிச்சு பணிக்கரே..."

"அதுக்கு முன்னால என் கேள்விக்கு பதில் சொல்லுங்கோ. தொலைஞ்சு போனது உங்க மகன் மட்டும்தானா?"

"இல்ல சாமி... அவனும் இந்த ஊரை சேர்ந்த மூர்த்திங்கிற பையனும் சேர்ந்துதான் தொலைஞ்சு போனாங்க. பின்னால் தேடிப் போனதுல இரண்டு பேர் தொலைஞ்சு போயிட்டாங்க..."

"ஆக மொத்தம் நாலு பேர்.... அப்படித்தானே?"

"ஆ... ஆமாம் பணிக்கரே...."

"எங்கில் அவங்கள்ள ஒருத்தர்தான் இப்ப உயிரோடு இருக்கணும். மத்தவங்க யாரும் உயிரோட இல்லை."

- பணிக்கரின் பதில் ஈஸ்வரய்யா நெஞ்சில் குத்து போல் விழுந்தது. வள்ளி நாயகி அதைக் கேட்டு பெரும் குரல் எடுத்து அழத் தொடங்கிவிட்டாள்.

"கரையாண்டா... ஒருவர் உயிரோடன்னு சொன்னேன். அது உங்க மகனா கூட இருக்கலாம் இல்லையா?"



"அதை முதல்ல சொல்லுங்க... அவன் உயிரோட தான் இருக்கானா?" - ஈஸ்வரய்யா பதறினார்.

பணிக்கரிடம் திரும்பவும் சோழிக் குலுக்கலும், வகை பிரித்தலும் நடந்தது. இந்த முறை மிச்சமே இல்லை. ஒன்றுக்கு மூன்று முறையும் மிச்சமில்லை என்றே வந்தது. பணிக்கருக்குள் அவர் மகன் குமார் இறந்துவிட்டதாகவே ஊர்ஜிதமானது. ஆனால் அதைச் சொன்னால் வள்ளிநாயகி மயங்கி விழுந்து அவளுக்கும் பெரும் பாதிப்பு ஏற்படலாம் என்பதை யோசித்தவர்

"மன்னிக்கணும் ஈஸ்வரய்யா... அந்த கேள்விக்கு பதிலே தெளிவா வரலை. இப்படி ஒரு பதில் வந்தா எங்களோட கணிப்புக்கு சிக்காத ஒரு அருள் சார்ந்த இடத்துல உங்க மகனும் அந்த பிள்ளையும் போயிருக்கணும்..."

"ஆமாம் சாமி... மகேந்திரகிரி மலை மேல மனுஷங்க போகறதுக்கு அச்சப்பட்ற பகுதிக்கு அவங்க போனதாதான் கேள்விப் பட்டோம்..."

"அது தவசிகளோட சாம்ராஜ்யம். அவங்க யாராவது உதவி செய்தா தான் உங்களுக்கு உண்மை நிலையே தெரிய முடியும். இனி இந்த விஷயத்துல பிரசன்னம் பாக்கறது சரியில்லை. உடனடியாக அந்த மகேந்திரகிரிக்கு உரிய பிரதான தெய்வமான இந்திர லிங்கத்துக்கு வழிபாடு செய்யுங்க.

கிருஷ்ண பணிக்கர் ஈஸ்வரய்யாவிடம் இந்திர லிங்கத்துக்கு பூஜை செய்யச் சொன்ன கையோடு அவ்வளவுதான் பிரசன்னம் என்பது போல சோழிகளை அள்ளி ஓலைப் பெட்டியில் போட்டார். பலகையை நிமிர்த்தி வைத்து விட்டு மளமளவென்று சோழிப்

# 4

'மகேந்திரகிரி மலை தன்னகத்தே பல புதிர்களை உடையது. இந்த மலைக்கும் அனுமனுக்கும் பெரும் தொடர்பு உண்டு. இங்கிருந்துதான் அவன் விசுவரூபமெடுத்து நின்றான். பின் இலங்கை நோக்கியும் பறந்து செல்லத் தொடங்கினான். மகேந்திரகிரி மலை உச்சியில் இருந்து பார்த்தால் இலங்கை நகரம் தெரியும். குறிப்பாக ஒரே நேர் கோட்டில் அங்குள்ள திரிகோண மலையும் தெரியும். எனவேதான் இங்கே இந்திய அரசு வானியல் ஆராய்ச்சிக்கு வழி கோலும் விதமாகவும், ஏவுகணைகளை செலுத்தவும் தனது ஆய்வுக் கூடத்தை இந்த மலையின் கீழே ஒரு பாகத்தில் அமைத் துள்ளது. இங்கிருந்து கடல் பரப்பை நன்றாக கண்காணிக்கலாம்.

இந்த மலைக்கு மேல் ஒரு அணைக்கட்டும் கட்டப்பட்டு பல ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறுகின்றன. இந்த மலை மேல் மலை வாசிகளே கூட குறிப்பிட்ட தூரம் வரை தான் செல்கின்றனர். அபாயமான பகுதி என்றும், தன் நினைவு தவறி விடும் பகுதி என்றும், தேவர்கள் நடமாடும் பகுதி என்றும் இந்த மலை மேல் பல பகுதிகள் இருப்பதாக பேசிக் கொள்கிறார்கள்.

யோகிகளுக்கு இந்த மலை மிக ஏற்ற இடம்.

இதன் தட்ப வெப்ப சூழல்தான் முக்கிய காரணம்!



பாலாவும் இளங்கோவும் சாப்பிட்டு முடித்து விட்டு ஒரு பதினைந்து நிமிடம்கூட ஓய்வெடுக்கவில்லை. பாலாவே இளங்கோவை பார்த்து "புறப்படு பாலா... இன்னிக்கு நாம நம்ம தேடலைத் தொடங்குவோம்..." என்றான். இளங்கோவின் அப்பா சுந்தரலிங்கமும், அம்மா கோமதியும் இருவரையும் சற்று பயத்தோடு பார்த்தனர்.

"அம்மாவும் அப்பாவும் நமக்கும் ஏதாவது ஆயிட்டா என்ன பண்றதுன்னு பயப்பட்றாங்க பார்..."

"ஆமாம் தம்பி... அதுலயும் நீங்க இந்த ஊருக்கு புதுசு வேற. ஏதோ ஒரு வேகத்துல செயல்பட்டு உங்களுக்கு எதுவும் ஆயிடக் கூடாது பாருங்க..."

"அதெல்லாம் ஒண்ணும் ஆகாதுங்க... நானும் இளங்கோவும் வெறும் வேகத்தோடு மட்டும் இந்த விஷயத்துல இறங்கப் போறதில்ல. புலிவேட்டைக்கு போறவன் துப்பாக்கியோட போகணும், மீன் பிடிக்க போறவன் வலையோட போகணும், அப்படித்தான் நாங்களும் ஒரு சரியான ஆயுதத்தோடயும் திட்டம் போட்டும் போகப் போறேன்."

நான் ஒரு மர்மக் கதைப் பிரியன். நூத்துக் கணக்கான மர்ம நாவல்களையும் படிச்சிருக்கேன். அதுல போலீஸ்காரங்களும், சி.ஐ. டிங்களும் எப்படி எல்லாம் புத்திசாலித்தனமா நடந்துகிட்டு இருக்காங்கன்னும் பாத்துருக்கேன். இப்ப நானே துப்புதுலக்க ஒரு சந்தர்ப்பம் வந்துருக்கு..." - உற்சாகமாக பேசினான் பாலா.

"தம்பி நீங்க பேசறத கேட்க நல்லா இருக்கு. ஆனா மர்மக் கதைல வெட்டு குத்து கொலை கொள்ளை இதுதான் இருக்கும். ஆனா இங்க அந்த மாதிரி விசயங்க கிடையாது. இது சாமி சமாச்சாரம்..."

“சாமி சமாச்சாரத்துல தாங்க ஆசாமிங்க விளையாட்றாங்க... சாமி பேரால தப்பு பண்ண பல ஆசாமிங்க கம்பி எண்ணிகிட்டு இருக்கறத தான் பாக்கறோமே.”

“தப்பு தம்பி... நீங்க எடுத்த உடனேயே ரொம்ப தவறா புரிஞ்சிகிட்டீங்க. இங்க நான் சாமி சமாசாரம்னு சொன்னது ரொம்ப பெரிய விஷயம். மகேந்திரகிரி மலை ஒரு குட்டி கைலாசம். சித்தர் சாமிங்க நடமாட்ற இடம். அங்க தப்பு பண்றவங்களுக்கெல்லாம் இடம் கிடையாது. அந்த மலை தூக்கி எறிஞ்சிடும். புரிஞ்சிக்குங்க.”

சுந்தரலிங்கம் பயத்தோடும் அழுத்தமாகவும் பேசினாலும் அது பாலாவை பெரிதாக பாதிக்கவில்லை. அந்தக் காலத்து மனிதர்கள் தங்கள் நம்பிக்கை தளத்தில் நின்று தான் பேசுவார்கள். அவ்வளவு சுலபத்தில் ஆன்மிக விஷயங்களில் தவறுகளை ஒப்புக் கொள்ளவோ அதில் மாற்றங்களை ஏற்கவோ முன்வரமாட்டார்கள் என்று தனக்குள் சொல்லிக் கொண்டவன் அதற்கு மேல் அவரிடம் விவாதம் செய்யாமல் “சரிங்க நான் கவனமா பாத்து நடந்துக்கறேன்” என்று கூறிவிட்டு இளங்கோவை இழுத்துக் கொண்டு தெருவுக்கு வந்தான்.

பலர் அவர்கள் இரண்டு பேரையும் வெறித்துப் பார்த்தனர்.

“பாலா அப்பாகிட்ட பெருசா பேசிட்டே... உன் திட்டம் என்ன. அதைச் சொல்.”

“முதல்ல போலீஸ் ஸ்டேஷனுக்கு போவோம். அங்க இன்ஸ்பெக்டர் கிட்ட நம்ம கேள்விகளை கேட்போம்.”

“அங்க நாம கேட்க என்ன இருக்கு? நாம எதை கேட்டாலும் தேடிகிட்டு இருக்கோம். ஆள் கிடைச்சா சொல்லி விட்றோம்னு சொல்லப் போறாங்க.”



“அது நாம எப்படி கேக்கப் போறோம்கறத பொறுத்து...”

“நீ பேசறதே புரியலைடா பாலா...”

“பேசாம வா... போலீஸ் ஸ்டேஷன் எங்க இருக்கு?”

“இரு டூவீலரை எடுத்துக்கிட்டு வரேன்” - அதுலயே போவோம். இளங்கோ திரும்பிச் சென்று வீட்டு முன் அகத்தி மரத்தடியில் நிறுத்தப்பட்டிருந்த எம்.80ஐ எடுத்து வந்தான். பாலா ஏறிக்கொள்ள அது ஸ்டேஷன் நோக்கி செல்லத் தொடங்கியது.

◆◆◆

முல்லைப்புதூர் விலக்கு நோக்கி செல்லும் அந்த மண் பாதை மேல் கிருஷ்ண பணிக்கரின் கார் பிரேக்டவுனாகி நின்று விட்டிருந்தது.

உள்ளே உளைச்சலோடு உட்கார்ந்திருந்தார் பணிக்கர். அப்போது எம்.80ஐ இல் பாலாவும் இளங்கோவும் அந்த காரை கடந்து செல்லத் தொடங்கினர். டிரைவர் அவர்களைப் பார்த்து கை தட்டி நிறுத்தி அருகில் அழைத்தான்.

“என்னய்யா?”

“வண்டில பிரச்சினை. சரி பண்ணிட்டேன். ஆனா செல்ஃப் எடுக்க மாட்டேங்குது. கொஞ்சம் ரெண்டு பேருமா தள்ளி விட முடியுமா?”

“அதுக்கென்ன...” என்றபடியே தங்கள் வண்டியை ஓரம் கட்டிவிட்டு காரைத் தள்ளிவிட இருவரும் வந்தனர்.

"ஆமா வண்டில யாரு?" - இளங்கோ டிரைவரிடம் கேட்க டிரைவரும் கிசுகிசு குரலில்.

"கலியக்காவிளை பணிக்கர்" என்றார்.

"பணிக்கரா... இங்க எங்க அவர்?"

"பிரசிடென்டய்யா மவன் காணாம போய்ட்டான்ல அதான் பிரசன்னம் பாக்க வந்துருக்காரு..."

"பாத்தாச்சா?"

"உம்..."

டிரைவர் சொன்ன நொடி இளங்கோ பணிக்கர் அமர்ந்திருந்த பின்கதவு அருகே சென்று இறங்கியிருந்த கண்ணாடி வழியாக அவரைப் பார்த்து "வணக்கம் பணிக்கரே" - என்றான்.

"உம்... உம்..." என்றவர் வாயில் வெற்றிலை

"பணிக்கரே நீங்க பிரசன்னம் பாக்க வந்ததா கேள்விப்பட்டோம் - காணாம போனது பிரசிடெண்ட் மகன் மட்டுமில்ல என் தம்பியும் தான்..."

- அவன் சொன்ன மறுநொடி பணிக்கர் முகத்தில் ஒரு பரபரப்பு...

"பிரசன்னத்துல என்ன வந்துச்சுன்னு நான் தெரிஞ்சிக்கலாமா?" என்று கேட்டான்.

பணிக்கர் வேகமாக காரை விட்டு இறங்கி சாலை ஓரமாக செடி கொடிப் புதரில் வெற்றிலையை உமிழ்ந்து விட்டு துண்டாலே வாயையும் துடைத்துக் கொண்டார். அங்கிருந்தபடியே எதிரில் தெரிந்த மலைக்கூட்டத்தையும் பார்த்தார்.



பின் "உன் தம்பி உயிரோடதான் இருக்கான்... இன்னும் ஒன்பது நாள் தான் அதுவும்! அதுக்குள்ள அவனைப் பாக்க விதி இருந்தா பாரு... அப்படிப் பாத்துட்டா நீ தான் குபேரன்." என்றார்.

"என்னென்னமோ சொல்றீங்களே பணிக்கரே... அவன் இப்ப எங்க இருக்கான்? அதை சொல்ல முடியுமா?"

"அதெல்லாம் தெரியாது... எல்லாம் பேராசையால வந்த வினை. அவ்வளவுதான் சொல்வேன்..." என்றார்.

டிரைவர் அதற்குள் சீட்டில் ஏறி அமர்ந்து கொண்டு ஹாரன் செய்து காரை தள்ளிவிடச் சொன்னான்.

"இருய்யா முக்கியமான விஷயம் பேசும்போது ஹாரன் அடிச்சுகிட்டு..." - என்று சீறினான் இளங்கோ. பாலாவிடம் வேறு ஒரு கோணம்.

"ஐயா ஒன்பது நாள்தான் உயிரோட இருப்பான்னு சொன்னீங்களே. அது எதை வெச்சு...?"

"அவன் விதியை வெச்சு சொன்னேன் தம்பி..."

"அதை சொல்ல முடிஞ்ச உங்களால அவன் இருக்கிற இடத்தை சொல்ல முடியாதா?"

"முடியாது... பிரசன்னம்கறது ஒரு கணக்கு. அது வழியை தான் காட்டும். கூட்டிக்கொண்டு போய்கிட்ட விட அது நம்ம வீட்டு வேலைகாரன் இல்லை..."

"சரிங்க... பிரசிடென்டய்யா மகன் எப்படி இருக்கான்னு சொல்லலியே நீங்க...?"

"இருக்கறவனை பத்திதான் பேச முடியும்...."

"அப்ப குமார் உயிரோட இல்லையா?"

"தம்பி உன் கிட்ட நான் இவ்வளவு பேசினதே கூட இந்த கார் இங்க நின்னதால தான்... நீ வரணும் நான் சொல்லணும்கறது விதி. அதுவும் முடிஞ்சு போச்சு. இந்த காரை இனி நீ தள்ளக் கூட வேண்டாம். அதுவே ஸ்டார்ட் ஆயிடும் பார்...." என்றவர் டிரைவரை பார்க்க அவனும் ஸ்டார்ட் செய்ய சற்று திணறிவிட்டு கார் ஸ்டார்ட் ஆகிவிட்டது.

அவரும் ஏறிக் கொள்ள புறப்பட்டு விட்டது!

பாலா இளங்கோ இருவரிடமும் ஒருவித மலைப்பு.

"பாலா... நீ என்னடா நினைக்கறே?"

"அந்தாள் ஏதோ உளறிட்டு போறாண்டா..."

"பணிக்க பிரசன்னத்தை அப்படி சொல்லாதே. அது தெய்வ வாக்கு..."

"அட போடா.... இந்த மாதிரி ஜோசியம் நான் கூட சொல்வேன். இப்படி செத்துட்டவங்க உயிரோட இருக்கிறவங்களை பத்தி உக்காந்த இடத்துல சொல்ல முடியும்னா நம்ம எல்லைப்புரத்துல எவ்வளவு இராணுவ வீரர்கள் காணாமலும் எதிரிகளால் கொல்லப்பட்டும் இருக்காங்க தெரியுமா? இந்த பணிக்கர் அங்க போய் யார் யார் உயிரோட இருக்காரு - இல்லைன்னு சொல்லலாமே...?"

"நாத்திகம் பேசறியா?"

"அடப்பாவி.... நான் நியாயத்தை சொன்னேண்டா. நீ வண்டிய எடு...."

- பாலாவின் பதிலோடு அந்த எம்.80 உறுமியபடி ஓட ஆரம்பித்தது.

◆◆◆



போலீஸ் ஸ்டேஷன்!

முகப்பில் துருப்பிடித்து ஓட்டை விழுந்துவிட்ட பழைய சைக்கிள்கள், டூவீலர் மோட்டார் பைக்குள் சில கிடக்க, அவற்றை கடந்து உள் நுழைந்தபோது இன்ஸ்பெக்டர் சீட்டில் இல்லை. ஆனால் ஏட்டைய்யா இருந்தார்.

"வணக்கம் சார்..."

"யாருப்பா நீங்க?"

"முல்லைபுதூர் விலக்கு சுந்தரலிங்கம் சாரோட மூத்த மகன் இளங்கோங்க நான்..."

"ஓ... அந்த காணாம போயிட்ட பையனோட அண்ணனா...?"

"ஆமாம் சார்."

"நீதான் சென்னைல வேலை பாக்கறியா?"

"ஆமாங்க..."

"இது யாரு?"

"என் நண்பன். பேர் பாலா - கூட வேலை பாக்கறாங்க..."

"சரி வந்த விசயத்த சொல்லு..."

"தம்பி விசயமா தாங்க..."

"என்னத்த தம்பி சொல்ல... மலைல முடிஞ்ச தூரம் போய் தேடிப் பாத்துட்டோம். மலை ஜாதி மக்கள் கிட்டயும் விசாரிச்சுட்டோம். யாரும் எந்த தகவலும் சொல்ல மாட்டேங்குறாங்க.

டிபார்ட்மெண்ட்டுல ஸ்பெஷல் பர்மிஷன் வாங்கி ஒரு நூறு பேர் மலை மேல ஏறி தேடினா ஒரு வேளை தெரிய வரலாம். ஆனா அந்த மலைல ஒரு பாகம் சென்ட்ரல் கவர்மெண்ட் கண்ட்ரோல்ல இருக்குது. ரெஸ்ட்ரிக்டட் ஏரியா வேற. போதாக் குறைக்கு சாமிய சொல்லி அங்க போகாதே இங்க போகாதேங்கற கதைங்க வேற. நாங்க என்ன செய்ய?" - ஏட்டய்யா புலம்புகிறாரா இல்லை தகவல் கூறுகிறாரா என்றே தெரியவில்லை.

"அப்ப தம்பி மேலதான் எங்கையோ இருக்கானா சார்..."

"மலைக்கு மேல போனதை பாத்த ஆளுங்க இருக் காங்க. ஆனா எங்க போனாங்கன்னு தெரியலை. சாமியாருங்க யாரையாவது பிடிச்சு விசாரிச்சா தகவல் தெரியவரலாம். ஆனா சாமியாருங்க வாயத்திறந்து பேசணும். அவங்களை மிரட்டவோ கேள்வி கேட்கவோ முடியாது. என்னத்த செய்ய?" - ஏட்டய்யா எழுதிக் கொண்டே பேசினார். லாக்கப்பில் விலுவிலுவென்று மார்பில் அவ்வளவு எலும்பும் தெரிய ஒருவன் இருந் தான். அவன் உள் இருந்தபடியே கத்தினான்.

"ஏட்டய்யா எனக்கு ஒரு சாமியை தெரியும். அந்த சாமி என்கிட்டதான் கஞ்சா வாங்கி குடிக்கும்..." - என்று...

பாலாவுக்கு அந்த பதிலே பொறி தட்டினாற் போல இருந்தது. லாக்கப்பை நெருங்கி அந்த ஒல்லி பச்சானை வெறித்து பார்க்கத் தொடங்கினான் பாலா.

"என்ன அப்படி பாக்கறே... கதவை திறந்து விடச் சொல்லு. மலைல உன் தம்பியும் அந்த இன் னொரு பயலும் எந்த பக்கம் போனாங்க, எதுக்கு



போனாங்கன்னு நான் உனக்கு காட்டித்தரேன்" - என்றான் அவன்.

பாலாவுக்கு பழம் நழுவி பாலில் விழுந்தது போல் இருந்தது.

"உனக்கு எப்படி தெரியும்?"

"அது எதுக்கு உனக்கு... கதவை திறந்துவிடச் சொல்லு" - பாலா வேகமாக திரும்பி வந்து ஏட்டு முன் நின்று

"சார் அவன் சொன்னதை கேட்டீங்களா?" என்றான்.

"அவன் கிடக்கிறான் நாயி... போதைக்கார பரதேசி. அவன் வெளிய போகணும்கறதுக்காக என்ன வேணா புளுகுவான்."

"அப்ப அவன் பேசறதெல்லாம் பொய்யா...?"

"பின்ன...? உண்மையா இருந்தா இவனையே தூண்டில் புழுவா பயன்படுத்தி இன்னேரம் அந்த மலைல தொலைஞ்சு போன உங்க தம்பியை கண்டு பிடிச்சிருக்க மாட்டோம்."

- ஏட்டு நிமிர்ந்து கூட பார்க்காமல் எழுதிக் கொண்டே பேசினார். ஏதோ ஒரு எஃப் ஐ ஆரைத்தான் போட்டபடி இருந்தார். அவரது தமிழ், ஆங்கிலம் அவ்வளவிலும் பார்த்த உடனேயே தெரியும்படியாக அவ்வளவு பிழை. ஜேம்ஸ் என்கிற பெயரை சேம்சு என்றும், மறுநாள் என்பதை மருநால் என்றும் எழுதிக் கொண்டிருந்தார். மிகுந்த படிப்பறிவு கொண்ட பாலாவுக்கு அதைப் பார்க்கப் பார்க்க காந்தியது. ஏட்டு பேசியதைக் கேட்டு அந்த ஒல்லிபச்சான் திரும்பவும் கத்தத் தொடங்கினான்.

"சார் நான் போதைக்காரன்தான்... ஆனா நான் பொய் எல்லாம் சொல்ல மாட்டேன். போதைக் காரங்கதான் உண்மை பேசுவாங்க" - என்று சத்தம் போட்டு கத்தினான்.

பாலா திரும்பவும் அவனருகில் சென்றான்.

"உன் பேர் என்ன?"

"உளிபாண்டி..."

"உளிப்பாண்டியா... இப்படி எல்லாம் கூடவா பேர் இருக்கும்?"

"உளிப்பாண்டிக்கென்ன... அது நல்ல பேர் இல்லையா உனக்கு? உளி மாதிரி கூரா ஸ்ட்ராங்கா இருக்கணும்னுதான் உளிப்பாண்டின்னு எங்க ஊர்ல பேர் வெச்சாங்க."

"வாய் மூட்றா வெண்ண... பெரிய பெத்த பேர் பாரு... ஏட்டு உட்கார்ந்த இடத்தில் இருந்தே கத்தினார்.

"சார்... நானா உருப்படாதவன் அன்னிக்கு மட்டும் சாமிக்கு நான் கஞ்சா கொடுத்துருந்தா அவர் எனக்கு அந்த கஞ்சாவோட எடைக்கு தங்கமே தர்றதா சொல்லியிருந்தார். நீங்க இடைவழில என்னை பிடிச்சதால எனக்கு கிடைக்க வேண்டிய தங்கம் போச்சு. அதுமட்டும் கிடைச்சிருந்தா இப்படியா புலம்பி கிட்டிருப்பேன். இன்னேரம் அந்த தங்கத்தை வெச்சு செகண்ட் ஹேண்டுல ஒரு லாரியை வாங்கி ஓனர் ஆகியிருப்பேன் சார்..." என்ற அவன் பேச்சுக்குள் கஞ்சாவுக்கு பதில் தங்கம், அதுவும் சாமியாரிடம் என்பது மிகவே புதிய விஷயம்.

பாலாவுக்குள் மின்சாரம் பாய ஆரம்பித்து விட்டது.



"ஏய்... சாமியாருங்க அருளாசிதான் தருவாங்க, நீ என்ன தங்கம் தருவாங்கன்னு சொல்றே?"

"கஞ்சா சித்தர் யானையோட கஜமுத்து, புலியோட கொக்கிப்பல்லு, தேவாங்கோட முதுகெலும்புன்னு விசேஷமான எல்லாத்தையும் தருவார். அவருக்கு தங்கமெல்லாம் சாதாரணம்."

"அவர் எங்க இருக்கார்?"

"மலைல தான்..."

"மலைன்னா எந்த இடத்துல?"

"நீ என்ன என்னை உள்ள வெச்சே விஷயத்த வாங்கப் பாக்கறே. என்னை வெளிய எடு. நான் உன்னை கஞ்சா சித்தர் கிட்ட கூட்டிகிட்டு போறேன். அவர்தான் உன் தம்பிக்கு பாதை காட்னவர்..."

பாலாவிடம் அவன் அப்படி சொல்லும் போது அதில் இன்ஸ்பெக்டர் ருத்ராவின் ஜீப் வாசலில் வந்து நிற்க அதில் இருந்து இன்ஸ்பெக்டர் ருத்ராவும் இறங்கி உள்ளே வந்தார்.

இன்ஸ்பெக்டரை பார்த்த பாலா முகத்தில் ஒருவித இன்ப அதிர்ச்சி!

# 5

மகேந்திரகிரி மலையின் இன்னொரு சிறப்பு அது அட்சரேகை, தீர்க்க ரேகை எனப்படும் ரேகைகளின் போக்கை துல்லியமாக கண்டறிய உதவுவதாகவும் இருக்கிறது. அதே போல் இமயத்தின் உச்சிக்கும், இதன் உச்சிக்கும் ஒரு

தொடர்பை ஒரு கோடு கொண்டு உரு வாக்கும்போது இந்திய நாட்டின் கிழக்கு மேற்கு பாகங்களை அது சம அளவோடு பிரிப்பதாகவும் உள்ளது...! என்றும் சிலர் கூறுகின்றனர். இவை எல்லாம் பெரும் ஆய்வுக்கு உரியவை கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் குமரிக்கு அப்பால் பெரும் நிலப்பரப்பும் நீருள்ள நதியோட்டங்களும் இருந்து அவைகளை கடல் கொண்டு விட்டது. அதன்பின் காலப் போக்கில் பூமிக்கு கீழான தளங்களின் நுகர்ச்சி யில் மகேந்திரகிரி மலைச் சாரல் பெரும் மாற்றங்களுக்கும் ஆளானதாகவும் ஒரு கருத்து உள்ளது. அதேசமயம் பெரும் விசையோடு வலம் வரும் தென் மேற்கு பருவக்காற்றும், வடகிழக்கு பருவக்காற்றும் இந்த மலையோடு முட்டி மோதி பல இயற்கை விளைவுகளுக்கு காரணமாக இருக்கிறது. எனவே இங்கு எங்கும் விளையாத மூலிகைகளில் இருந்து கனிம வளங்களுக்கும் வாய்ப்பு மிகுதி என் போரும் உண்டு.

இன்ஸ்பெக்டரை பார்த்த பாலா முகத்தில் ஒரே பூரிப்பு... இன்ஸ்பெக்டரும் பாலாவை பார்த்து "ஏய் பாலமுருகா..." என்று அவன் முழுப் பெயரை கூறவும் கூட இருந்த இளங்கோவும் லேசாக அதிர்ந்தான்.

"நீ எங்கடா இங்கே?"

"அது இருக்கட்டும் நீ இன்ஸ்பெக்டராவா இருக்கே?"

"இது ஒண்ணும் ட்ராமா டிரெஸ் இல்லடா... முறையா இண்டர்வியூல பாஸ் பண்ணி ட்ரெய்னிங் எடுத்து போலீஸ்ல ஜாய்ன் பண்ணி படிப்படியா முன் னேறி நான் இப்ப இன்ஸ்பெக்டர் ஆகியிருக்கேன்."

"ருத்ராபதி.... நிஜமா எனக்கு இப்ப எவ்வளவு சந்தோசமா பிரமிப்பா இருக்கு தெரியுமா? ஏய் இளங்கோ இந்த ருத்ராபதி என் கிளாஸ்மேட்... ஸ்கூல்ல அஞ்சு வருஷம் இரண்டு பேரும் ஒண்ணா கட்டி உருண்டுருக்கோம்."

பேச்சோடு பாலா ருத்ராவை இளங்கோவுக்கும் அறிமுகப்படுத்தினான்.

அதை எல்லாம் பார்த்த ஏட்டும் அவர்களிடம் சற்று அலட்சியமாக நடந்து கொண்டதற்கு வருந்துவது போல் தெரிந்தது.

இளங்கோவுக்கும் ஏதோ ஒரு நல்லது நடக்கத் தொடங்கிவிட்டதுபோல் தோன்றியது. ருத்ராபதியோடு கைகுலுக்கினான்.

"அப்புறம்... நீ எங்க இங்க?"

"சொல்றேன். அதுக்கு முந்தி உட்கார்ந்துக் கட்டுமா?" - பாலா கேட்ட தொனியில் இன்றைய போலீஸ் ஸ்டேஷன்களின் அணுகுமுறைக் கோளாறு ஒளிர்ந்திருந்தது.

"உட்காருடா பாலா... இது என்ன கேள்வி - இது உன்னோட போலீஸ் ஸ்டேஷன்..."

"என்னோடது மட்டுமில்ல.....நம்ம எல்லாருக்கும் தான் இது சொந்தம்" - என்றபடியே உட்கார்ந் தான் இளங்கோவையும் உட்காரச் சொல்லி வந்த விஷயத்தையும் ஆதியில் இருந்து அந்தம் சொல்லி முடித்தான்.

"ஓ.... அந்த காணாம போன மூர்த்தியோட அண்ணன் இளங்கோ நீங்க தானா?"

"ஆமாம் சார்.....அப்பா அம்மா வீட்ல தவிச்சுகிட்டு இருக்காங்க சார்...... எப்படியாவது கண்டுபிடிக்கணும் சார்."

"நாங்க எங்க கடமையை செய்துகிட்டுதான் இருக்கோம் மிஸ்டர் இளங்கோ. ஆமா உங்க தம்பிக்கு ஏன் இந்த வேண்டாத வேலை. எதுக்காக இப்ப அந்த மலைக்கு போகணும். அந்த மலைதான் ஆபத்தான துன்னு எல்லாருக்கும் தெரியும்தானே?"

"எனக்கு தெரியல சார்.... தம்பி தானா போனானா இல்லை யாராவது தூண்டிவிட்டு போனானான்னு தெரியல. அவன் கிடைச்சாதான் இதுக்கெல்லாம் விடை கிடைக்கும்." - அவர்கள் பேசிக் கொள்வது உளிப்பாண்டி காதிலும் விழுந்து உளிப்பாண்டி உள்ளிருந்தே கத்தினான்.

"சார் எனக்கு தெரியும் சார்.... எனக்கு தெரியும். மலை மேல தங்க மண் திட்டை தேடித்தான் அந்த மூர்த்தியும் குமாரும் போனாங்க. ஆனா அங்கல்லாம் போக முடியாது. அங்க சித்தர் சாமிங்களால மட்டும் தான் போக முடியும்."

- உளிப்பாண்டியின் சப்தம் ருத்ராவை எரிச்சல் அடைய வைத்தது.

"அவன் வாய்லயே நாலு போடுய்யா... இங்க நாங்க பேசிகிட்டிருக்கும்போது அங்க என்ன சத்தம்.... ஸ்டேஷன்னுகூட பாக்காம அவன் உளறிகிட்டிருக்கான் பாரு..." - என்றார்.

ஆனால் பாலா வேறு மாதிரி யோசித்தான்.



"ருத்ரா.... எனக்கென்னவோ இந்த உளிப்பாண்டி உளற்ற மாதிரி தெரியல. கொஞ்சம் அவனை பேசவிட்டா நிச்சயம் இந்த கேஸ்ல சில க்ளூ கிடைக்கும்ன்னுதான் எனக்கு தோணுது."

"இல்ல பாலா..... இவன் சரியான டுபாக்கூர் கஞ்சா வியாபாரி. புளுகறதுல மன்னன்.... மடில லட்ச ரூபாய் வெச்சிகிட்டு ரொம்ப சீரியஸா பிச்சை எடுப்பான். நெஞ் பாக்கற யாரும் சந்தேகப்பட்டுடக் கூடாதாம். நெஞ் சழுத்தம் பிடிச்சவனும்கூட...... ஒரு ராத்திரி முழுக்க ஒரு ஆக்சிடென்ட் ஆன டெட்பாடி கிட்டயே படுத்திருந் திருக்கான்..... எப்படிடா உன்னால படுக்க முடிஞ்சதுன்னு கேட்டா அங்கதான் படுக்க இடம் இருந்துச்சுங்கறான். இவன் லேசுப்பட்டவன் இல்ல...."

- ருத்ரா சொல்லி முடித்த நொடி திரும்பவும் உளிப்பாண்டியிடம் இருந்து பதில் வர ஆரம்பித்தது.

"சார்..... நாமெல்லாம்கூட உயிருள்ள பிணங்கள் தான் சார். ஒவ்வொரு நாளும் செத்து செத்துதான் பிழைக்கிறோம். சின்ன பிள்ளையா இருந்த நம்ம உடம்பும் பேச்சும் இப்ப எங்க போச்சு? பள்ளிக்கூடம் போகும்போது இருந்த மாதிரியா இப்ப இருக்கறோம்?"

இந்த உடம்பு கூட நாளைக்கு மாறிடும் சார்.

சித்தர் சாமிங்க கூட பழகிப் பழகி எனக்கு பய மெல்லாம் விட்டுப் போச்சு. அதான் கைல காசு இருந் தாலும் அது என் பணம் இல்லேங்கறதால எனக்காக நான் பிச்சை எடுத்தேன்." - அவன் பதில்களுக்குள் சித்த ரகசியங்கள் ஒளிந்திருந்தது. அது பாலாவை இன்னமும் யோசிக்க வைத்தது.

"ருத்ரா.... இவன் இப்ப பேசின பேச்சுல எவ்வளவு அர்த்தம் இருக்குன்னு எனக்குதான் தெரியும்.

"நாள்தோறும் நைந்தே புதிதாய் முளைப்போம்... ஒரு நாளில் முற்றாக மூச்சைத் தொலைப்போம்" கறது கிங்கணிச் சித்தர்ங்கறவரோட பாட்டு வரி.... அவரும் தினம் தினம் சாகறவன்தான் மனுஷன்கறார்... இவனும் அதையேதான் சொல்றான்....."

"சரி இப்ப என்ன பண்ணச் சொல்றே?"

"அவனை கூப்பிட்டு மரியாதையா உட்கார வெச்சு கேள். நிச்சயம் நமக்கு நல்ல பதில் கிடைக்கும்."

"சரி.... யோவ் ஏட்டு - அவனை இங்க கூட்டிகிட்டு வாய்யா..." - ருத்ராவின் கட்டளையை தொடர்ந்து உளிப்பாண்டி எதிரில் வந்து உட்காரு என்று சொல் லாமலே சேரை இழுத்துப் போட்டு அமர்ந்தான். அந்த ஜோரில் ஒரு தம் இருந்தா கொடுக்கறது என்றும் கேட்க, ருத்ரா பாலாவைப் பார்த்தார்.

"பாத்தியா... உட்காந்தான் - தம் கேட்கறான் - அடுத்து டீ ஆர்டர் பண்ணுவான், முட்ட பிரியாணியும் பான்..."

- ருத்ரா சொல்ல கையை உயர்த்தி 'ஸ்டாப் இட்...' என்றவன் "முட்ட பிரியாணி எல்லாம் இப்ப சாப்பிட்றது இல்ல சார்... ஓவர் கேஸ்..... இப்பல்லாம் வெஜிடபுள் பிரியாணி தான்" என்றான்.

அந்த நிலையிலும் பாலாவுக்கு சிரிப்புதான் வந்தது.

"ருத்ரா நீ சும்மா இரு.... நான் கேட்கறேன்....." - என்று அவனை உரசத் தொடங்கினான்.

"உளிப்பாண்டி...... நீ காணாம போன இரண்டு பேரையும் பார்த்ததா சொன்னே. அதுவும் மலைல... அப்ப கஞ்சா சித்தர் வழிகாட்டுனார்னு சொன்னே - அப்படிதானே?"



"ஆமாம்... அதுதான் நடந்துச்சு. அதை அப்படியே சொன்னேன்."

"அப்ப நீ எங்க இருந்தே?"

"கஞ்சா சித்தர் கூடத்தான்..."

"சித்தர்ங்கறே.... அவர் போய் கஞ்சா அடிப்பாரா?"

"பின்ன.... நீங்க அடிச்சு பாருங்க..... அப்படியே ரெக்கையே இல்லாம ஆகாசத்துல மிதக்கலாம்."

"சரி மலை மேல ஏதோ தங்க மண் திட்டை அவங்க தேடி போனதா சொன்னியே. செம்மண் மாதிரியே தங்க மண்ணுன்னு ஒண்ணு இருக்கா என்ன?"

"அட என்ன சார் நீங்க... தங்க மண்ணு இல்ல சார் - தங்கமே அங்க மண்ணா இறைஞ்சு கிடக்குது சார்..."

"இதை நீ எங்கள நம்ப சொல்றியா?"

"அது உங்க இஷ்டம்.... நான் கஞ்சா சித்தர் கிட்ட எனக்கு தங்க மண் கொடுங்க சாமி. நான் லைஃப்ல செட்டில் ஆயிட்றேன்னு சொன்னேன். அவரும் இன்னிக்கு, நாளைக்கின்னி இழுத்தாரு. சாமி நீங்க தருவீங்களா மாட்டீங்களான்னு ஒரு நாள் பெருசா சண்டை போட்டுட்டேன். பாத்தாரு...... உனக்கு நான் தந்தா அப்புறம் நீ கஞ்சா தொழில் பண்ணாம பெரிய ஆளா மாறிடுவே. அப்புறம் நான் கஞ்சாவுக்கு எங்க போகன்னாரு....! எனக்கு கோபம் வந்துடுச்சி... சாமி இவ்வளவு சுயநலம் உங்களுக்கு கூடாது சாமின்னேன். அப்பாலதான் சரி சரி வர்ற பௌர்ணமிக்கு மேல குரங்குப்பாறைகிட்ட வா..... தர்ரேன்னாரு... நானும் ஒரு மூணு கிலோ கஞ்சாவை சாமிக்கு காணிக்கையா கொடுக்க மலைல ஏறும்போது எவன் போட்டு

உட்டான்னு தெரியல. போலீஸ் வந்து அமுக்கி தூக்கிட்டு வந்து லாக்கப்புக்குள்ளயும் போட்டுட்டாங்க..."

"அப்ப மூர்தியும், குமாரும் தங்க மண் திட்ட தேடி தனியா போனாங்கன்னு சொல்லு..."

"அப்பால....? இத்தனைக்கும் சாமி வேணாம்னாரு- நாங்க அந்த இடத்தை கண்டுபிடிச்சே தீருவோம்னு விடாப் பிடியால்ல இரண்டு பேரும் போனாங்க..."

"சரி..... நீ சொல்ற அந்த கஞ்சா சாமியை நாங்க பார்க்க முடியுமா?"

"என்கூட வாங்க... எப்படியும் கண்ணுல படுவாரு.... காட்றேன்."

"உன் கூடன்னா மலைக்கா...?"

"ஆமா ...அங்கதானே சாமி இருக்காரு..... - உளிப்பாண்டி பேசுவதை கூர்மையாக கேட்டபடி இருந்தார் ருத்ரா. பாலா அவரை பார்த்தான்.

"என்ன ருத்ரா சொல்றே?"

"இவனை மலைக்கு கூட்டிகிட்டு போறது பிரச்சினை இல்லை. அங்க இவனுக்கு நம்மை விட நிறைய இடம் தெரியும். போற வழில எஸ்கேப் ஆகி ஒட்றதுக்குதான் இப்படி ஒரு பொய்யை சொல்லிக் கிட்டிருக்கான்...."

"கைல விலங்கோட ஒருத்தருக்கு நாலு பேரோட போவோமே...?"

"நாப்பது பேரோட போனாலும் இவன் தப்பிடு வான். எந்த பாதைல போனா யானை வரும், எங்க தேன் கூடு இருக்கு? எங்க புதை குழி இருக்குன்னு எல்லாமே இந்த நாய்க்கு அத்துபடி.... இவனுக்கு இப்ப



இந்த லாக்அப்பை விட்டு வெளிய போனா போதும். கஞ்சா சித்தர்னு இவன் சொல்றது கட்டுக்கதை. சித்தர் சாமிங்களுக்கு எதுக்கு கஞ்சா. அவங்களுக்கு மலைல கிடைக்காத கஞ்சாவா...?"

- ருத்ரா கேட்டதிலும் ஏராளமான அர்த்தம் இருக்கவே செய்தது. அது அவனுக்கு ரோஷத்தை வரவழைத்துவிட்டது.

"சாரே... கஞ்சா சித்தர் கட்டுக்கதையா? சரி நான் இப்ப சொல்றேன். அடிவாரத்துல ஆண்டிச்சாமின்னு ஒருத்தன் இருக்கான். அவனுக்கு சாமி தங்கம் கொடுத் துருக்காரு. அதுவும் அவன் மகளோட கல்யாணத் துக்காக... போய் அவனை பிடிச்சு நாலு தட்டு தட்டுங்க..... தங்க மண்ணை எடுத்து வந்து காட்டுவான். அப்பால என்னை நம்பறதா வேண்டாமாங்கற முடிவுக்கு வாங்க..." என்றான்.

பாலாவுக்கும் அது சரியான பாய்ண்ட்டாக பட்டது.

"ருத்ரா.... புறப்படு - இப்ப இவன் சொன்னது உண்மையா இருந்தா இவன் சொன்னதெல்லாம் உண்மைன்னு நம்புவோம்....." - என்றான்.

அடுத்த நிமிடம் உளிப்பாண்டி திரும்பவும் லாக்கப்பில். இளங்கோவும் பாலாவும் ருத்ராவுடன் ஜீப்பில் ..... ஜீப்பும் சீற ஆரம்பித்தது.

"ஆமா இங்க உன் வீடு எங்க?"

"பக்கத்துல வள்ளியூர் டவுன்லதான்...."

"கல்யாணமாயிடிச்சா?"

"ஒரு பொண்ணே இருக்குடா.. எல்.கே.ஜி. படிக்கறா... ஆமா உனக்கு..?"

"பொண்ணு பாத்துகிட்டே இருக்காங்க..."

"பாத்துகிட்டே...... இருந்துடப் போறாங்க. டக்குன்னு கூனோ குருடோ ஒருத்தி கழுத்துல தாலிய கட்டிடு..."

- ருத்ராவும் பாலாவும் சகஜமாக பேசியபடி வந்தனர். இளங்கோவால் அப்படி சகஜமாக பேச முடியவில்லை. தங்க மண் திட்டை தன் தம்பி தேடிப் போனான் என்பதையே அவனால் ஜீரணிக்க முடிய வில்லை. அதோடு கிருஷ்ண பணிக்கர் வேறு ஒன்பது நாள் தான் உயிரோடு இருப்பான் என்று சொன்னதும் சேர்ந்து கொண்டது. ஆசை.... பேராசை என்று பணிக்கர் சொன்னது இதைத்தானோ?"

இளங்கோவுக்குள் கேள்விகள் ஓடியது.

ஜீப்பும் புத்தம் புதிய நாற்கரச் சாலையில் மகேந்திர கிரி மலையின் அடிவாரம் நோக்கி ஓடியபடி இருந்தது. அடிவாரத்தில் ஒரு சிறு கிராமம். ஒரு ஐம்பது குடிசைகள் இருக்கலாம். அவ்வளவு பேருக்கும் ஆடுமாடு வளர்ப்பது தான் தொழில்.

போலீஸ் ஜீப் ஊருக்குள் நுழையவும் அவர்கள் சற்று ஆச்சரியப்படத் தொடங்கினார்கள். குறிப்பாக அந்த ஆண்டிச்சாமி என்பவன் பயந்து நடுங்கவே தொடங்கி விட்டான். ஆண்டிச்சாமி நைஸாக நழுவி மலையில் ஏறி மறைந்துவிட முடிவெடுத்தவன் போல அப்படியே தழைய அமர்ந்து இடுப்புயர காட்டுச் செடி களுக்கு நடுவில் புகுந்து மேலே ஏறவும் தொடங்கி விட்டான்.



# 6

தமிழகத்தில் உயரமான மலைகளுக்கு பஞ்சமே யில்லை. அனேகமாக எல்லா மாவட்டங்களிலும் ஏதாவது ஒரு மலை பெயர் சொல்லும்படியாக உள்ளது. இதில் தென்பகுதியில் தான் ஏராளமான மலைகள் உள்ளன. அவைகளில் மேற்கு தொடர்ச்சி மலை வரிசையில் உள்ள சதுரகிரி மற்றும் குற்றால பகுதியில் உள்ள பொதிகை இவற்றோடு குமரி மாவட்டத்தின் விளிம்பிலுள்ள மகேந்திரகிரிக்கும் தெய்வீக சிறப்புகள் நிறைய உள்ளன.

பொதிகை, சதுரகிரி இரண்டிலும் இல்லாத விசேஷ சிறப்புகள் மகேந்திரகிரியில் உள்ளது. இந்த மலைக்குள் எல்லோரும் தங்கள் இஷ்டம் போல சென்று வர முடியாது என்பதுதான் அது. ஒரு குறிப்பிட்ட தூரம் வரைதான் மனிதர்கள் செல்ல முடியும். அதற்கு மேலேன பாகத்தில் உண்மையில் என்னதான் உள்ளது என்பது ஒரு புரியாத புதிர்.

ஆன போதிலும் பல ஞானிகள் அங்கு செல்ல முடியாத அல்லது செல்லக்கூடாத பாகத்துக்குச் சென்று அங்கே தவம் செய்துள்ளனர். அந்த வகையில் சமீபத்தில் அந்த மலையில் ஒரு பெருந்தவம் புரிந்தவர்தான் இன்றும் நம்மோடு உள்ள சிவசங்கர் பாபா 'அவர்கள்.'

ஆண்டிச்சாமி நழுவிச் செல்வதை இளங்கோ பார்த்துவிட்டான். ருத்ராவிடம் வேகமாக நெருங்கி காட்டுச் செடிகள் அடர்வாக வளர்ந்திருக்கும்

பக்கத்தையும் காண்பித்தான்! அந்த பாகம் காற்றில் அசைவதற்கும் உள்ளே ஒருவர் இருந்து அதன் மேல் படும்போது அசைவதற்கும் உள்ள வித்யாசத்தை ருத்ராவும் துல்லியமாக உணர்ந்தார். அப்படியே 'ஆண்டிச்சாமி எங்கே?' என்று எதிரில் உள்ளவர்களிடம் கேட்டதற்கு அவர்கள் தங்களுக்கு தெரியாது' என்றனர்.

ருத்ரா மின்னலைப் போல செயல்படத் தொடங்கினார்.

ஒரே ஓட்டம்! அந்த புதர் பாகத்துக்குள் புகுந்தார்.

அடுத்த ஐந்தாவது நிமிடம் ஆண்டிச்சாமியோடு தான் வெளியில் வந்தார். அவனும் திருட்டுமுழி முழித் தான்.

அவன் குடிசை வாசலுக்கே அவனை இழுத்து வந்தார். அக்கம் பக்கத்தினர் மளமளவென்று சூழ்ந்து கொண்டுவிட்டனர். எல்லோர் கண்களிலும் ஒருவித பீதி.

அவர்களில் ஆண்கள் எவரும் சட்டையணிந்திருக்க வில்லை. பெண்களிடம் தவிக்கையில்லை. பிள்ளை களிடம் ஆடை என்ற ஒன்றே இல்லை. ஆண்டிச்சாமி யின் மனைவியும், திருமணத்துக்கு தயாராக இருக்கும் மகளும் பதைப்போடு ருத்ரா அருகில் வந்து 'இவர் என்ன குத்தம் பண்ணாருன்னு இப்படி புடிச்சி கொண்டு வந்து நிறுத்தியிருக்கீங்க?' - என்று கேட்கவும் செய்தனர்.

"எந்த குத்தமும் செய்யாதவன் எதுக்கு ஓட்றான்?"

"திடுதிப்னு போலீஸ்காரங்க வந்தா ஓடாம என்ன செய்வாங்க? போனவாரம் இப்படித்தான் ஒரு ஜீப்ல வந்த நாலு போலீஸ்காரங்க எங்க ஆளுங்க ஒரு நாலு பேரை பிடிச்சு கஞ்சா வெச்சிருந்ததா இழுத்துகிட்டு



போய்ட்டாங்க. ஏழைங்கன்னா என்ன வேணா செய்யலாமா?"

- கூட்டத்தில் ஒரு வாலிப வயதுக்காரன் எகிறி னான். ஆனால் ஆண்டிச்சாமி மௌனமாகவே இருந்தான்.

"ஏய்யா நீ வாயை திறந்து எதுவும் பேச மாட்டியா?"

"என்னத்த பேச?"

"எதுக்கு ஒளிஞ்சு தப்பிக்க பார்த்தே?"

"நான் ஒண்ணும் தப்பிக்கல்லாம் முயற்சி செய்யல..."

"அப்ப அந்த புதருக்குள்ள என்ன பண்ணி கிட்டிருந்தே?"

"அது... அது.... ஜலவாதி வந்துச்சு.... அதான் ஒதுங்கு னேன்."

"என்ன புளுகறியா....? நான் யார் தெரியும்ல?"

"நான் உள்ளதைத்தான் சார் சொல்றேன்?"

"சரி உன் குடிசையை இப்ப நான் சோதனை போட்டுக்கவா?"

"என் குடிசைல எதுவும் இல்லை சார்..."

"அதை சோதனை செய்து பாத்துட்டா தெரிஞ் சிட்டு போவுது."

"என் பொண்ணுக்கு கல்யாணம் வெச்சிருக்கேன். இந்த நேரத்துல நீங்க இப்படி எல்லாம் நடந்துக் கிட்டா அது நல்லா இருக்கா சார்......" - ஆண்டிச்சாமி பரிதாபமாக கேட்டான். அது பாலாவை சற்று

இளக்கியது. ருத்ரா அருகில் சென்ற பாலா ருத்ராவின் காதோரமாக "ருத்ராபதி... இவனை பாக்க பாவமா இருக்கு. நீயும் சினிமால வர்ற முரட்டு போலீஸ் மாதிரியே நடந்துக்கறே..... கொஞ்சம் விட்டுப்பிடி..." என்றான்.

"பாலா.... நீ கொஞ்சம் சும்மா இரு. போலீஸ்னா போலீஸ் மாதிரி நடந்துக்கணும். ஒரு சகஜ மனுஷன் மாதிரி எப்ப நடக்கணுமோ அப்பதான் நடக்கணும்..."

- ருத்ராவுக்கும் பாலாவுக்கும் இடையில் லேசாய் ஒரு உராய்வு ஏற்பட்ட சமயம், இளங்கோ பார்வை சுற்றிலும் உள்ள பசுமையான மலைச்சரிவு பக்கம் ஒரு முறை சென்று திரும்பியது. அப்படி சென்ற வேளையில் ஒரு மொட்டையான பாறை மேல் இடுப்பில் இரு புறமும் கை வைத்தபடி காலை அகட்டி வைத்துக் கொண்டு கோவணம் மட்டுமே கட்டியிருந்த ஒரு மனிதர் ஒரு வினாடி கண்ணில் பட்டார். அவர் அங்கிருந்தபடியே கீழே நடப்பவைகளை பார்த்தபடி இருந்தார். அவர் நிற்கும் விதம் அவரது உயரம் அந்த தோரணையே அலாதியாக இருந்தது.

இளங்கோவிடமும் ஒரு பரபரப்பு தொற்றிக் கொண்டு அவரை பாலாவுக்கும் ருத்ராவுக்கும் காட்ட அவன் முனைந்தபோது இருவரும் ஆண்டிச்சாமி குடிசைக்குள் நுழைந்திருந்தனர். சாணியால் மெழுகிய உட்புறச் சுவர். சுவரோரமாய் ஒருபுறம் அடுப்பு. அடுப்புக்கு அருகில் விறகுகள் குவிக்கப்பட்டிருந்தன. எருமுட்டைகளும் நிறைய இருந்தன.

சுற்றுப் பகுதியில் மூலைக்கு மூலை பானைகள் அடுக்கப்பட்டிருந்தது. தொங்கும் உரிகளிலும் பானைகளே இருந்தன. ஒருவித கசட்டு வாசம்! மிகச்சிறிய



ஜன்னல் ஒன்றும் கதவு இன்றி காணப்பட்டது. அதன் வழியால் உள்வரும் வெளிச்சத்தில் அந்த குடிசைக்குள் இருப்பதை ஓரளவு பார்க்க முடிந்தது. எருமைக் கொம்பு, நீண்ட வேல் கம்பு, சுரைக்குடுவை, தொரட்டிக் குச்சி என்று மலைவாசிகளின் வீடுகளில் காணப்படும் அவ்வளவும் இருந்தது.

ருத்ரா ஒவ்வொரு பானையாக எடுத்து உள்ளே கைவிட்டு தேடிப் பார்த்தார். ஒரு மரப்பெட்டி இருந்தது அதையும் திறந்து பார்த்தார். உள்ளே திருமணத்துக்கு வாங்கியிருந்த ஆறுகெஜ பட்டுச் சேலையும், புதுவேட்டியும் மட்டும் இருந்தது.

வேறு எதுவுமே இல்லை. ஏமாற்றமுடன் வெளியே வந்தனர். இளங்கோ அப்போது திரும்ப அந்த மொட்டைப்பாறையை பார்த்தான். அங்கே இப்போது யாரும் இல்லை.

"என்ன இளங்கோ..... அங்க என்ன பாக்கறே?"

"ஒரு ஆள் கோமணத்தோட சாமியார் மாதிரி இருந்து பாத்துகிட்டு இருந்தான்."

"அப்ப அந்த ஆள்தான் கஞ்சா சாமியோ? ஏய் ஆண்டி உண்மையை சொல். அது கஞ்சா சாமி தானே?"

"கஞ்சா சாமிங்களா...... அப்படி யாரையும் எனக்கு தெரியாதுங்களே...."

"அப்ப உனக்கு கஞ்சா சாமி யாருன்னே தெரியாது?"

"நிசம்மா தெரியாதுங்க...."

"அவருக்கு நீ கஞ்சா கொடுத்தியாம். பதிலுக்கு அவர் உனக்கு தங்கம் கொடுத்தாராமே.?"

"தங்கமா?"

"தங்கமேதான்.... ஒண்ணுமே தெரியாத மாதிரி ஆக்ட் கொடுக்காதே."

"நிசம்மா எதுவும் தெரியாதுங்க. தங்கமெல்லாம் இருந்தா இந்த குடிசைல இப்படிங்களா இருப்பேன்?"

அவனது பதிலைக் கேட்டுவிட்டு சுற்றிலும் பார்த்தார்.

எல்லோரிடமுமே ஒரு வெறிப்பு. ஒருவர் காது கழுத்தில் கூட ஒரு துளி தங்கமில்லை. அதுவே அவன் சொல்வதுதான் ஒருவேளை உண்மையோ என்று கூட அவரை எண்ண வைத்தது.

பாலாவை பார்த்தார்.

"பாத்தியா...... அந்த உளிப்பாண்டி புளுகியிருக்கான். இவங்கள பாத்தா தங்கம் வெச்சிருக்கறவங்க மாதிரியா இருக்கு?" - என்றும் கேட்டார்.

"சரி ருத்ரா புறப்படுவோம்....... மற்ற விஷயத்தை நாம ஸ்டேஷனுக்கு போய் பேசுவோம்..." என்றான் பாலாவும். அப்போது ஒரு வயதானவர் இளங்கோவையே உற்று உற்று பார்ப்பதையும் பார்த்தான் பாலா.

பெரியவர் அருகில் சென்று "அப்படி என்ன அவன் முகரைல இருக்குதுன்னு பாக்கறீங்க?" என்று கேட்டான்.

"இவரைப்போலவே ஒருத்தரை மலைல தேன் எடுக்கப் போனப்ப பார்த்தேன்" - என்றார் அந்த வயதானவர்.

"இவரைப் போலவேவா....... இல்லை இவரையேவா......"



"அடஎன்ன தம்பி நீங்க..... இவரைப் போலதான் பாத்தேன். தலைல அடிபட்டு கட்டுப் போட்ருந்தார். என்கிட்ட கூட தேன் இருந்தா கொஞ்சம் குடிக்க கொடுங்கன்னு கேட்டார். நானும் பக்கத்துல இருந்த காட்டுச் செடியோட இலையை கிள்ளி அதுல கிண்ணம் மாதிரி செய்து அது நிரம்ப தேன் விட்டேன். நல்ல மலைத்தேன்..... குடிச்சா நல்லா தூக்கம் வரும்னும் சொன்னேன். இங்க எங்க போறீங்கோன்னும் கேட்டேன். வடக்குப்பள்ளம் பக்கமா போறோம்னாரு..... வடக்குப் பக்கம்லாம் சாமியாருங்க மட்டும்தான் போக முடியும். புதைகுழி, கரடி, கண் கொத்திப் பாம்புன்னு போற வழி எல்லாம் ஆபத்துங்க. இதுல முள்ளிப்பள்ளம்னு குழிங்க வேற..... உள்ற விழுந்தா அட்டைப் பூச்சிங்க அப்படியே அப்பி எடுத்துடும். உசுரு பொழைக்கறதே முடியாத காரியம்...." - அவர் சொல்லச் சொல்ல இளங்கோவுக்கு கண்ணீர் வந்தது.

அவர் அவனைப் போலவே இருக்கும் மூர்த்தியைத் தான் சொல்கிறார் என்பதும் புரிந்தது.

"அய்யா அந்த இடம் எங்க இருக்கு..... நாங்க இப்ப உங்க கூட வந்தா காட்டுவீங்களா.......?" என்று கேட்டான்.

"இல்லீங்க..... அமாவாசைக்கு அமாவாசை இல்லாட்டி பவுர்ணமி... இப்படி ரெண்டு நாள் தான் நாங்க தேன் எடுக்க போவோம். மத்த நாள்ள மேல ஏற மாட்டோம்...."

"இருக்கலாம்.... நீங்க பார்த்தது என் தம்பியை...... அவனைத் தேடித்தான் நாங்களும் வந்துருக்கோம். கொஞ்சம் உதவி செய்யுங்க அய்யா...." என்று கெஞ்சினான் இளங்கோ.

"சரி நாளைக்கு காலைல வாங்க..... பாக்கலாம்" என்றார் அவரும். இளங்கோ பதிலுக்கு ருத்ராவை பார்த்தான்.

"மலைல நாங்களும் மேச்சிமம் தேடிட்டோம் இளங்கோ. இவர்கூட போய் தேட்றதால ஒரு பிரயோஜனமும் இல்லை. ஏன்னா குறிப்பிட்ட இடத்துக்கு மேல இவங்க யாரும் வர மாட்டாங்க.... நாமதான் தனியா போகணும்."

"போய் தேடுவோமே.."

"புரியாம பேசறீங்களே...... அப்படி தேடிப்போன இரண்டு பேரும் திரும்ப வரலை..... அதுக்கே பதில் சொல்ல முடியல, இரண்டு பேர் தொலைஞ்சது தெரிஞ்சும் எப்படி நீங்க தொடர்ந்து ரிஸ்க் எடுக்கலாம்னு எஸ்பி லெவல்ல கேட்டா நான் என்ன பதில் சொல்றது?". ருத்ராவும் சரியாகத்தான் கேட்டார்.

பாலாவுக்கும் அதற்கொரு சரியான பதிலை சொல்லத் தெரியவில்லை. யோசித்தபடியே தாங்கள் ஏறி வந்த ஜீப்பில் ஏறிக் கொண்டனர். ஜீப்பும் கிளம்பியது. முன் சீட்டில் கதவை ஒட்டி அமர்ந்திருந்தான் இளங்கோ.

மலைப்பாதையில் ஜீப்பும் வளைந்து நெளிந்து செல்லத் தொடங்கியது. ஒரு வளைவில் அது திரும்பிய போது எதார்த்தமாக அந்த மொட்டைப்பாறையும் அதன் மேல் திரும்பவும் அந்த கோமணச்சாமியார் மனிதரும் தெரிந்தனர்.

அடுத்த நொடி இளங்கோ "ஸ்டாப்" என்று கத்தினான்.

ஜீப்பும் கிரீச்சிட்டு நிற்க இறங்கிச் சென்று ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து மொட்டைப் பாறையை



பார்த்தான். பின்னாலேயே பாலாவும் ருத்ராவும் வந்து நின்று அவர்களும் பார்த்தனர்.

"யார் இளங்கோ?"

"அதே கோமணச்சாமியார்...."

"உன் கண்ணுக்கு தெரியறவர் எங்க கண்ணுக்கு தெரிய மாட்டேங்கறாரே...."

"எனக்கும் அதுதான் புரியல..... எனக்கென்னவோ அந்த உளிப்பாண்டி சொன்னது பொய் மாதிரி தெரியல."

"அப்படின்னா ஆண்டிச்சாமி வீட்டுல சோதனை செய்தப்ப தங்கம் கிடைச்சிருக்கணுமில்ல.."

"தங்கத்தை வீட்டுல தான் வெச்சிக்கணுமா? ஆசாரிகிட்ட நகை செய்ய கூட கொடுத்திருக்கலாம்ல..?"

"இப்படி நிறைய சந்தேகப்படவும் கேள்வி கேட்கவும் இடம் இருக்குதான். ஆனா இதனால எல்லாம் பெருசா ஏதாவது தெரிய வரும்னு எனக்கு தோணலை. ஏன்னா எல்லாமே ஒரு புள்ளிக்கு மேல நகர மாட்டேங்குது. இதுவரை இந்த மலை விஷயத்துல குறிப்பிட்டு சொல்லும்படியா நாங்க எதையுமே கண்டு பிடிக்கல...... கண்டு பிடிக்கவும் முடியல."

"இன்சாட், சாட்லைட்னு எவ்வளவோ வந்த பிறகும் இப்படி சொல்றது தாழ்வா தெரியலியா சார்.... ஜாக்ரபி சேனல்ல ஒரு தனி மனுஷன் இதைவிட கொடுமையான காட்டுக்குள்ள ட்ரெக்கிங் போய்ட்டு திரும்பறதை பாக்கறோம். பாம்பு, மீன் இவைகளை பச்சையா கடிச்சு தின்னு உயிர் வாழறதையும் பாக்கறோம்."

"காடுன்னா ஆபத்தானதுன்னு எல்லாருக்கும் தெரியும். ஏன்னா அங்க விஷ ஜந்துக்கள் இருக்கும்.

மிருகங்கள் இருக்கும்.... இவ்வளவுதான்னா இதுக்கு எதிரான ஆயுதங்களோட கிளம்பிடலாம். ஆனா இவைகளுக்கு வெளியில் பல விஷயங்கள் இருக்கிறதுதான் பிரச்னையே....”

“எப்படி?”

மூவரும் நடந்து வந்து ஜீப்பில் ஏறியபடியே பேச்சைத் தொடர்ந்தனர்.

“பாலா.... இளங்கோ..... நல்லா கேட்டுக்குங்க.....மலைய இயற்கையா பாக்கறது ஒருவிதம். கடவுளா பாக்கறது இன்னொரு விதம். இயற்கையா பாக்கற இடத்துல எவ்வளவு ஆபத்துன்னாலும் அது எதனால் எப்படின்னு துப்பு துலக்கிட எங்களால முடியும். ஆனா கடவுள் விஷயம்ன்னு வரும்போது நம்பிக்கைகள் குறுக்கே வருது. அங்க தான் சிக்கலும் ஆரம்பமாகுது...”

“கடவுள் பேரால பல தப்புகள் இந்த நாட்டுல நடக்கத்தான் செய்யுது. அதேசமயம் அவங்க முகமூடியை கிழிச்சு எரியற வேலையும் இன்னொரு பக்கம் நடக்கத்தானே செய்யுது?”

“அதுக்கு நாங்க முயற்சி செய்யாம இல்லை. ஆனா அதுல பெரிய வெற்றின்னு எதையும் அடையலை. உதாரணத்துக்கு ஒரு விஷயம். ஒரு கிராமத்துல ஒரு பெரிய அரச மரம் ஒண்ணு கன்னிசாமியா கும்புடப்படுது. ஒருத்தன் தான் திருடுன நகையை அந்த மரத்து பொந்துல போட்டுட்டு தப்பிச்சுட்டான். அந்த பொந்துல இருந்து அந்த நகையை எடுக்கறதுக்குள்ள நாங்க எவ்வளவு கஷ்டப்பட்டோம் தெரியுமா? மரத்துகிட்ட போகும்போதே கூடி நிக்கறவங்கள்ள பலருக்கு சாமி வர ஆரம்பிச்சிடிச்சு இது சாமி மரம்... நீ



கையால தொடக்கூடாது. அப்படி இப்படின்னு.... சொன்னாரின்னு பூசாரியை விட்டே எடுத்துத் தரச் சொன்னோம். அவரோ உள்ள வாழும் பாம்பு இருக்குது. கைவிட்டா கடிச்சிடும்கறாரு.... இந்த இடங்கள்ள சட்டம் அதிகாரம் இவைகளை விட புத்திசாலித் தனம்தான் செயல்பட முடியும்.....”

“அப்ப இந்த விஷயத்துல எது புத்திசாலித்தனம்னு நீங்க சொல்ல வர்றீங்க ருத்ரா..”

“இப்பவே நான் உங்களை இங்க இறக்கிவிடறேன். திரும்ப அந்த ஆண்டிச்சாமி வீட்டுக்கு போய் பாருங்க. ஜீப்புல புறப்பட்டு வரவும் தூர இருந்தே பார்த்து சுதாரிக்க இடம் இருக்கு. இந்த உடையை எல்லாம் கழட்டிட்டு, விறகு வெட்டிங்க மாதிரி போங்க. நிச்சயம் முந்தி பாத்ததுக்கும் இப்ப பாக்க போறதுக்கும் வித்யாசம் இருக்கும். அப்படி இருந்தா தேவையை பொறுத்து என்னை கூப்பிடுங்க. அதன்பிறகு லாக் அப்புல வெச்சு பேசற விதமா பேசும்போது பல உண்மைகள் வெளிய வரும்.....”

“சரி..... தங்கம் தந்தது உண்மையா இருந்தா என் தம்பியும் ஊர் பிரசிடெண்ட் மகன் குமாரும் அதுக்காக தான் போனாங்கன்னு முடிவு செய்து அந்த போகக் கூடாத பக்கம் போய் பாக்கலாமா?”

“அதைபத்தி அப்புறம் பேசுவோம். இப்ப போய் பாத்துட்டு வாங்க.....” என்று ஜீப்பில் இருந்து அவர்கள் இருவரையும் இறக்கி விட்டார்.

“இப்ப திடுதிப்னு உடை மாத்திக்கறதுக்கு வழி?” என்று பாலா கேட்கும்போதே பின்பக்கம் இருந்த ஒரு அட்டை பெட்டியில் இருந்து இரண்டு அழுக்கேறிய வேட்டியையும், ஒரு அரிவாள் மற்றும் கோடாலியையும்

கூட பின் சீட்டுக்கு அடியில் இருந்து எடுத்துக் கொடுத்தார்.

"என்ன ருத்ரா.... எல்லாமே பக்காவா ரெடியா இருக்கு?"

"அதான் போலீஸ்..." இரண்டே வார்த்தையில் ருத்ராவிடம் பதில்!"

# 7

மலைகளில்தான் அதிசயங்களும் உள்ளன; பெரும் ஆபத்துகளும் உள்ளன. இரண்டுக்கும் காரணமும் சில மனிதர்கள்தான். மனித வாழ்க்கை பிடிக்காமல் போய் இயற்கையோடு இரண்டற கலந்து வாழ விரும்பும் மனிதர்களில் சிலர் மலைகளையும் அதன் குகைகளையும் தான் தேர்வு செய்கின்றனர்! காலத்தால் இவர்கள் பெரும் சக்திகளை பெற்று அதை துளியும் பயன்படுத்தாமல் இந்த மலையில் தனிமையிலேயே உள்ளனர். இவர்கள்தான் சித்த புருஷர்களாக மாறி எப்போதாவது இவர்கள் கண்களில் படும் சில அப்பாவி மனிதர்களுக்கும் தங்கள் பேராற்றலாலே உதவிகள் செய்கின்றனர்!

சில ஜெயிலில் இருந்து தப்பிய பெரும் குற்றவாளிகளும் மலைகளில் தான் ஒளிந்து வாழ்கின்றனர். இவர்களும் தங்களை சித்தர்களை போல மாற்றிக் கொண்ட போதிலும் உண்மையில் இவர்களுக்கும் சித்துக்கும் எந்த ஒரு சம்பந்தமும் கிடையாது. இவர்களே



பயமுறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

பாலாவும், இளங்கோவும் ஒரு விறகு வெட்டி கோலத்தோடு வந்த வழியில் திரும்பிக் கொண்டு இருந்தனர். நேரமும் இருட்டத் தொடங்கிவிட்டது. இளங்கோ ஒரு தீர்மானமான முடிவில் இருந்தான்.

"பாலா.... எனக்கென்னவோ அந்த வயசான பெரியவரை புடிச்சிகிட்டே நாம மலைல ஆபத்தான இடங்களை எல்லாம் கடந்துட முடியும்னு தோணுது. உளிப்பாண்டி சொன்ன தங்க விசயம் மட்டும் உண்மையா இருந்தா அதைக் கொடுத்த கஞ்சா சாமியும் உண்மை. அது மட்டும் இல்லை. மலை மேல தங்க மணல் திட்டு இருக்கறதும் உண்மை - என்ன சொல்றே?" என்று கேட்டான்.

"முதல்ல ஆண்டிச்சாமிகிட்ட தங்கம் இருக்கறத ஊர்ஜிதம் செய்துக்குவோம் - அப்புறம், அடுத்த கட்டத்துக்கு போவோம்....." என்று பாலாவும் பதில் சொன்னபோது சற்று தொலைவில் யாரோ நடந்து செல்லும் சலசலப்பு. உற்றுப் பார்த்தபோது ஆண்டிச்சாமி தான் கையில் ஒரு தீப்பந்தமுடன் மொட்டைப் பாறை நோக்கி நடந்தபடி இருந்தான். இளங்கோவிடம் பரபரப்பு பெருக ஆரம்பித்தது.

"பாலா.... அது ஆண்டிச்சாமி .... போற திசைய பார் மொட்டைப்பாறை அந்த பக்கம்தான் இருக்கு?"

"அப்ப மொட்டைப்பாறை மேல நீ பாத்த கோமணச்சாமியாரை பாக்கத்தான் போறான் போல" என்ற பாலாவும்

"வா நாமலும் பின்தொடர்வோம்...." என்று பின் தொடர்ந்தனர்.

◆◆◆

காட்டுப்பாதை!

அதில் நடந்து செல்ல ஒரு பிரத்யேக அனுபவம் வேண்டும். அட்டைகள் ஓசைப் படாமல் உடம்பில் ஏறிவிடும். ஏறுவதும் தெரியாது. ரத்தத்தை உறிஞ்சுவதும் தெரியாது. மோசமான விதி உள்ளவர்கள் கண் கொத்தி பாம்புகளிடம் சிக்கி தங்கள் கண்களை இழந்து விடுவார்கள். கரடிகளும் சமயங்களில் தாக்கும் கன்னச் சதை, தோள்பட்டை சதை, தொடைச் சதை, என்றால் அதற்கு மிகவும் பிரியம். இதுபோக விஷமுட்கள் தைத்தால் வலி ஒரு வருடத்துக்கு கூட இருக்கும். இது எதைப்பற்றியும் கவலைப்படாமல் பாலாவும் இளங்கோவும் ஆண்டிச்சாமியை தொடர்ந்தனர்.

இருவருக்கும் இடையில் ஒரு நூறு அடி இடைவெளி இருந்தால் அதிகம். அதேசமயம் பொழுதும் வேகமாக இருட்டத் தொடங்கியிருந்தது. கையில் அரிவாள் மட்டும்தான் இருக்கிறது. முற்றாக இருட்டிவிட்டால் என்ன செய்வது என்பதிலும் ஒரு சின்னக் குழப்பம் இருவருக்குமே ஏற்பட்டது.

"பாலா...... நேத்து இதே நேரம் நம்ம ஆபீஸ்ல லீவு லெட்டரை எழுதி வெச்சுட்டு நம்ம மேனேஜர்கிட்ட லீவு சேங்ஷன் ஆகுமோ ஆகாதோன்னு தவிச்சுகிட்டு இருந்தோம். ஆனா இன்னிக்கு இப்படி ஒரு மலைக் காட்டுல நம்ம தோற்றமே மாறிப்போய் வேற மாதிரியான தவிப்புல இருக்கோம். இதை என்னன்னு சொல்றது?"

"அதான் இளங்கோ வாழ்க்கை...... எது வேணா எப்ப வேணா நடக்கலாம். நீ புத்தகம் படிக்கற பழக்கத்துல இருந்துருந்தா உனக்கு நான் சொல்லாமலே பல விஷயங்கள் புரிஞ்சிருக்கும்."



"எப்ப எது நடக்கும்னு தெரியாத வாழ்க்கை இது. எனவே ஒவ்வொரு நொடியையும் வீணாக்காமல் அப்பொழுதைக்கப்போது வாழப்பாருங்கள்"னு ஒரு பழமொழி உண்டு."

"இப்படிப்பட்ட நேரத்துல வாழறதுங்கறது எது? மனசு அலைபாயுது...மனுஷங்க விதம்விதமா இருக்காங்க.... பாரு. இந்த ஆண்டிச்சாமி நல்லவனா கெட்டவனா தெரியல. அதுக்கு மேல அந்த கோவணச் சாமியார்."

"பொறு.... ஒவ்வொரு அடியையும் புத்திசாலித்தனமா எடுத்து வெச்சா நமக்கு நிச்சயம் ஏமாற்றமில்லை." - பாலாவிடம் அனுபவம் அறிவு இரண்டுமே அழுத்தமாக வெளிப்பட்டது.

"நீ இப்ப என்கூட இருக்கறது எனக்கு எவ்வளவு தெம்பா இருக்கு தெரியுமா...?"

"எனக்கும் இந்த அனுபவம் வித்யாசமானதாதான் இருக்கு. எப்பப்பார் கார்களுக்கு நடுவுல நின்னுகிட்டு போறவர்ற நபர்கள் கிட்ட கார்களோட விலையை, அதோட திறன்களையே பேசிகிட்டு இருந்ததுக்கு இது ஒரு வித்யாசமான அட்வெஞ்சர்...." - என்ற பாலாவிடம் சட்டென்று ஒரு தேக்கம். முகம் மாறிப் போனது.

"என்ன பாலா?"

"ஒண்ணுமில்ல..... நான் தினம் தவறாமல் கோவிலுக்கு போற பழக்கமுள்ளவன்.."

"அதான் எனக்கும் தெரியுமே?"

"இல்ல இன்னிக்கு அது தவறப் போகுதேன்னு இப்ப தான் ஞாபகம் வருது."

"ஒரு நாள் தவறினா என்ன பாலா... சாமி கோவிச்சுக்கவா போறார்..."

"போடா பைத்தியக்காரா.... கோவிலுக்கு போறது சாமிக்காக இல்ல.... நமக்காக! எந்த சாமி எனக்கு பூஜை செய்தா தான் அருள் தருவேன்னு சொல்லியிருக்கு?"

"அப்ப ஏன் அதை நினைச்சு கவலைப்படறே?"

"கிட்டத்தட்ட மூணு வருஷமா நாள் தவறாம போய்கிட்டிருக்கேன். குறைந்தபட்சம் 1008 நாள் இந்த கடமையை நிறைவேத்துவேன்னு ஒரு முறை கோயிலில் வேண்டிக் கிட்டேன். நேத்துவரை அது தவறாம நடந்துடிச்சி. ஆனா இன்னிக்கு இந்த மலைல மாட்டிக்கும்படியாடிச்சே..."

"நீ இப்படிச் சொல்லும்போது எனக்கும் சங்கடமா இருக்கு. சரி வா நாம திரும்பிப் போவோம்... என் ஊர்ல முத்துமாரியம்மன் கோயில்னு ஒரு கோயில் இருக்கு. எட்டு மணி வரை நிச்சயம் திறந்திருக்கும். நாம் கொஞ்சம் கஷ்டப்பட்டா போயிடலாம்." - இளங்கோவும் பாலாவின் அந்த 108 நாள் கணக்குக்கு ஒரு பங்கம் வருவதை விரும்பவில்லை. ஆனாலும் பாலா சட்டென்று அதைக் கேட்டு திரும்பி விடவும் தயாராக இல்லை.

"இல்ல இளங்கோ.... நாம போவோம்.... நாம போவோம். அந்த சாமியாரைப் போய் பிடிப்போம். அவர் நிஜமான சாமியாரா இருந்தா என்னைப் பாக்கும் போதே என் கோவில் கணக்கு அவருக்கு தெரிஞ்சிடும். நம்பளையும் தப்பா எடுத்துக்க மாட்டார்...... அவர் மூலமாவே இந்த மலைலயே எங்கையாவது கோயில் இருக்கான்னு பார்ப்போம். அப்படி இல்லன்னாலும் பரவால்ல. அதோ எதிர்ல தெரியற மகேந்திரகிரி மலை



உச்சி என் கண்ணுக்கு சிவலிங்கமாதான் தெரியுது.... இதோ காட்டுச் செடிகள்ள ஏராளமான பூக்கள்.... இதை பறிச்சு இங்க இருந்தபடியே பூக்களைத் தூவி நான் கும்பிட்டுக்கறேன்." - என்ற பாலா அப்படியே செய்யவும் செய்தான். கை நிறைய மலர்களை ஏந்தி மலைச் சிகரத்தையும் பார்த்து "நமசிவாய வாழ்க... நாதன்தான் வாழ்க..... இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க...." என்று சொல்லி மலர்களை வீசி எறிந்தான். அவைகளும் வீசும் காற்றில் பறந்து சென்று விழுந்தன.

இளங்கோவுக்கு அவனது அந்த புத்திசாலித்தனமான செயல் மிகுந்த ஆச்சரியத்தைத் தந்தது. மகிழ்ச்சியாகவும் இருந்தது. அதேசமயம் ஆண்டிச்சாமி கிட்டத்தட்ட பாறை உச்சியில் இருந்த கோமணச் சாமியாரை நெருங்கி விட்டிருந்தான்.

முற்றாக இருட்டியும்விட்டது.

ஆண்டிச்சாமியின் கையில் இருந்த தீப்பந்தம்தான் பாலா இளங்கோ இருவருக்குமே ஒரே வழிப்புள்ளி... ஆண்டிச்சாமி பாறை உச்சிக்கு போகவும் கோமணச் சாமி வந்து சேரவும் சரியாக இருந்தது.

பாலாவும் இளங்கோவும் ஒரு குறிப்பிட்ட இடத்தோடு நின்று எதிரில் நடப்பதை கவனிக்க ஆரம்பித்தனர்.

"வணக்கம் சாமி...." - என்ற ஆண்டிச்சாமி வாயால் சொன்னது போதாது என்று கோமணச்சாமியின் காலிலும் மண்டி போட்டு விழுந்தான்.

"எழுந்திரு.... எல்லாத்தையும் பாத்துகிட்டுதான் இருக்கேன். வந்தது யார் - போலீஸ் தானே?"

"ஆமாம் சாமி.... வீட்டுக்குள்ள நுழைஞ்சு பாடாப் படுத்திட்டாங்க..."

"பசுவைப் பாத்துட்டாங்களா?"

"இல்ல சாமி..... நான் அதை தோட்டத்துல புதைச்சுல்ல வெச்சிருக்கேன்...."

"உனக்கு பசுவை கொடுத்ததே தப்பா போச்சு.... யாருக்கும் தெரியக் கூடாதுன்னு எத்தனை தடவை சொல்லியிருப்பேன்?"

"சத்யமா நான் யார்கிட்டேயும் சொல்லலை சாமி. இது அந்த உளிப்பாண்டி வேலை. அவன்கிட்ட நீங்க கஞ்சா வாங்கறதால அதை அவன் கொடுக்க வந்தப்போ நீங்க என்கிட்ட பசுவை கொடுத்ததை பாத்துட்டான்.... அந்த நாய் தான் போலீஸ்காரங்க கிட்டயும் உளறியிருக்கான்...."

"உளியன் என் வரைல பெரிய தப்பு பண்ணிட்டான். அவனை நான் சும்மா விடமாட்டேன். இப்ப அவன் எங்க?"

"ஸ்டேஷன்ல லாக் அப்புல இருக்கறதா கேள்வி.... இருந்தாலும் அவன் எப்படியாவது வெளி வந்துடுவான் சாமி."

"அதுசரி போலீஸ்கூட வந்த இரண்டு பசங்க யாரு?"

"மலைல தொலைஞ்ச முல்லைப் புதூர் ஊர்க்காரங்களோட அண்ணன் தம்பிங்கன்னு நினைக்கறேன்...."

"அவங்க எங்க தொலைஞ்சாங்க.... வனப்பேச்சியோட கோபத்துக்கு ஆளாகி செத்தேல்ல போய்ட்டாங்க..."



"அதுல ஒருத்தன் பள்ளத்துல இன்னும் உயிரோட இருக்கறதா சொன்னீங்களே சாமி..."

"அந்த பள்ளத்துல விழுந்த எவன் பிழைச்சிருக்கான்? அவனும் நாளையோ நாளை மறுநாளோ செத்துதானே தீரணும்..."

"சாமி நீங்க... உங்களாலேயே காப்பாத்த முடியலீங்களா?"

"வனப்பேச்சி விஷயத்துல யாரும் குறுக்கிட முடியாது. இந்த மலையோட உச்சிப் பாகம் அவளோட ராஜ்யம். அங்க மனுஷங்களுக்கு அனுமதி கிடையாதுன்னா கிடையாதுதான்..."

"சரி சாமி... நான் இப்ப என்ன பண்ணனும்?"

"எந்த காரணம் கொண்டும் பசுவை வெளிய எடுக்காதே! உளியனைப் பார்த்தா அவசியம் என்னை சந்திக்கச் சொல்."

"உத்தரவு சாமி..."

"அந்த இரண்டு பசங்க திரும்ப வந்தா அவங்களையும் என்கிட்ட ரகசியமா கூட்டிகிட்டு வா..."

"அவங்க வந்தா கூட்டிகிட்டு வரேன் சாமி..."

"கட்டாயம் வருவாங்க. வந்தே தீருவாங்க... ஆனா அவங்கள நீ என்கிட்ட கூட்டிகிட்டு வரப்போறது யாருக்கும் தெரியக் கூடாது.

"ஏன் சாமி அப்படி?"

"ஆண்டி... நீ இப்படி எல்லாம் என்கிட்ட கேள்விகள் கேட்கக் கூடாது. நல்ல சிஷ்யனுக்கு அழகு சொன்னதைக் கேக்கறது தான்..."

ஆண்டிச்சாமியும் அந்த கோவணச் சாமியும் பேசிக் கொள்வதை கேட்டபடி இருந்த பாலா இளங்கோ இருவருக்குள்ளேயும் பரபரப்பு பற்றி எரிய ஆரம்பித்தது.

"பாலா.... அந்த ஆள் பசுங்கறான்.... இவன் கொல்லைல புதைச்சுருக்கேங்கறான்.. மலைல குமாரும் மூர்த்தியும் இறந்துட்டதாவும் சொல்றான்... என்ன இதெல்லாம்...?"

"பசுன்னா தங்கம்னு ஒரு அர்த்தம் உண்டு. இப்ப அதைவிடு. இந்த சாமியார் நாம வருவோம்னு கெஸ் பண்ணியிருக்கறத இப்பவே உண்மைன்னு காட்டு வோம் வா... இப்பவே முன்ன போய் நிப்போம்..." - என்ற பாலா இளங்கோவையும் அழைத்துக் கொண்டு அந்த கோமணச்சாமியை நோக்கி ஓடி நின்றான்.

அந்தச் சாமியாரின் முகத்தில் சற்றும் எதிர் பார்த்திராத ஒரு திகைப்பு!

# 8

**'உலகம் தோன்றிய நாளில் இருந்தே ஒன்று இரண்டாக பிரிந்து நல்லதும் கெட்டதுமாகவே உள்ளது. தேவர்கள் என்றால் அசுரர்கள், இனிப் பென்றால் கசப்பு, ஒளி என்றால் இருள், கருப்பென்றால் சிவப்பு என்று இருவேறு நிலைப்பாடு இருப்பதால் தான் ஒன்றின் அருமையை இன்னொன்றைக் கொண்டு விளங்கிக் கொள்ள முடிகிறது.**

**இந்த இரண்டு நிலைப்பாடு பூமியில் மட்டு மில்லை..... விண்ணுலகிலும் இது தேவர்கள் அரக்கர்கள் என்று பிரிந்து காணப்படுகிறது.**



**நடப்பது கலியுகம்! இங்கே ஒரு ஆச்சரியம் என்னவென்றால் தேவர்கள் வடிவில் அசுரர்கள் திரிவதுதான்....!**

தன் எதிரில் வந்து நின்ற பாலா இளங்கோ ஆகிய இருவரையும் பார்த்த அந்த கோவணச்சாமி முகத்தில் ஒரு சிரிப்பொன்று வெளிப்பட்டது!

"சாமி... நீங்க பேசிகிட்டிருந்ததை கேட்டு இட்டுதான் இருந்தோம்.... எங்களை நீங்க நாளைக்கு தான் கூட்டிகிட்டு வரச் சொன்னீங்க. இப்பவே வந்துட்டோம். ஸ்டேஷன்ல உளிப்பாண்டி சொன்ன தெல்லாமும் உண்மைன்னும் தெரிஞ்சுகிட்டோம்" - என்று கம்பீரமாகவே பேசினான் பாலா.

"தெரியும்..... நீங்க இந்த மாறுவேஷத்துல வந்ததை நானும் பாத்துகிட்டுதான் இருந்தேன். நான் இப்படி பேசினதும் நீங்க என் முன்னால இப்படி வந்து நிக்கணும்கறதுக்காக தான்...." - என்று பதிலுக்கு அந்த சாமியும் சொன்னபோது பாலாவுக்கு சற்று ஏமாற்றமாகி விட்டது.

"சாமி நீங்க பெரிய ஜித்தன்கறத ஒத்துக்கறோம். நீங்க யாரா வேணா இருந்துட்டுப் போங்க... எங்களுக்கு நாங்க தொலைச்சிட்ட உயிருங்க வேணும்... அவங்க இந்த மலைலதான் எங்கையோ இருக்காங்க தயவு செய்து எங்கள அங்க கூட்டிகிட்டு போங்க..."

- இளங்கோ தன் பாசத்துடிப்பை காட்டினான்.

"நான் பேசினத கேட்டுகிட்டிருந்தேன்னியே... அதுல அந்த இரண்டு பேருமே செத்துட்டாங்கன்னு சொன்னது உன் காதுல விழலியா?"

"விழுந்துச்சி... ஒரு உயிர் பள்ளத்துல கிடக்குது இன்னும் உயிரோட இருக்குன்னீங்களே..."

"பள்ளத்துல விழுந்துட்டாலே செத்துட்ட மாதிரி தான். அதுல எங்க உயிர் பிழைக்கறது..."

"அதை நீங்க எப்படி சாமி முடிவு பண்ணலாம். நான் போய் ஹெலிகாப்டரை கூட ஏற்பாடு பண்ணி பறந்து வந்து அந்த பள்ளத்துக்குள்ள நூல் ஏணி கட்டி இறங்கி என் தம்பிய காப்பாத்துவேன். நீங்க அவன் கிடக்கிற பள்ளத்த காட்டுங்க அது போதும்..." - இளங்கோ படபடப்பாக சொன்னவிதம் அந்தச் சாமியின் முகத்தில் மூர்க்கத்தை உருவாக்கியது.

"பைத்தியக்காரா... இந்த மலையை நீ என்னன்னு நினைச்சே? மலை உச்சி வனப்பேச்சியோட கோட்டை. புனிதமான என்னைப் போன்ற தவசிகள்தான் அங்க போக முடியும்... மத்தபடி ஒரு ஈசல்கூட அந்த மலைமேல பறக்க முடியாது. ஒரு பறவைகூட அந்த மலை மேலே பறக்காது. நீ ஹெலிகாப்டர்ல பறந்து வருவியா?" - சாமியாரின் கோபம் பாலாவை கிள்ளியது.

"சாமி .... வனப்பேச்சிங்கறது யார்.....?" - என்று கேட்டான்.

"அவ ஒரு வன தேவதை..."

"வன தேவதை தானே - அரக்கி இல்லையே..."

"அதுல என்ன சந்தேகம்..... அவ அந்த பார்வதி தேவியோட அம்சம்."

"அந்த அம்சம் எதுக்காக உயிர்களைக் குடிக்க ஆசைப்படுது. காப்பாத்தினா தானே அது கடவுள்?"

"பைத்தியகாரா... அவ எல்லைக்குள்ள நுழையக் கூடாதுங்கற கட்டுப்பாட்டை மீறி நுழைஞ்சதுக்கு தண்டனை இது. நம்ம நாட்டு எல்லைக்குள்ள எதிரி நுழைஞ்சா சுடத்தானே செய்வோம்?"



"நாட்டோட எல்லையும் கடவுளோட எல்லையும் ஒண்ணா சாமி? உலகத்தை படைச்ச கடவுளுக்கு இந்த மலை உச்சிங்கறது ஒரு தூசுக்கு சமம். அந்த உச்சிக்கு யாரும் வரக்கூடாதுன்னு அது சொல்லுதுன்னா அப்பப் அங்க மனுஷன் பாக்கக்கூடாத ஒண்ணு இருக்கா?" - பாலா பாய்ண்ட்டை பிடித்தான்.

"ஏய் நீ ரொம்ப பேசறே? ஆண்டிச்சாமி நீ கிளம்பு. இவங்கள நான் பாத்துக்கறேன்..." என்று அந்த கோமணச்சாமி ஆண்டிச்சாமியை போகச் சொல்ல அவனும் திரும்பவும் சாமி காலில் விழுந்து வணங்கி விட்டு திரும்பித் திரும்பி பார்த்தபடியே நடக்கத் தொடங்கினான்.

அவன் விலகவும் இருட்டு முற்றாக சூழத் தொடங்கிவிட்டது.

"என்ன பயமா இருக்கா?" இருட்டில் பாறை மேல் ஒரு கருப்பு உருவமாக நின்று கொண்டே கோமணச் சாமியாரும் கேட்டார்.

"ஒரு தனி மனுஷனா நீங்களே பயமில்லாம நிற்கும் போது எங்களுக்கு மட்டும் என்ன பயம்?"

"உங்க நல்லதுக்கு சொல்றேன்... திரும்பிப் போயிடுங்க..."

"இது எங்கள மிரட்ற மாதிரி இருக்கு."

"அப்ப சரி... இதோ வழி - இது வழியா மலை உச்சிக்கு போகலாம். வழியில பெரிய பள்ளங்களும் செங்குத்தான உயரங்களும் வரும். அவைகளை கடந்து போறதும் சரி அதுல விழுந்து சாகறதும் உங்க பாடு..."

"அப்ப நீங்க உதவி செய்ய மாட்டீங்க... அப்படித் தானே?"

"சாகறதுக்கு நான் உதவி செய்ய மாட்டேன்."

"நீங்க மட்டும் இந்த ஆபத்துல தப்பி உயிரோட இருப்பீங்க. ஆனா நாங்க செத்துடுவோம்கறது உங்க எண்ணமா?"

"இப்படித்தான் அந்த இரண்டு பேரும்கூட பேசினாங்க.... ஆனா இப்ப அவங்க நிலை பாவம். ஒருத்தன் செத்துப் போயிட்டான். இன்னொருத்தன் செத்து கிட்டே இருக்கான்."

"இப்ப சொல்றேன் சாமி.... நீங்க ஒரிஜினல் சாமியான்னு எனக்கு சந்தேகமா இருக்கு. நல்ல சாமியாரா இருந்தா இப்படி உருட்டல் மிரட்டல்னே பேசமாட்டார். முந்தி வந்தவங்களுக்கும் ஆபத்தும் நேர்ந்துருக்காது. உங்ககிட்டதான் கோளாறு இருக்கு. எப்ப உளிப்பாண்டியோட கஞ்சாவை வாங்கி நீங்க பயன்படுத்தறீங்கன்னு தெரிஞ்சதோ அப்பவே நீங்க நல்ல சாமி இல்லன்னு தெரிஞ்சு போச்சு. இப்ப கன்ஃபர்ம் பண்ணிட்டீங்க... பாவம் ஆண்டிச்சாமி - கிராமத்து வாசி... தங்கம்கற ஒண்ணை காட்டி அவனை ஏமாத்திகிட்டு இருக்கீங்க. ஆனா நாங்க படிச்சவங்க... எங்ககிட்ட உங்க பாச்சா பலிக்காது.

◆◆◆

பள்ளத்துல கிடக்கிற அந்த உயிரை எப்படி காப்பத்தறோம்னு பாருங்க..." - என்று பாலா ஒரு போடு போடவும் அந்த சாமியாரிடமும் ஒரு தர்ம சங்கடம்.

"தம்பிங்களா... உங்க ஆவேசம் எனக்கு பிடிச்சிருக்கு. நான் பேசினத தப்பா புரிஞ்சுகிட்டீங்கன்னு நல்லா தெரியுது. அந்த பள்ளத்துகிட்ட நானே



கூட்டிகிட்டு போறேன். அப்ப தெரியும் நான் சொன்னது மெய்யா பொய்யான்னு... கஞ்சாவை நான் பயன்படுத்தறதும் போதைக்காக இல்ல. மருந்துக்காக.. அதையும் என் கூட என் குடிசைக்கு வந்து பாருங்க... புறப்படுங்க..." - என்று பாலா இளங்கோ இருவரையும் சமாதானம் செய்து அழைத்துச் செல்லத் தொடங்கினார்.

சாமியாரின் வேகமான மனமாற்றம் பாலா வரையில் ஆச்சரியத்தைவிட சந்தேகத்தை தான் அதிகம் தந்தது. இளங்கோவிடம் "நம்ம ஒவ்வொரு அடியையும் கவனமா வெச்சு இந்த ஆளைப் பின்தொடரணும்" என்றான் கிசுகிசு குரலில். இளங்கோவும் சைகையில் ஆமோதித்தான்.

கோவணச்சாமியும் முன்னால் நடந்தது!

வேகமாகவே நடந்தது. இரவு நேரத்தில் மலைப் பாதைகளில் நடந்திட ஒரு பிரத்யேக அனுபவம் வேண்டும். இளங்கோவும் பாலாவும் பின்தொடர்ந்தனர்.

சாமி ஒரு இடத்தில் காய்ந்து கிடந்த ஒரு மரக் கிளையை எடுத்து அங்கேயே கிடந்த கற்களைக் கொண்டு உரசி சத்தையில் தீ மூட்டி பின் அதை மரக்கிளையிலும் பற்றவைத்துக் கொண்டது.

அதை இளங்கோ கையில் கொடுத்து பிடித்துக் கொள்ளச் சொல்லிவிட்டு "பாத்து வாங்க.... இடைல கரடி தென்பட்டா தீயை காட்டுங்க..." கிட்ட வராது என்று சற்று கிலியும் மூட்டினார்.

காற்று ஜிலு ஜிலுவென்று வீசுவதில் மரக்கிளை நெருப்பு அணைந்துவிடப் பார்த்தது. பாலா மெல்லிய சுள்ளிகளை பொறுக்கி அந்த மரக்கிளையோடு சேர்த்துப் பிடிக்க அணையாமல் வேகமாக எரியத் தொடங்கியது.

திரும்பிப் பார்த்த சாமியார் பாலாவை பார்த்து "நீ ரொம்ப புத்திசாலி..." என்று சிரித்தார்.

"சாமி..." - இளங்கோ அவரை அழைத்து பேச முயன்றான்.

"என்ன?"

"நாம மேல போய் இரண்டு பேரையும் பாக்கறதுன்னு முடிவு பண்ணியாச்சு. நாம மூணுபேர் மட்டும் போறதுக்கு போலீசும் வந்தா அவங்களை மீட்க ரொம்ப உதவியா இருக்கும்ல?"

- இளங்கோ சரியாகத்தான் கேட்டான். சாமியார் அதற்கும் பதிலுக்குச் சிரித்தார்.

"ஏன் சாமி... போலீஸ் வரக்கூடாதா?"

"உங்களாலயே என் கூட தொடர்ந்து வர முடியுமான்னு தெரியாதபோது நீங்க போலீஸ் வரை போனா எப்படி?"

"அதான் கூட்டிகிட்டு போக நீங்க இருக்கீங்களே?"

"நான் வழிய தான் காட்டுவேன். ஒரு எல்லையோட நின்னுடுவேன்."

"ஏன் சாமி அப்படி?"

"அந்த எல்லையை கடந்து தைரியமா போனதாலதான் ஒருத்தருக்கு நாலு பேரை நீங்க இழந்தீங்க...?"

"நாலு பேர் தேடிப் போய் காணோம்னு தெரியும். ஆனா நீங்க குமார், மூர்த்திங்கிற ரெண்டு பேரை பத்தி மட்டும்தானே சாமி சொன்னீங்க?"

"மீதமுள்ள இரண்டு பேர் புதை குழில விழுந்து மூழ்கி செத்துருக்கலாம்... வேற எங்கையாவது கிடந்திருந்தாதான் நான் பார்த்திருப்பேனே...?"



"அப்ப நீங்க ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேலே வரமாட்டீங்க அப்படித்தானே?"

"ஆமாம்..."

"ஒரு சாமியாரான உங்களுக்கு பயமா?"

"பயம் இல்ல.... இதுக்கு பேர் கட்டுப்பாடு..."

"அப்ப எப்படி ஒருத்தர் இறந்துட்டதையும், இன்னொருத்தர் பள்ளத்துல கிடக்கிறதையும் மட்டும் சொல்ல முடிஞ்சது உங்களால?"

- பாலா கோர்ட்டில் கேட்பது போல கேட்டு மடக்குவான் என்று அந்த சாமியார் எதிர்பார்க்கவில்லை. மிரட்சியுடன் பார்த்தவர் "ஒரு குறிப்பிட்ட இடத்துல கழுகு வட்டமடிச்சுகிட்டு இருந்தது...! அப்படி கழுகு வட்டம் போட்டா கீழே யாரோ இறந்து கிடக்கறதா தான் அர்த்தம். அதை வெச்சு சொன்னேன்..." - என்று சமாளித்தார். அந்த பதில் இளங்கோ வயிற்றில் புளியைக் கரைத்தது.

அந்த பதிலுக்கு பிறகு "வந்தா வாங்க. வராட்டி போங்க" என்பது போல் ஒரு புது வேகமெடுத்து நடக்க ஆரம்பித்த அந்த கோமணச்சாமியை பின்தொடர்வது என்பது பாலாவுக்கும் இளங்கோவுக்கும் சற்று சிரமமாகத்தான் இருந்தது!

## 9

"எல்லாமே இரண்டுவிதமாக இருந்து மனிதன் உணர்ந்து கொள்ளப் பயன்படுவதைப் போல மலைகளிலும் இருவிதமான மலைகள் உள்ளன! துளியும் மரங்களற்று வெறும்

பாறைகளை மட்டுமே தன்னகத்தே உடைய மலைகள் ஒரு விதம்! கொஞ்சம் பாறை நிறைய நிலப்பரப்பு என்கிற ரகத்தில் உள்ள மலைகள் இன்னொரு விதம்... இதில் பாறைகளை மட்டுமே கொண்ட மலைகளை கரடுகள் என்பார்கள். அதிகபட்சமாய் இவ்வகை மலை களில் கோரைப் புற்களும், பிரண்டைக் கொடி களும் சில செடிவகைகளும் மட்டுமே வளர்ந்து காணப்படும். இவ்வகை மலைகளுக்கு அருகில் உள்ள ஊர்களில் பகல் பொழுதில் வெப்பம் தகிக்கும். காரணம்.... மலைப் பாறைகள்தான்! இவை வெயிலை அப்படியே வாங்கி வெளியே விடும். குளிரையும் இவை அதேபோல் பிரதி பலிக்கும். இப்படிப்பட்ட கரட்டு மலைகளே நம்நாட்டில் மிகுதி. மிகுந்த நிலப்பரப்புடைய மலைகளில் செரிவான மரங்கள் வளர்ந்து பசுமை சூழ்ந்திருக்கும். இந்த மரங்கள் உதிர்த்த இலை தழை சருகுகள் காலப்போக்கில் பல அடி உயரத்திற்கு மிகுந்த சத்துடைய ஒரு படுகை போல் ஆகிவிடும். பெய்யும் மழை நீரை இந்த படுகைகளே அப்படியே கடற்பஞ்சு போல் உள்வாங்கிக் கொண்டு நீரைக் கசிய விடும்... இந்த நீர் தான் வருடம் முழுவதும் ஓடையாக ஓடி ஒரு இடத்தில் அருவியாகச் சரிந்து விழுந்து பின் ஆறாக ஊருக்குள் பாய்கிறது.

இம்மாதிரியான அடர்வான வனங்களில் தான் இயற்கை பலம் காரணமாக மூலிகைகளும், பல ஆட்கொல்லி வகை தாவரங்களும் கூட முளைத்திருக்கும். அவ்வகையில் 'பூச்சிதட்டி' என்று ஒரு தாவரம். மினுமினுவென்று தேன்



பூசினது போன்ற இதன் மேல் ஈக்கள் மற்றும் பூச்சிகள் வந்து அமரும்போது விரிந்த கைகளைப் போல் இருக்கும். இதன் பாகம் பட்டென்று மூடிக் கொள்ளும். உள்ளே இருக்கும் ஈயும் பூச்சியும் அப்படியே அந்த தாவரத்தோடு தாவரமாக நைந்து கலந்துவிடும். மலைகளில் இதுபோல அபூர்வ சங்கதிகள் ஆயிரம் ஆயிரம் உண்டு! மகேந்திரகிரி மலை யிலும் நிலப்பரப்பு இருப்பதால் இப்படிப்பட்ட ஆச்சரியங்கள் நிறைய உண்டு!

தனது வேகத்துக்கு பாலாவும் இளங்கோவும் ஈடு கொடுத்து வந்து விடக்கூடாது என்பதுபோல இருந்தது சாமியாரின் நடை. ஆனாலும் பாலாவின் ஊக்கத்தில் இளங்கோ எப்படியோ நடந்தான். இருவரும் நள்ளிரவு வரை நடந்தனர். இடை இடையே சில பூச்செடிகளின் மகரந்த வாசம் அவர்கள் அதுவரையில் அனுப வித்திராத ஒன்றாக இருந்தது. சில இடங்களில் அட்டை கள் மேல் ஏறிவிட்டிருந்தன. அவைகளை பிய்த்துப் போடுவதற்காக சற்று நின்றாலும் அந்த கோவணச் சாமியை விட்டுவிடுவோம் என்று தோன்றவே ஒட்டிக் கொண்ட அட்டைகள் பற்றி துளியும் ஒரு பொருட் டின்றி பாலா நடந்தான். இளங்கோவிடமும் தம்பியைப் பார்க்கும் வெறி இருந்து அவனைத் துரத்தியது.

ஒரு வழியாக அந்த எல்லைப் பாகமும் வந்தது.

அது மூன்று மலைகளின் நடுவில் உள்ள இரண் டாவது மலையின் உச்சிப்பகுதி. அங்கிருந்து பார்க்கை யில் மூன்றாவது மலை நிலவொளியோடு கூடிய வானை முட்டிக் கொண்டு நிற்பது தெரிந்தது. அந்த மூன்றாவது மலைக்கும் இரண்டாவது மலைக்கும் நடுவில் ஒரு பெரும் சரிவு. அதில் இறங்கி மூன்றாவது

மலையின் அடிப்பகுதியை அடைந்து அங்கிருந்து மேலே ஏற வேண்டும்.

கோவணச்சாமியார் ஒரு கறுப்பு நிழல் உருவமாகத்தான் கண்ணுக்கும் தெரிந்தார். நேராக மூன்றாவது மலையைக் காட்டினார்.

"அதுதான் மகேந்திரகிரியோட முக்கியமான மலை. சிவ ராத்திரியின் போது அந்த மலை உச்சிக்கு போனா சிவ தாண்டவம் ஆட்ற சப்தத்தை கேக்கலாம்னு சொல்வாங்க. அங்க போறது கஷ்டம். அப்படி போனவங்க யாரும் அங்க இருந்து திரும்ப வந்ததில்லை. நீங்க போற வழில ஒரு அருவி விழும். அந்த அருவிக்கு பேர் சொர்ண தாரா! அந்த அருவியில் குளிக்கறதும் ரொம்ப விசேஷம்... நீங்க தேடிவந்த இரண்டு பேரும் இங்க இருந்து துணிச்சலா தேடிப் போய் தான் உயிரை விட்றுக்காங்க. இனி உங்க பாடு... நான் வரேன்..."

மளமளவென்று சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டு தப்பித்தால் போதும் என்பதைப்போல அவர்களை விட்டு பிரிந்து செல்லத் தொடங்கினார் அந்த ஊமைச்சாமி.

இளங்கோ சற்று திகைப்போடு பாலாவை பார்த்தான்.

"என்ன இளங்கோ பயமா இருக்கா?"

"இல்ல பாலா... நீ கூட இருக்கும்போது எனக்கு என்ன பயம்? ஆனா இந்த சாமியார் தான் என்னை குழப்பறார். இந்த ஆளை புரிஞ்சுக்கவே முடியல என்னால?"

"நம்மளை குழப்பறதுதான் அவர் நோக்கமே.... ஆனா எனக்கு எந்த குழப்பமும் இல்லை..."



"அப்படின்னா?"

"இந்த ஆள் ஒரு நிஜமான சாமியார் இல்ல...."

"நான் கூட அப்பப்ப அப்படித்தான் நினைச்சேன்..."

"இந்த ஆள் நம்மைப் போல ஒருத்தன்.... ஒரு கிரிமினலா இருக்கவும் வாய்ப்பு இருக்கு. இப்ப இவன் யார் எப்படிப்பட்டவன்கற ஆராய்ச்சி நமக்கு முக்கியமில்லை. ஆனா இவன் மூலமா நாம இந்த இடத்துக்கு வந்துருக்கறதால சில விஷயங்களைப் பற்றி யோசிக்க வேண்டியிருக்கு..."

"அது சரி அந்த சாமியார் ஒரு போலின்னு எதை வெச்சு சொல்றே?"

"நீ எதை வெச்சு சந்தேகப்பட்டேன்னு முதல்ல சொல்..."

"சாமியார்னா முதல்ல அன்பா இருப்பார். தன் பேச்சு செயல் இரண்டுலயும் உறுதியாவும் இருப்பார். ஆனா இந்த நபர்கிட்ட அந்த விஷயத்துல நிறைய மாற்றங்களை அப்பப்ப பார்த்தேன்..."

"அதைவிட வலுவான ஒரு காரணத்தை நான் உணர்ந்தேன்..... அவரோட தாடி ஒரிஜினல் இல்லை... அதோட இந்த அளவு தாடி இருந்தா பின்னால தலை முடியும் பெண்களோட கூந்தல் போல நீளமா இருக்கணும். ஆனா பின் பாகம், கிராப்பு தலை பாகம் போலவும் முன்னால மட்டும் மார்புக்குழி வரைக்கும் தாடி இருந்தது. அப்பவே இந்த ஆள் ஒரு டுபாக்கூர்னு புரிஞ்சுகிட்டேன்..."

"எக்ஸ்லெண்ட் பாலா.... என்னால இப்படி எல்லாம் நுட்பமா பார்க்க முடியல..."

"பார்க்கணும் இளங்கோ....நான் படிச்ச புத்தகங் கள்ள போலீஸ் அதிகாரிகளும், சி.ஐ.டி போலீசும் இப்படியெல்லாம் தான் கூர்ந்து கவனிப்பாங்க...."

"ஓ.... படிக்கறதுக்கு பின்னால இப்படி எல்லாமும் நன்மை இருக்குதா?"

"படிக்கறதால மட்டும் தான் நன்மைகளே! நாம இப்ப விஷயத்துக்கு வருவோம். இதோ நம்ம முன்னால இருக்கற இந்த பாதைல நாம இப்ப போக வேண்டாம்."

"ஏன் பாலா?"

"அந்த ஆள் காட்டியிருக்கிற பாதை இது. இதுல நிச்சயமா ஆபத்து இருக்கும். அந்த ஆபத்துல நாம சிக்கிகிட்டு ஒழிஞ்சு போகணும்னுகூட அந்த போலி நமக்கு இப்படி ஒரு வழியை காட்டியிருக்கலாம். நாம வேற பாதையை தேர்வு செய்வோம்....

அதேசமயம் என் யூகம் சரியா இருந்தா அந்த போலி நாம இந்த பாதைல போறேமா இல்லையான்னு பாக்கறதுக்காக எங்கையாவது ஒளிஞ்சிருந்து நம்பளை பாத்துகிட்டிருக்கலாம். ஆகையால் இந்த தவறான பாதைல கொஞ்ச தூரம் மட்டுமே போவோம். அதை பார்த்துட்டு அந்த போலிச்சாமியாரும் நாம இனி திரும்ப மாட்டோம்ன்னு நினைச்சு திரும்பிடுவான்.

ஆனா நிச்சயமா நாம திரும்பி வந்து இன்ஸ் பெக்டர் ருத்ரா மூலமா அவன் கணக்கையும் முடிக்க றோம். என்றபடியே அந்த பாதையில் இறங்கி நடக்கத் தொடங்கினான். சில அடி தூரத்திலேயே அந்த பாதை பல பாதைகளாக பிரிந்தது. ஒரு உடம்பு கொண்ட ஐந்து தலை நாகம் ஒன்று படுத்திருக்கிற மாதிரி...

அந்த இடத்திலேயே இருவரும் தேங்கி நின்றனர்...



"இளங்கோ இதுக்கு மேல நாம இப்ப போக வேண்டாம். இங்கையே இப்படியே தங்கிடுவோம். பொழுது விடியட்டும். பகல்ல நாம மாற்றுப்பாதை வழியா அந்த மலை உச்சிக்கு போகலாம்...."

"பாலா.... இந்த வழியா போய் தான் என் தம்பியும் அந்த குமாரும் தொலைஞ்சாங்க... அப்படி இருக்கைல வேற வழியா போனா நாம ஆபத்து எதுவும் இல்லாம மலை உச்சிக்கு வேணும்னா போகலாம். ஆனா என் தம்பி கிடக்கிற பள்ளத்துகிட்ட போய் அவனை காப் பாத்த முடியுமா?"

"உன் கேள்விலயும் நியாயம் இருக்கு. இப் போதைக்கு இங்க தங்குவோம். அதுதான் ஒரே வழி. ஆபத்தான பாதைல இரவு நேரத்துல போக வேண் டாம்..."

"இங்கேன்னா இந்த சமதளத்துலயா?"

"இல்ல இதோ இந்த மரம் சின்னதா ஏறமுடிஞ்ச மாதிரி இருக்கு. இதுல ஏறுவோம். கிளைல வாகா வசதியா சாய்ஞ்சு உட்காருவோம். தூக்கம் வந்தா ஒருத்தர் தூங்க ஒருத்தர் முழிச்சிருப்போம். என்ன சொல்றே?"

"இதுல சொல்றதுக்கு என்ன இருக்கு... இப்ப இதானே சரியான முடிவாகவும் இருக்க முடியும்......"

"சரி வா.... மரத்து மேல ஏறுவோம்......"

- இருவரும் சிரமப்பட்டு அது என்ன மரம் என்று தெரியாமலே ஏறினர். ஒரே தண்டில் ஒரு இடத்தில் மூன்று கிளைகள் சமகோணத்தில் பிரிந்து சென்ற இடத் தில் இளங்கோ வசதியாக காலைத் தொங்கவிட்டபடி அமர்ந்து கொண்டான். பாலாவும் அதேமாதிரி எதிர்

திசையில் ஒரு சரியான இடத்தில் அமர்ந்து கொண்டான். அங்கிருந்து சுற்றுப்பகுதி அவ்வளவும் நன்றாக தெரிந்தது.

"இப்ப மணி எவ்வளவு இருக்கும்?"

"என் யூகம் சரியா இருந்தா மணி மூணு இருக்கலாம்..."

"ஆமாம்.... மணி மூணுக்குத்தான் தேய்பிறை சந்திரன் அதோ வானத்தோட அந்த சரிவுல இருக்க முடியும்."

"மணியை தெரிஞ்சுக்க இப்படி ஒரு வழி இருக்கா பாலா?"

"பின்ன... சூரியனும் சந்திரனும் தானே காலத்தோட நித்யமான கெடிகாரங்கள். பகல் பொழுதுல நிழல் விழறத வெச்சும், இரவுப் பொழுதுல சந்திரனோட நிலைப்பாட்டை வெச்சும் தான் நம்ம முன்னோர்கள் நேரத்தை உணர்ந்தாங்க. சேர சோழ பாண்டியர்கள் காலத்துல மணற்கடிகை நீர்க்கடிகைன்னு காலத்தை உணர கடிகைகளை பயன்படுத்தினாங்க..."

"கடிகைன்னா?"

"கெடிகாரத்துக்கு முந்தைய பெயர்னு வெச்சுக்கயேன். ஒரு பக்கம் மாவு போல இருக்கற மணல் ஒரு பத்து கிலோ அளவு இருக்கும். அது ஒரு சின்ன துவாரம் வழியா கவுத்து வெச்சா கொட்ட ஆரம்பிக்கும். மொத்த மணலும் மறுபக்கம் வந்து சேர ஒரு மணி நேரம் ஆகும். உடனேயே இந்த பக்கம் நிமிர்ந்து இதுல இருக்கிற மணல் அடுத்த பக்கம் ஆரம்பிக்கும். அதுக்கும் அதே அறுபது நிமிஷம். ஒவ்வொரு தடவைக்கும் ஒரு மணி. இரண்டு மணி மூன்று மணின்னு அடிப்பாங்க. அடிச்ச



உடனேயே அந்த மணியை இழுத்துக்கட்டிடுவாங்க. இந்த முறைல சீனர்கள் தான் முதல்ல முன்னோடிகள். நம்ம ஆட்கள் வானத்துல தெரியற நட்சத்திரம் சந்திரனோட இருப்புன்னுதான் முதல்ல நேரத்தை கணிச்சாங்க. பின்னர் அதுல படிப்படியான வளர்ச்சி ஏற்பட்டு இன்னிக்கு அது டிஜிடல் கெடிகாரம் வரை வந்துடுச்சி..."

- தூக்கம் வந்துவிடக் கூடாது என்பதற்காக இருவரும் பேசிக் கொள்ளவும் செய்தனர்.

அப்போது அவர்கள் வந்த வழியில் தீப்பந்தமுடன் ஒரு உருவம் வருவதையும் பார்த்தனர். இருவர் நெற்றியும் சுருங்கியது.

"பாலா யாரது?"

"அனேகமா நம்மை இந்த பாதைல போகச் சொன்ன அந்த கோவணச்சாமியாதான் இருக்கணும்."

"நம்ம போகாம இங்க மரத்து மேல இருக்கறத பார்த்துட்டா...?"

"பார்க்கக் கூடாது... காலை தூக்கி மேல வை.... அப்படியே கிளை மேல படு..."

அப்படியே செய்தான்.

- இளங்கோ அடுத்த நொடி அப்படியே செய்தான். பாலாவும் கிளையோடு கிளையாக ஒட்டிக் கொண்டான். தீப்பந்தம் வெகு சமீபத்தில் நெருங்கி வெளிச்சத்தில் பாலா கணித்தபடியே கோவணச்சாமிதான்.

மிகச் சரியாக ஐந்து பாதையும் பிரியும் இடத்தில் நின்று கொண்டு நாலாபுறமும் பார்த்தார் கோமணச்சாமி. எதனாலோ நிமிர்ந்து மரத்து கிளைகளை பார்க்க வேண்டும் என்று தோன்றவில்லை. அவர் திரும்பவும்

13

எதிரில் இன்னொரு நபரும் தீப்பந்தமுடன் வருவது தெரிந்தது.

"யார் இந்த இரண்டாவது நபர்?"

இரண்டாவதாக வந்த நபர் அருகே வந்த பிறகு தான் தெரிந்தது. அந்த நபர் கலியக்காவிளை கிருஷ்ண பணிக்கர் என்று! இளங்கோவுக்கு ஆச்சரியமாகி விட்டது.

இருவரும் பேசிக் கொள்ளத் தொடங்கினர்.

"என்ன மருதா... அவங்க போய்ட்டாங்களா?"

"அப்படித்தான் தெரியுது பணிக்கரே..."

"அப்ப இவங்களாலயும் திரும்ப முடியாது... விடிஞ்ச பின்னால போய் பார்ப்போம். நிச்சயம் யானை மிதிச்சோ இல்லை கரடி அடிச்சோ செத்துருப்பாங்க..."

"செத்துருப்பாங்க இல்ல.. செத்துருக்கணும் பணிக்கரே..."

"ஒருத்தர்க்கு நாலு பேர் இப்ப நம்ம பிடில..... இவங்கள்ள பிரசிடெண்ட் ஈஸ்வரய்யா மகனும், அவன் சினேகிதனும் தங்க மண் திட்டை நேர்ல பார்த்துட்ட வங்க. ஆமா அவங்க வழியை காட்றேன்னு சொன னாங்களா?"

"இல்ல பணிக்கரே..... நானும் எவ்வளவோ கேட்டுப் பாத்துட்டேன். குருட்டாம்போக்கா ஒரு வழில போன அவங்க தங்க மண் திட்டு கிட்டயும் போய்ட்டாங்க! அங்க எவ்வளவு மண்ணி அள்ளிக்க முடியுமோ அள்ளிக் கிட்டு அவங்க வரவே அவங்களுக்கு அவங்களையே சரியா தெரியல. நிஜமா சொல்றேன். அவங்க பேரே அவங்களுக்கு மறந்து போச்சுங்கறது தான் உண்மை..."



"அப்படின்னா அவங்கள ஆகாயத்துல இருந்து மலைக்கு வந்து போற கவுணர்கள் பாத்துருக்கணும். அவங்ககிட்ட இருக்கற மகரந்தங்கள தூவி இவங்க சித்தம் கலங்கிப் போயிருக்கணும்."

"அப்படித்தான் நானும் நினைக்கறேன். ஆனா அவங்கள குணப்படுத்த முடியாம அந்த தங்க மண் திட்டை நாம கண்டுபிடிக்கவும் முடியாது..."

"அவங்க கிட்ட எவ்வளவு தங்கம் இருந்தது?"

"எடை போட்டதுல ஒரு பன்னெண்டு கிலோ தேறினிச்சு..."

"நாம அந்த மண் திட்டை கண்டு பிடிச்சுட்டாலும் நமக்கும் கவுணர்களால ஆபத்து இருக்கு... கவுணர்களை மாந்திரீகத்துல கட்டிப்போட வழி இருக்கான்னு பாக்க றேன். அதேசமயம் எந்த காரணத்தைக் கொண்டும் முதல்ல வந்த அந்த இரண்டு பேரும், அவங்கள தேடி கிட்டு வந்த இரண்டு பேரும் உன் பிடிக்குள்ள இருக் கறதை நீ வெளிய காட்டிக்கவே கூடாது..."

"நான் எதுக்கு காட்டிக்கறேன்.... நீங்களே என் கூட கூட்டு சேர்ந்ததை வேற வழியில்லாம தான் ஒத்துகிட் டிருக்கேன்."

அதுக்கு என்ன பண்றது உன் கெட்ட நேரமோ இல்லை என்னோட நல்ல நேரமோ பிரசிடெண்ட் ஈஸ்வரய்யா வீட்டுக்கு பிரசன்னம் பார்க்க போன இடத்துல, நான் பாத்த பிரசன்னத்துல உன் உருவம் தான் என் கண் முன்ன வந்தது. அப்பவே நீதான் ஏதோ பண்றேன்னு முடிவு செய்து தான் அவங்களையே நான் குழப்பிட்டு அங்க இருந்து புறப்பட்டேன். வழியில் கார் பிரேக்டவுனாகி நிக்கவும் இந்த இரண்டு பேரை பார்த்தேன். அவங்களையும் குழப்பினேன். ஒருத்தன்

எதிரில் இன்னொரு நபரும் தீப்பந்தமுடன் வருவது தெரிந்தது.

"யார் இந்த இரண்டாவது நபர்?"

இரண்டாவதாக வந்த நபர் அருகே வந்த பிறகு தான் தெரிந்தது. அந்த நபர் கலியக்காவிளை கிருஷ்ண பணிக்கர் என்று! இளங்கோவுக்கு ஆச்சரியமாகி விட்டது.

இருவரும் பேசிக் கொள்ளத் தொடங்கினர்.

"என்ன மருதா... அவங்க போய்ட்டாங்களா?"

"அப்படித்தான் தெரியுது பணிக்கரே..."

"அப்ப இவங்களாலயும் திரும்ப முடியாது... விடிஞ்ச பின்னால போய் பார்ப்போம். நிச்சயம் யானை மிதிச்சோ இல்லை கரடி அடிச்சோ செத்துருப்பாங்க..."

"செத்துருப்பாங்க இல்ல.. செத்துருக்கணும் பணிக்கரே..."

"ஒருத்தர்க்கு நாலு பேர் இப்ப நம்ம பிடில..... இவங்கள்ள பிரசிடெண்ட் ஈஸ்வரய்யா மகனும், அவன் சினேகிதனும் தங்க மண் திட்டை நேர்ல பார்த்துட்ட வங்க. ஆமா அவங்க வழியை காட்றேன்னு சொன் னாங்களா?"

"இல்ல பணிக்கரே..... நானும் எவ்வளவோ கேட்டுப் பாத்துட்டேன். குருட்டாம்போக்கா ஒரு வழில போன அவங்க தங்க மண் திட்டு கிட்டயும் போய்ட்டாங்க! அங்க எவ்வளவு மண்ணி அள்ளிக்க முடியுமோ அள்ளிக் கிட்டு அவங்க வரவே அவங்களுக்கு அவங்களையே சரியா தெரியல. நிஜமா சொல்றேன். அவங்க பேரே அவங்களுக்கு மறந்து போச்சுங்கறது தான் உண்மை..."



"அப்படின்னா அவங்கள ஆகாயத்துல இருந்து மலைக்கு வந்து போற கவுணர்கள் பாத்துருக்கணும். அவங்ககிட்ட இருக்கற மகரந்தங்கள தூவி இவங்க சித்தம் கலங்கிப் போயிருக்கணும்."

"அப்படித்தான் நானும் நினைக்கறேன். ஆனா அவங்கள குணப்படுத்த முடியாம அந்த தங்க மண் திட்டை நாம கண்டுபிடிக்கவும் முடியாது..."

"அவங்க கிட்ட எவ்வளவு தங்கம் இருந்தது?"

"எடை போட்டதுல ஒரு பன்னெண்டு கிலோ தேறினிச்சு..."

"நாம அந்த மண் திட்டை கண்டு பிடிச்சுட்டாலும் கவுணர்களால ஆபத்து இருக்கு... கவுணர்களை நமக்கும் மாந்திரீகத்துல கட்டிப்போட வழி இருக்கான்னு பாக்க றேன். அதேசமயம் எந்த காரணத்தைக் கொண்டும் அவங்கள தேடி முதல்ல வந்த அந்த இரண்டு பேரும், உன் பிடிக்குள்ள இருக் கிட்டு வந்த இரண்டு பேரும் உன் பிடிக்குள்ள இருக் கறதை நீ வெளிய காட்டிக்கவே கூடாது..."

"நான் எதுக்கு காட்டிக்கறேன்.... நீங்களே என் கூட கூட்டு சேர்ந்ததை வேற வழியில்லாம தான் ஒத்துகிட் டிருக்கேன்."

அதுக்கு என்ன பண்றது உன் கெட்ட நேரமோ இல்லை என்னோட நல்ல நேரமோ பிரசிடெண்ட் ஈஸ்வரய்யா வீட்டுக்கு பிரசன்னம் பார்க்க போன இடத்துல, நான் பாத்த பிரசன்னத்துல உன் உருவம் தான் என் கண் முன்ன வந்தது. அப்பவே நீதான் ஏதோ பண்றேன்னு முடிவு செய்து தான் அவங்களையே நான் குழப்பிட்டு அங்க இருந்து புறப்பட்டேன். வழியில் கார் பிரேக்டவுனாகி நிக்கவும் இந்த இரண்டு பேரை பார்த்தேன். அவங்களையும் குழப்பினேன். ஒருத்தன்

செத்துட்டான். ஒருத்தன் பள்ளத்துல கிடக்கான் - அவனும் ஒன்பது நாளுக்குள்ள செத்துடுவான்னு சொன்னேன்...."

"அப்படி சொன்னது தான் பிழையா போச்சு. ஒன்பது நாளைக்குள்ள எவ்வளவோ செய்து முடிக்கலாமே....? அதுல ஒருத்தன் சொல்றான் ஹெலிகாப்டர் மூலமா கூட வந்து நாங்க மீட்டுகிட்டு போவோன்னு.... எதுக்கு பணிக்கரே அப்படிச் சொன்னீங்க. ஒருத்தன் கூட உசுரோட இல்லைன்னு சொல்லியிருக்கலாமே...."

"பைத்தியகாரா..... அப்ப நான் உன்னை பார்க்கல. உன்கூட கூட்டு சேரலை. அதனால அப்படி சொன்னேன். அதுமட்டும் காரணமில்ல - நிஜமாலுமே ஒன்பது நாள் கணக்கு ஒண்ணு இருக்கு. அவனுக்கு ஒன்பது நாளைக்குள்ள மரணத்துக்கு நிகரான கண்டம் ஒண்ணு இருக்கு. என் பிரசன்னத்துல அது துல்லியமா தெரிஞ்சது."

"பிரசிடெண்ட் மகன் இறந்துட்டதா சொல்லிடுங்களா?"

"சொல்லாம சொல்லியிருக்கேன். பிரசிடெண்ட் எவ்வளவு தூரம் போலீசை பயன்படுத்துவார்னும் பாக்கணும். வசதியா மலைல ஒரு சித்தரை பார்த்து அவர் மூலமா மகன் இருக்கிற இடத்தை தெரிஞ்சுக்குங்கன்னு சொல்லியிருக்கேன். அவங்க அப்படி தேடி வரும்போது நீ போய் எதிர்ல நின்னா உன்னை பிடிச்சுக்க போறாங்க. அதுக்குள்ள இந்த பயலுகளுக்கு சுய நினைவை வர வழைச்சுட்டா அந்த தங்க மண் திட்டு இருக்கற இடம் தெரிஞ்சிட்டு போகுது. உண்மை தெரிஞ்ச மறு நிமிஷமே ஆள் விழுங்கிப் பள்ளத்துல தள்ளிவிட்டுடலாம். அவங்க தேடி வரும் போது பள்ளத்தை காட்டி பிணங்களை



இறங்கி எடுத்துகிட்டு போங்கன்னு சொல்லிடு. முடிஞ்சா எடுத்துகிட்டு போகட்டும். இல்லாட்டி அங்கேயே அழுது காரியம் பண்ணட்டும்."

கிருஷ்ண பணிக்கரும், அந்த கோவணச் சித்தனும் பேசிக் கொண்ட விஷயங்கள் அவ்வளவுமே பாலாவையும் இளங்கோவையும் உறைய வைத்துவிட்டன.

"இப்ப வந்த இந்த இரண்டு பேரும் நிச்சயம் உயிரோட வரப்போறதில்ல தானே?"

"இந்த பாதைல போன யாரும் திரும்பினது கிடையாது. குறிப்பா புதை குழிப்பாதை வழியா போயிருந்தா நாம உடம்பைக் கூட பாக்க முடியாது... புதை குழிக்குள்ள மூழ்கிப் போயிருப்பாங்க."

"அதை நாம காலைல தெரிஞ்சுக்குவோம். இப்ப புறப்படுவோம்..."

- கிருஷ்ண பணிக்கர் கோமணச்சாமியை அழைத்துக் கொண்டு திரும்பி நடக்கத் தொடங்கினார். இரு தீப்பந்தங்களும் வீசும் காற்றில் சடசடத்தபடியே அவர்கள் செல்வதை பாலாவுக்கும் இளங்கோவுக்கும் காட்டிக் கொண்டிருந்தது.

தீப்புள்ளிகள் சற்று தூரம் செல்லும் வரை இளங்கோ பேச எத்தனித்தும் பாலா பேசாமல் அவன் வாயைப் பொத்தி அமைதியாக இரு என்றான்! பிறகு தான் வாயைத் திறந்தான்.

"இளங்கோ கடவுள் நம்ம பக்கம் தான் இருக்கார்.... அதனால தான் ஒரு பெரிய உண்மை இப்ப நம்ம காதுல விழுந்துருக்கு..." - என்று ஆரம்பித்தான்.

"ஆமாம் பாலா.... தம்பியும் சரி, அந்த குமாரும் சரி உயிரோடதான் இருக்காங்க... அதுவும் இந்த

கோவணாண்டி கிட்டதான் இருக்காங்கன்னு தெரிஞ்சு போச்சு. நாம இப்பவே அவங்கள பின்தொடர்ந்து போய் இவன் இடம் எதுன்னு பாத்துடுவோமா?”

“ஆமாம் இதைவிட்டா நமக்கும் வேற சந்தர்ப்பம் கிடைக்காது. கமான்....” - இருவரும் மரத்தை விட்டு இறங்கினர்.

அப்படி இறங்கப் போகும்போது ஒரு அதிசயமும் அவர்கள் கண் எதிரில் நடக்கத் தொடங்கியது.

ஐந்து பாதைகளில் ஒரு பாதையில் ஒரு கூட்டமே தீப்பந்தத்தோடு வருவது தெரிந்தது.

“பாலா அங்க பார்....” இளங்கோ காட்டிட பாலாவும் பார்த்தான்.

திகுதிகுவென எரியும் தீப்பந்தங்களுடன் வரிசையாக ஒரு கூட்டம். அவர்கள் அந்த பாதையின் சரிவில் இறங்கி ஒரு பெரிய மரத்தை நோக்கி செல்லத் தொடங்கினர்.

“யார் பாலா இவங்க?”

“தெரியல இளங்கோ..... ஆபத்தான வழின்னு இந்த கோமணச்சாமி சொன்ன வழித்தடத்துல இத்தனை பேர் வர்றாங்கன்னா இது ஆபத்தான வழி இல்லையா இல்லை இவங்களும் நாம பார்த்த இந்த போலிச்சாமியை போலவா?”

- பாலா சொல்லி முடித்த நொடி அந்த மரத்தடியில் குழுமிய அவர்களிடம் இருந்து ‘ஓம் நமசிவாய’ என்கிற கோஷம் எழும்பத் தொடங்கியது. அதைக் கேட்டு பாலாவிடம் ஒரு சிலிர்ப்பு.

“இளங்கோ அவங்கல்லாம் சித்தர் சாமிங்கன்னு நினைக்கறேன்.”



“பாலா..... அவங்க யாரா வேணா இருந்துட்டு போகட்டும். நாம இந்த இரண்டு போலிங்க பின்னால போனாதான் என் தம்பியும் அந்த குமாரும் இருக்கற இடம் தெரியும். இவங்கள நாம அப்புறமா பாத்துக்கலாம்... நேரமாகுது. அந்த இரண்டு பேரும் ரொம்ப தூரம் போய்ட்டாங்க பார்....”

இளங்கோவிடம் பதட்டம் தந்தியடித்தது.

பாலாவுக்கும் அதுதான் சரி என்று தோன்றவே கோமணச்சாமி சென்ற திசை நோக்கி செல்ல காலெடுத்தபோது அடுத்த அதிசயம் போல சித்தர்கள் கோஷமிட்ட மரத்தின் மேல் வானிலிருந்து மலர் மாரி பொழிந்தது போல நட்சத்திரங்கள் உதிர்ந்து விழுந்தன!

பாலாவை அந்த காட்சி சுண்டி இழுத்து நிறுத்தியது!

# 10

பூமியில் தங்கச் சுரங்கங்களை கண்டறிந்து தங்கத்தை வெட்டி எடுத்து அதை உரிய முறையில் சுத்தம் செய்து பின்னர் தான் விற்பனைக்கு வருகிறது. அந்த தங்கம். தங்கத்தின் சிறப்பே அது பஞ்ச பூதங்களாலும் துளியும் பாதகம் அடையாமல் எப்போதும் தன்னிலை இழக்காமல் இருப்பதுதான்.

இதனை வைத்து நல்ல மனம் கொண்டவர்களை தங்கமான மனது கொண்டவர்கள் என்று கூறிடும் ஒரு நடைமுறை உருவானது.

தங்கம் ஒன்றுதான் மதம் கடந்தது. எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுவது...

கோவணாண்டி கிட்டதான் இருக்காங்கன்னு தெரிஞ்சு போச்சு. நாம இப்பவே அவங்கள பின்தொடர்ந்து போய் இவன் இடம் எதுன்னு பாத்துடுவோமா?"

"ஆமாம் இதைவிட்டா நமக்கும் வேற சந்தர்ப்பம் கிடைக்காது. கமான்...." - இருவரும் மரத்தை விட்டு இறங்கினர்.

அப்படி இறங்கப் போகும்போது ஒரு அதிசயமும் அவர்கள் கண் எதிரில் நடக்கத் தொடங்கியது.

ஐந்து பாதைகளில் ஒரு பாதையில் ஒரு கூட்டமே தீப்பந்தத்தோடு வருவது தெரிந்தது.

"பாலா அங்க பார்...." இளங்கோ காட்டிட பாலாவும் பார்த்தான்.

திகுதிகுவென எரியும் தீப்பந்தங்களுடன் வரிசையாக ஒரு கூட்டம். அவர்கள் அந்த பாதையின் சரிவில் இறங்கி ஒரு பெரிய மரத்தை நோக்கி செல்லத் தொடங்கினர்.

"யார் பாலா இவங்க?"

"தெரியல இளங்கோ..... ஆபத்தான வழின்னு இந்த கோமணச்சாமி சொன்ன வழித்தடத்துல இத்தனை பேர் வர்றாங்கன்னா இது ஆபத்தான வழி இல்லையா இல்லை இவங்களும் நாம பார்த்த இந்த போலிச்சாமியை போலவா?"

- பாலா சொல்லி முடித்த நொடி அந்த மரத்தடியில் குழுமிய அவர்களிடம் இருந்து 'ஓம் நமசிவாய' என்கிற கோஷம் எழும்பத் தொடங்கியது. அதைக் கேட்டு பாலாவிடம் ஒரு சிலிர்ப்பு.

"இளங்கோ அவங்கல்லாம் சித்தர் சாமிங்கன்னு நினைக்கறேன்."



"பாலா.... அவங்க யாரா வேணா இருந்துட்டு போகட்டும். நாம இந்த இரண்டு போலிங்க பின்னால போனாதான் என் தம்பியும் அந்த குமாரும் இருக்கற இடம் தெரியும். இவங்கள நாம அப்புறமா பாத்துக்கலாம்... நேரமாகுது. அந்த இரண்டு பேரும் ரொம்ப தூரம் போய்ட்டாங்க பார்..."

இளங்கோவிடம் பதட்டம் தந்தியடித்தது.

பாலாவுக்கும் அதுதான் சரி என்று தோன்றவே கோமணச்சாமி சென்ற திசை நோக்கி செல்ல காலெடுத்தபோது அடுத்த அதிசயம் போல சித்தர்கள் கோஷமிட்ட மரத்தின் மேல் வானிலிருந்து மலர் மாரி பொழிந்தது போல நட்சத்திரங்கள் உதிர்ந்து விழுந்தன!

பாலாவை அந்த காட்சி சுண்டி இழுத்து நிறுத்தியது!

# 10

பூமியில் தங்கச் சுரங்கங்களை கண்டறிந்து தங்கத்தை வெட்டி எடுத்து அதை உரிய முறையில் சுத்தம் செய்து பின்னர் தான் விற்பனைக்கு வருகிறது. அந்த தங்கம். தங்கத்தின் சிறப்பே அது பஞ்ச பூதங்களாலும் துளியும் பாதகம் அடையாமல் எப்போதும் தன்னிலை இழக்காமல் இருப்பதுதான்.

இதனை வைத்து நல்ல மனம் கொண்டவர்களை தங்கமான மனது கொண்டவர்கள் என்று கூறிடும் ஒரு நடைமுறை உருவானது.

தங்கம் ஒன்றுதான் மதம் கடந்தது. எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுவது...

தங்கம் சேரும் இடத்தில் செல்வமும் நிரம்பி வழியும் என்பதை அனேகமாக ஆசையே அனைத்துக்கும் காரணம் என்று கூறிய பௌத்த மதம் கூட நம்புகிறது.

இதனால்தான் கோயிலின் கோபுரக் கலசத்தில் இருந்து விமானம் வரை தங்கத்தால் வேயப் படுகிறது. தங்கத்துக்கு ஆகர்ஷண சக்தியும் அதிகம். அது நற்கதிர்களை ஆகர்ஷிக்க வல்லது என்பதுவும் கோவில் கோபுரங்கள் மற்றும் ரதங்கள் எல்லாம் தங்கத்தில் திகழக் காரணமாகும்.

இந்த தங்கம் இயற்கையின் வரப்பிரசாதம்.

மண்ணில் நிகழும் சில ரசவாத மாற்றங்களால் தான் நிலத்தில் மண்ணானது திரிந்து காலப் போக்கில் தங்கமாய் மாறுகிறது.

மலைகளிலோ சில மூலிகைகளிலோ, இடி விழுந்து அதனால் மின்விசை தோன்றி மண்ணி லுள்ள நீரில் பரவி அதன் காரணமாக மூலிகை களால் ரசமாற்றம் ஏற்பட்டு ஒரு தற்செயல் நிகழ்வாக தங்கம் தோன்றி விடுகிறது. இந்த தங்கம் பாளம் பாளமாக கட்டிக் கொண்டும், துகளாகவும் அந்த மலைப்பகுதி முழுக்க கிடக்கும். இங்கே ஒரு சிறு புற்கள் கூட முளை விடாது. இப்படிப்பட்ட தங்க மண் திட்டுக்கள் உலகில் அபூர்வமாய் சில இடங்களில் மட்டுமே காணப்படுகின்றன.

**பா**லா அந்த மரத்தடியை நோக்கிச் செல்லத் தொடங்கினான். இளங்கோவுக்கு அது ஏமாற்றமாக இருந்தது.



"இளங்கோ..... பேசாம என்கூட வா... அனேகமா நாம பார்த்தது சித்தர்களையா தான் இருக்கணும். சித்தர்கள் தரிசனம்கறது ரொம்ப விசேஷமானது. அந்த தரிசனம் கிடைச்சுட்டா நமக்கு அது பெரிய விமோசனம்..."

"பாலா.... என்ன நீ இந்த பக்கம் போறே?"

"பாலா அங்க அவங்க இரண்டு பேரும் ரொம்ப தூரம் போயிட்டாங்க. அவங்கள பின் தொடர்ந் தால்தான் என் தம்பியை கண்டு பிடிக்க முடியும்..."

"கவலைப்படாதே... இந்த தரிசனமும் இங்க நமக்கு கிடைக்கப் போற அருளும் அந்த போலிகளை நாம எப்ப வேணா கண்டு பிடிக்க துணை நிற்கும். இது அபூர்வமான விஷயம்..."

பாலா சொன்னபடியே விறுவிறுவென்று நடந்து அந்தப் பாதையில் உள்ள சரிவில் இறங்கி ஒரு பெரிய மரத்தின் பின்னால் போய் நின்று கொண்டு எதிரில் தெரிந்த காட்சியை காணத் தொடங்கினான்.

மரத்து நிழலில் ஒரு சிறு குளம்!

அந்த குளத்தில் நிறைய தாமரைப் பூக்கள் பூத் திருந்தன. தீப்பந்தங்களுடன் வந்தவர்கள் சித்த புருஷர் கள் தான். அவ்வளவு பேரும் வெறும் கோவணம் மட்டுமே கட்டியிருந்த நிலையில் குளத்தைச் சுற்றி நின்று கொண்டிருந்தார்கள்.

இரு கால்களால் நின்று கொண்டிருந்தவர்கள் 'ஓம் நமசிவாய' என்று ஒருமித்த குரலில் சொன்ன படியும் இருந்தனர்.

அபூர்வமான காட்சி!

பாலா தற்செயலாக அவர்கள் எவ்வளவு பேர் என்று எண்ணியும் பார்த்தான். பதினெட்டு பேர்!

சட்டென்று அவனுக்குள் ஒரு பொறி.

இவர்கள் தான் பதினெட்டு சித்தர்களோ?

பதினெட்டு சித்தர்கள் என்பவர்கள் சாகா வரம் பெற்றவர்கள் என்பதில் இருந்து காலத்தை வென்று வாழ்பவர்கள் என்றெல்லாம் கேள்விப்பட்டதெல்லாம் அவனுக்குள் ஓடத் தொடங்கியது. இமைக்கக்கூட முடியாதபடி அந்த காட்சியை வெறித்து பார்த்தான். அவன் பார்ப்பதால் இளங்கோவும் பார்த்தான். மற்றபடி இளங்கோ மனது அந்த கோமணச்சாமியாரையும் கிருஷ்ண பணிக்கரையும் விட்டுவிட்டதற்காக ரொம்பவே வருத்தப்பட்டது.

அதேசமயம் எதிரில் நாம கோஷமிட்டபடி இருந்த சித்தர்கள் ஒரு காலில் நிற்கத் தொடங்கினர். அப்படியே கைகளை ஆகாயத்துக்கு உயர்த்தி கூப்பி வணங்கியபடி அவர்கள் நின்ற கோலம் ஒருவித யோக கோலம். அவர்களது தீப்பந்தங்கள் அங்கங்கே மரக்கிளைகளில் செருகப்பட்ட நிலையில் எரிந்து கொண்டிருந்தன.

ஏகபாத தவம் என்று சித்த உலகில் அதற்குப் பெயர்.

பாலாவிற்கு புல்லரித்தது.

இயல்பாகவே ஆழ்ந்த பக்தியும், அழுத்தமான மனநிலையும், தெளிவான பேச்சும் கொண்ட பாலாவிற்கு சிலிப்பாகவும் இருந்தது.

பொதுவாகவே சித்த தரிசனம் என்பது வெகு அபூர்வமானது. அதில் பதினெட்டார் தரிசனம் என்பது பற்பல ஜென்ம புண்ணியத்தால் வருவது......



பாலா நின்ற நிலையில் அந்த சித்த தரிசனத்துக்காக மகிழ்ந்ததோடு அவனும் அந்த சித்தர்களோடு சேர்ந்து 'ஓம் நமசிவாய, ஓம் நமசிவாய' என்று சொல்லத் தொடங்கினான். இளங்கோவின் தோளைத் தொட்டு உசுப்பி 'நீயும் சொல்' என்றான்.

"பாலா..... கைக்கெட்டியது வாய்க்கெட்டாம போயிடப் போகுது. வா நாம போய் வந்த வேலையைப் பார்ப்போம்..."

"முட்டாளே..... எப்ப நமக்கு இந்த சித்த தரிசனம் கிடைச்சிச்சோ அப்பவே நமக்கு ஒரு குறையும் வராதுங்கறதுதான் உண்மை. இது அபூர்வமான காட்சி. உன் தம்பியும் அந்த மூர்த்தியும் தற்செயலா தங்க மண் திட்டுக்கு போய் 12 கிலோ அளவுக்கு கொண்டு வந்த தங்கமண் பத்தி அந்த கோமணசித்தன் பேசினத கேட்டேல்ல... அந்த திட்டுக்கு இவங்க மனசு வச்சா நாம சாதாரணமா போய்ட்டு வரலாம்.

தைரியமா இரு.... உன் தம்பியும் அந்த குமாரும் அந்த கோமணசித்தன் சொன்னபடி தற்போது அவங்க சுய நினைவோடயே இல்லை. அவங்க புத்தி தெளிஞ்சு தங்க மண் திட்டுக்கு போற வழிய சொல்ற வரை அவங்க உயிருக்கும் ஒரு ஆபத்தும் வரப்போறதில்ல.

அதுக்குள்ள நாம கீழபோய் ருத்ராமூலமா கிருஷ்ண பணிக்கரை பிடிச்சு பெண்டு எடுத்தாலே போதும். எல்லா உண்மையும் தானா தெரிய வந்துடும்." - என்று பாலா சொன்னது இளங்கோ காதுகளில் ஏறவே இல்லை.

"சாரி பாலா... நான் தும்பை விட்டுட்டு வாலைப் பிடிக்க தயாரா இல்லை. நான் போறேன். அந்த கோமணாண்டி எங்க என் தம்பியை வெச்சிருந்தாலும்

சரி அதை தெரிஞ்சுக்கறதுதான் என் முதல் வேலை. தெரிஞ்சுகிட்டு சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப நான் செயல்பட்டுக்கறேன். நீ இந்த சாமியாருங்க பண்ற யோகாசனத்தை பார்த்துட்டு உன் செளகர்யம் போலவா..." - என்று திரும்பி நடக்க முனைந்தான். கும்மிருட்டு அவன் கண்ணை சரித்தது. கோமணச் சாமியும் கிருஷ்ணபணிக்கரும் அந்த மலைப்பிராந்தியத்தைவிட்டே போய்விட்டது போல தோன்றியது.

எரிச்சலாக வந்து தேங்கி நின்றான்.

வேறு வழியில்லாதவன் போல திரும்பி வந்தான்.

அப்போது அடுத்தகட்ட அதிசயம் போல அந்த சித்தர்கள் புடை சூழ ஒற்றைக் காலில் நின்று நாம ஜப முழக்கமிட்ட அந்த தாமரைக் குளத்தில் நீர் மட்டமானது வேகமாக குறைய ஆரம்பித்தது. அவ்வளவு நீரும் எங்கே போகிறது என்றும் தெரியவில்லை.

பாலா ஆவல் தாளாமல் மரத்தின் மேல் ஏறி அமர்ந்து கொண்டு பார்க்கத் தொடங்கினான்.

குளத்து நீர் வடிந்த நிலையில் குளத்து நடுவில் ஒரு சிவலிங்கம் காட்சி தந்தது. அந்த சிவலிங்கத்தை தீப்பந்த ஒளியில் நன்றாக பார்க்க முடிந்தது.

அதை பார்த்த நொடி பாலாவும் கைகளை கூப்பி வணங்கினான். அவர்களும் தரிசனம் முடித்த நிலையில் தங்களின் ஏகபாத நிலையில் இருந்து விலகி தூக்கி நிறுத்திய காலை இறக்கி இரு கால்களாலும் நின்று கொண்டு குளத்தை மூன்று முறை சுற்றி வந்து வணங்கினர். பின்னர் தீப்பந்தங்களை எடுத்துக் கொண்டு நடக்கத் தொடங்கினர். அங்கிருந்து ஒரு ஒற்றையடிப்பாதை ஒன்று சென்றது. அதில் ஒருவர் பின் ஒருவராக வரிசையாக நடந்தனர். பாலாவும் அவர்களை



பின்தொடர விரும்பி மரத்திலிருந்து இறங்கி பின் தொடரத் தொடங்கினான்.

இளங்கோவும் வேறு வழியின்றி பின் தொடர்ந் தான்.

இடையில் பலவிதமான கொடிகள் இருவரையும் வழி மறிப்பது போல தடுத்தது. அவைகளை தள்ளி விட்டபடியே நடந்த பாலாவின் காதுகளில் ஹோவென்று அருவி ஒன்று பாயும் சப்தம் காதைத் தீண்டியது.

"பாலா இது என்ன சப்தம்?"

"ஏதோ அருவி... அதான் அந்த சப்தம்"

"பக்கத்துல அருவில குளிக்க போறாங்களா?"

"இவங்க இப்ப அனேகமா நாலுல இருந்து அஞ்சு மணி இருக்கணும். இது பிரம்ம முகூர்த்த நேரம். இந்த நேரத்துல அருவில குளிக்கறது ரொம்ப விசேஷம்."

"ஆமாம்.... இப்ப அனேகமா நாலுல இருந்து அஞ்சு

"குளிச்ச பிறகுதானே பூஜை செய்வாங்க... இங்க என்ன தலை கிழா...?"

"அருவிக்கரைக்கு போனா என்ன நடக்குதுன்னு தெரிஞ்சிடப் போகுது..."

- கிசுகிசுவென்று பேசிக் கொண்டே நடந்ததில் இளங்கோ இரு இடத்தில் பெரும் முள் ஒன்று இருந்து கால்களை குத்திக் கிழித்தது. வலியால் ஆவென்று கத்தி விட்டான். அந்த சப்தம் வரிசையாக நடந்தபடி இருந்த சித்தர்களில் கடைசியாக நடந்தபடி இருந்த சித்தர் காதில் விழுந்தது போல அவர் திரும்பிப் பார்த்தார். பின் எதையும் பார்க்காதவர் போல நடக்கத் தொடங்கினார்.

இளங்கோவுக்கு உதறல் எடுத்துவிட்டது.

திரும்பவும் தொடர்ந்தது நடை.

சில நிமிடங்களிலேயே அருவி வந்து விட்டது. வண்டி வண்டியாக பாலைக் கொண்டு வந்து மேல் இருந்து கொட்டி விட்டது போல நுரை ததும்ப பாய்ந்து கொண்டிருந்தது அருவி.

அந்த அருவி நீரின் சாரலில் நின்ற சித்தர்கள் தங்கள் வசம் இருந்த தீப்பந்தங்களை தூக்கி எரிந்தனர். அடுத்த நொடி கும்மிருட்டு மலுக்கென்று சூழ்ந்து கொண்டது.

அதன் பின் பாலா இளங்கோ கண்களுக்கு எந்தக் காட்சியும் புலனாகவில்லை. மாறாக அருவிச் சாரல் உடம்பின் மேல் பட்டு குளிரத் தொடங்கிவிட்டது. நடுங்கியபடி நிற்பதற்கு திரும்பிச் செல்லலாம் என்றால் அதற்கும் வழி இல்லாதபடி இருட்டு கண்ணைக் கட்டி மறியல் செய்தது. அப்போது தான் அசட்டு துணிச்சலோடு அவ்வளவு தூரம் வந்ததும் புரிந்தது.

"பாலா.... நாம இப்ப எங்க இருக்கோம்னே தெரியல. குளிர் வேற உடம்ப நடுக்குது. இந்த சித்தருங்க என்ன இப்படி பண்ணிட்டாங்க...." - என்று இளங்கோ காதோரமாய் கிசுகிசுத்தான்.

"அமைதியா இரு.... சித்தர்கள் ஜல பாராயணம் செய்யத் தொடங்கியிருக்காங்க...."

"ஜல பாராயணமா... அப்படின்னா?"

"நீர்ச்சாரல்ல நின்று குளிர் இருட்டு எதையும் பொருட்படுத்தாம சில நாமாவை தொடர்ச்சியா சொல்றதுக்கு பேர்தான் ஜலபாராயணம்."

"இது உனக்கு எப்படி தெரியும்?"

"நான் சித்தர்கள் பத்தின ஒரு புத்தகத்துல படிச்சிருக்கேன்."



"என்னமோ போ... நமக்கு ஒரு நல்ல சான்ஸ் கிடைச்சி அதை விட்டுட்டோம். இங்க இப்படி வந்து மாட்டிக்கணும்னும் தலை எழுத்து..."

- இளங்கோ பொறுமினான்.

"பொறுமாதே. அமைதியா இரு. சென்னைல இந்த மாதிரி காலை நேரத்துல கூட ஃபேன் இல்லாம தூங்க முடியாது. இப்படி ஒரு குளிர், இப்படி ஒரு சூழல் அபூர்வம். வரப்பிரசாதம். இதை அனுபவி..."

- பாலா சமாதானம் சொல்லச் சொல்ல வானிலையிலும் மாற்றங்கள். மெள்ள பொழுது புலர ஆரம்பித்துவிட்டது. எதிரே அருவியும் கண்களுக்கு முழுப் பரிமாணத்தோடு தெரிந்தது. ஆனால் ஒரு சித்தரைக்கூட காணவில்லை. விடியும் முன்பாக எங்கே எப்படிப் போனார்கள் என்றும் தெரியவில்லை. ஆச்சரியமும் திகைப்பும் அப்பி எடுத்தது.

"பாலா ...... நல்லவேலையா பொழுது விடிஞ்சிடிச்சு.... அவங்களயும் காணோம். எங்க போயிருப்பாங்க..."

"யாருக்கு தெரியும்.... அவங்க இந்த அருவிக்கு வந்துருக்காங்கன்னா இது நிச்சயம் புனிதமானதாதான் இருக்கணும். வா ஒரு முழுக்கு போட்டுட்டு திரும்பி நடப்போம்..."

"இப்ப கூட உனக்கு நீ செஞ்சது தப்பா தெரியலியா?"

"இளங்கோ... தைரியமா இரு. என் மனசுல எந்த குழப்பமும் இப்ப இல்லை. முதல்ல ஒரு முழுக்கு போடுவோம். அப்புறமா மற்ற விஷயங்கள பார்ப்போம்..."

- பாலா கைகூப்பியபடி தபதபவென பாய்ந்தபடி விழும் அருவியில் போய் நனைந்துவிட்டு வந்தான். இளங்கோவும் அரை மனதாக நனைந்தான்.

பின் அழுக்கு வேஷ்டியை பிழிந்து துடைத்துக் கொண்டு பின் அதை விரித்து உடம்பின் மேல் போர்த்திக் கொண்டு 'போகலாமா?' என்பது போல பார்த்தான் அடர்வாக காட்டுச் செடிகள். அவைகளை விலக்கி விலக்கி விட்டுக் கொண்டு நடக்க வேண்டி இருந்தது.

சிறிது தூரத்திலேயே ஒரு சமதளம் வந்தது.

அந்த சமதளத்தின் முடிவில் ஒரு பெரிய பாறைச் சரிவும் - சரிவுக்கு கீழே குகை போல் ஒரு இருப்பிடமும் தெரிந்தது. வெளியே ஒரு மண் சட்டி ஒன்று உடைந்து கிடந்தது. அதை பார்க்கவும் அங்கே யாராவது இருக்க வேண்டும் என்றும் தோன்றியது.

இருவரும் உள்ளே எட்டிப் பார்த்தனர்.

உள்ளே ஒருவர் பத்மாசனத்தில் தவத்தில் இருந்தார்.

தாடியும் தலைமுடியுமே அவரை ஒரு சித்தர் என்று காட்டிக் கொடுத்துவிட்டது.

பாலாவுக்கு பளிச்சென்று முகத்தில் ஒரு பிரகாசம்.

அவர் முன் சென்று நெடுஞ்சாண் கிடையாக விழுந்தான். இளங்கோ நின்று கொண்டே இருந்தான். அவரும் கண் திறந்தார்.

"சாமி..."

"நீ யாரப்பா... எப்படி இங்க உங்களால வர முடிஞ்சது?"



"அப்படின்னா இது வரமுடியாத இடமா சாமி..."

"ஆமாம்.. சராசரி மனுஷங்களும், கர்மத்துல சிக்கியிருக்கறவங்களும் வர முடியாத இடம் இது. ஆனா நீங்க வந்துருக்கீங்கன்னா நீ பெரிய சிவத் தொண்டு செய்தவனா இருக்கணும்."

"ஆயிரத்தெட்டு நாட்கள் விடாம சிவாலயத் துக்கோ இல்ல ஏதோ ஒரு கோயிலுக்கோ போகணும்கற விரதத்துல இருக்கறவன் சாமி நான்..."

"அந்த பக்தி தான் உனக்கு சக்தியை தந்து நீ இங்கேயும் வந்துருக்கே... ஆமா ஈர வேட்டியோட இருக்கற நீங்க சொர்ண தாராவுல நீராடினீங்களா?"

"அந்த அருவிக்கு பேர் சொர்ண தாராவா சாமி?"

"ஆமாம்... சொர்ணம்கற தங்கம் போல அதுக்கும் தூய்மையான குணம். அதுல நீராடினவங்களுக்கு எல்லா செல்வங்களும் கிடைக்கும்."

"ஓ.... அதனாலதான் குளத்து லிங்கத்தை தரிசனம் பண்ண 18 சித்தர்களும் அருவிக் கரைக்கும் நீராட வந்தாங்களா?"

"அப்ப 18 சித்தர் தரிசனமும் உங்களுக்கு வாய்ச்சதுன்னு சொல்லுங்க..."

"அப்படின்னா நாங்க பார்த்தது 18 சித்தர்களை தானா சாமி."

"அதுல என்ன சந்தேகம். நாளை மறுநாளை தை மாதப் பிறப்பு. மார்கழியோட 28ஆம் நாள் தேவர்கள் கூடுகிற விசேஷமான நாள். வருடா வருடம் சிவராத்திரிக்கும் இந்த 28ஆவது நாளும் 18 சித்தர்கள் சொர்ண தாராவுல நீராடவும், ராஜ வில்வ மரத்து நீர் லிங்கத்தை வணங்கவும் வருவாங்க..."

அப்படி அவர்கள் வரும்போது ஒரு காட்டு விலங்கு கூட அதை பார்க்க முடியாது. உங்களுக்கு அது வாச்சிருக்குன்னா உங்க கர்மக் கணக்கு ரொம்ப பலமாதான் இருக்கணும்."

- அந்த சித்தர் பேச்சு இளங்கோவை பல்லி போல் செருமச் செய்தது. அது அவருக்கும் புரிந்து

"உனக்கு ஏதோ வருத்தம் போல இருக்கே?" - என்று கேட்டார்.

"ஆமாம் சாமி.... இந்த மலைக்கு மேல இப்படி அருவி, குகை சித்தர் சாமிங்க வந்துட்டு போறதுல்லாம் கீழ ஒரு கிராமத்துல பிறந்து வளர்ந்துருக்கற எனக்கே புதுசு.

இப்படி ஒரு மலைக்கு என் தம்பியும் எங்க ஊர் பிரசிடெண்ட் மகனும் வந்தாங்க..." - என்று இளங்கோ நடந்து முடிந்தவைசளை சொல்லத் தொடங்கினான்.

அவ்வளவையும் சொல்லி முடித்தவன் 'தங்க மண் திட்டு' இருக்கறது உண்மையா? அதை என் தம்பியும் குமாரும் கண்டு பிடிச்சதும் உண்மையான்னே தெரியல. ஆனா அதனால தான் இப்ப சிக்கல்ங்கறத புரிஞ்சுகிட்டேன். மரத்துக்கு மேல நாங்க இருக்கறது தெரியாம அந்த போலிச்சாமியாரும் கிருஷ்ண பணிக்கரும் பேசினதை கேட்டு இப்ப கூட என் மனசு படபடங்குது சாமி..." என்றான்.

சிரித்த அந்த சித்தர் "வெளியே போய் இந்த குகைக்கு மேல இருக்கற பாறை மேலே ஏறி மேற்கு பக்கமா பார்த்துட்டு வா..." என்றார்.

"எதுக்கு சாமி?"

"போ... போய் பார்த்துட்டு வாங்க."



- இருவரும் அதேபோல வெளியில் வந்து பாறை மேல் மெல்ல ஏறி உச்சிக்கு சென்று நின்றபடி சூரியனுக்கு நேர் எதிர்திசையான மேற்கு திசையை பார்த்தனர்.

ஒரு குறிப்பிட்ட இடம் சூரியக்கதிர் பட்டு மஞ்சளாய் தகித்துக் கொண்டிருந்தது.

"பாலா... அதோ... அதோ தங்கமண் திட்டு!"

"வாவ்... இதுதான் எவ்வளவு பெரிய உண்மை..."

"ஆனா அங்க எப்படி போறதுன்னு தெரியலயே..."

"பக்கமா அருவித் தண்ணி ஆறு மாதிரி ஓடுது பார்.

அருவி நீரோட நீந்திப் போனா அங்க போகலாம் போல..."

"அப்ப அப்படிதான் மூர்த்தியும் குமாரும் போயிருப்பாங்களோ?"

"வா... கீழ போய் சாமிய பார்த்து கேட்போம்..."

- இருவரும் திரும்பவும் கீழே வந்து சித்தர் முன் நின்றனர்.

"என்ன பார்த்தீங்களா?"

"பார்த்தோம் சாமி... அருவித் தண்ணி ஆறா ஓடிகிட்டு இருக்கு. அதுல போனா அங்க போக முடியும் போல.. இப்படி ஒரு இடத்தை கவர்மெண்ட் எப்படி சாமி இன்னும் நெருங்காம இருக்கு?"

- அதை கேட்டு அந்த சித்தர் சாமி திரும்பவும் சிரித்தார்.

"இந்த சிரிப்புக்கு அர்த்தம் என்ன சாமி?"

"காலை நேரத்துல ஒரு பத்து நிமிஷ நேரம்தான் இப்படி ஜொலிக்க ஜொலிக்க அந்த இடத்தை பார்க்க

முடியும். மற்ற நேரங்கள்ள அப்படி தெரியாது. சாதாரணமா தான் தெரியும். பெரும்பாலும் அருவி நீர் அந்த இடத்தை மூழ்கடிச்சு அந்த திட்டுப்பகுதி தண்ணிக்கு அடில போய்டும்.

அது கவுணர்கள் வந்து நீராட்ற பகுதி...

“கவுணர்கள்னா யார் சாமி?”

“வானத்து மனுஷங்கன்னு சொல்லலாம்... உங்க விஞ்ஞானிகள் பாத்தா வேற்று கிரகத்தவர்கள்னு சொல்வாங்க...”

“அப்ப வானத்துல இருந்து வருவாங்களா?”

“அப்படித்தான் வெச்சுகிடுங்களேன்...”

“நம்ப முடியலியே?”

“வேண்டாம்... விட்றுங்க.... நம்பி என்னாகணும்?”

“சாமி .. இந்த மண் திட்ட விட பெரிய விஷயம் என் தம்பியும் மூர்த்தியும் எனக்கு திரும்ப கிடைக்கணும். அவங்கள தேடிப்போன இன்னும் இரண்டு பேரும் நல்லபடியா திரும்பி வரணும். இப்ப அதுதான் எனக்கு முக்கியம். அதுக்கு நீங்க தான் சாமி ஏதாவது வழிய காட்டணும்?”

- இளங்கோ உருக்கமாய் வேண்டி நின்றான்.

சித்தர் மெல்ல பத்மாசனத்தில் இருந்து விடுபட்டு எழுந்தார்.

குகைக்குள் ஒரு மூலையில் காய்ந்த சுரைக்குடுவை ஒன்று இருந்தது. அதை எடுத்து வந்து கவிழ்த்தார்.

பொலபொலவென்று இரும்பு கோலிகள் போல சில வந்து விழுந்தன. அதில் பட்டாணி அளவில் இரண்டு



உருண்டைகளை எடுத்து இருவரின் வாயையும் திறக்கச் சொல்லி அந்த வாயினுள் வீசி எறிந்தார்.

எந்த சுவையுமின்றி நாவில் எச்சில்பட்டு உழல ஆரம்பித்தது அந்த குண்டுகள்.

“நான் இப்ப போட்டது குளிகையை... இதுக்கு உரு நீக்கி குளிகைன்னு பேர்... நீங்க இன்னும் பத்து நிமிஷத்துல பிறர் கண்ணுக்கு தெரியாம போயிடுவீங்க. இந்த நிலைல 3½ மணி நேரம் தான் இருப்பீங்க. அதுக்குள்ள அந்த குளிகையும் கரைஞ்சிடும். இந்த 3 ½ மணி நேரத்துக்குள்ள நீங்க தேடி வந்த அந்த நாலு பேரையும் வடகிழக்கு மூலைல இருக்கற மண்டபப் பாறை குகைல இருந்து விடுவிச்சு அழைச்சுகிட்டு போங்க. மலையை விட்டு தரையை தொட்ட நிலைல எல்லாமே சொப்பனம் போலதான் இருக்கும்.” - என்ற அந்த சித்தர் ‘இந்த மலையையே லிங்கமா நினைச்சு நீ போட்ட பூக்கள் தான் இந்த குளிகையா உனக்கு திரும்ப கிடைச்சிருக்கு....” என்று ஒரு புதிய செய்தியையும் சொன்னார்.

- அது பெரிய அளவில் இளங்கோவை சிலிர்க்க வைத்தது.

“சாமி.... அந்த நாலு பேருக்கும் நாலு குளிகையை கொடுத்தா அவங்க வாய்ல போட்டு அவங்களயும் அந்த கோமணச் சாமிக்கு தெரியாம கொண்டுகிட்டு போய்டுவேன் தானே?” - என்று புத்திசாலித்தனமாக கேட்டான் பாலா.

அவர் மறுப்பாக எதுவும் பேசவில்லை.

மாறாக நான்கு குளிகைகளை தந்தவர், “இன்னமும் இரண்டு குளிகைகளையும் தரேன். இதை அந்த போலியும் பணிக்கணும் சாப்பிடும்படி பண்ணிடுங்க

அதுபோதும்." - என்று இன்னும் இரண்டு குளிகைகளை தந்தார்.

"இது என்ன சாமி பண்ணும்?"

- அந்த கேள்விக்கு மட்டும் அவர் பதிலே சொல்ல வில்லை!

# 11

**சித்தானுபவம் என்பது விசித்திரமானது. மாயையை அது கட்டிப் போட்டுவிடும். பெரிய அளவில் சித்தத்தை தெளியவும் வைக்கும். மறக்கவும் வைக்கும். உண்டு என்றும் கூற வைக்கும் - இல்லை என்றும் கூற வைக்கும். இரண்டுமே இல்லாதபடி மௌனத்திலும் விழ வைக்கும்...!**

*மண்டபப்பாறை!*

பெயருக்கு ஏற்ப ஒரு மனித சிரம் போல தான் இருந்தது. பாலாவும் இளங்கோவும் வெகு சகஜமாக நடந்து சென்றனர். சூரியனை வைத்து கிழக்கு திசையை உணர்ந்து இடப்பக்கம் இருப்பது வடக்கு திசை என்று புரிந்து அதன் முட்டுப் பாகம்தான் ஈசானம் என்று விளங்கிக் கொண்டு மிகச்சரியாக இடத்தைக் கண்டு பிடித்து உள்ளேயும் நுழைந்தபோது நான்கு பேருமே நோயாளிகளைப் போல படுத்திருந்தனர். தட்டி எழுப்பவும் மிரண்டு போய் கண்களுக்கு புலனாகிடாத பாலாவையும் இளங்கோவின் செய்கையையும் எண்ணி மிரள மிரளப் பார்த்தனர். பக்கத்தில் தேன் குடுவை, வெள்ளரி, பப்பாளி என்று மலை உணவு. அனேகமாக



அது அந்த கோமணச்சாமி சாப்பிடுவதற்காகத்தான் இருக்க வேண்டும்.

முதற்காரியமாக அதில் அந்த சித்தர் கொடுத்த இரண்டு குளிகைகளையும் போட்டனர். பின் நான்கு பேர் வாயையும் அமுக்கி பித்து வாயினுள் குளிகையை போட்டனர். குளிகை வாயினுள் விழுந்த நொடி அவர்களுக்கு மட்டும் பாலா இளங்கோ தெரிந்தனர். குறிப்பாக இளங்கோவின் தம்பி மூர்த்தி 'அண்ணே நீயா?' என்று தெளிவாகவே பேசினான்.

"நானே தான்... எதுவும் பேசாம என் கூட புறப் படு" - என்ற இளங்கோ குகை வாசலை நோக்கித்தான் ஓடினான். அவர்களும் ஓடினர்.

எதிரில் பணிக்கரும், கோமணச்சாமியும் வந்தபடி இருப்பதை பார்த்து திகைத்து நின்றனர். ஆனால் கோமணச்சாமிக்கும் பணிக்கருக்கும் அவர்கள் ஒருவர் கூட கண்ணுக்கு தெரியவில்லை.

உள்ளே சென்ற கோமணச்சாமி நால்வரும் இல்லா ததை பார்த்து, "பணிக்கரே அவனுங்க தப்பிட்டாங்க" - என்று கத்துவதும் காதில் விழுந்தது.

பணிக்கரும் ஏராளமான அதிர்ச்சிகளை முகத்தில் காட்டிவிட்டு "அவங்கள விடக் கூடாது... வா போய் பார்ப்போம்..." - என்று அங்கிருந்து புறப்பட்டார்.

சில அடிகள் போனவர் திரும்பி வந்து தேன் குடுவையை எடுத்து ஒரு மடக்கு குடித்தார்.

"நீயும் குடி... ஓடும்போது தெம்பா இருக்கும் களைப்பும் தெரியாது." - என்றார். கோமணச்சாமியும் ஒரு மடக்கு குடித்தான்.

பின் இருவரும் அங்கிருந்து வேக வேகமாக நடந்து தேடுவதற்காக போவதை அங்கேயே அந்த ஆறு பேரும் பார்த்தபடி இருந்தனர்.

பிரசிடெண்ட் மகன் குமார் அதிர்ந்து போய் "நாம இங்கேயே நிக்கறோம்... நம்மள பாக்காத மாதிரி எங்கையோ தேடிகிட்டு போறாங்களே..." - என்றான்.

"அங்கதான் சித்தர்சாமியோட அருள் இருக்கு. உங்க வாய்ல இருக்கற குளிகை உங்க உருவத்தை மறைக்கற உருநீக்கி குளிகை! இது வாய்ல முழுசா கரைய 3½ நேரமாகும். அதுவரை நாம யார் கண்ணுக்கும் பட மாட்டோம். எங்கவரைல ஒரு மணி நேரம் கழிஞ்சாச்சு. நாங்க இன்னும் இரண்டு மணி நேரம் தான் மறைவா இருப்போம். நீங்க 3½ மணி நேரம் இருப்பீங்க. அதுக்குள்ள நாம ஊருக்கு போய் சேர்ந்துடணும்.

மற்ற எல்லா விஷயங்களையும் ஊருக்கு போய் பேசிக்கலாம்..." - என்றான் பாலா.

"ஆமா நாங்க இங்க எப்படி வந்தோம்?"

"ஏன் கேட்க மாட்டீங்க... ஏ மூர்த்தி.... இப்படியா தங்க மண்ணை தேடி நீங்க இரண்டு பேரும் வருவீங்க...?"

"அ... ஆமால்ல... அண்ணே நாங்க ஒண்ணும் திட்டம் போட்டு வரலை. தங்க மண்ணை தேட்றதும் எங்க நோக்கம் இல்லை. மலைல ஜலலிங்கம்னு ஒரு லிங்கம் இருக்கிறதாவும் அதை வணங்கினா நினைச்ச காரியம் ஈடேறும்னும் அடிவாரத்துல காவிகட்டின இரண்டு சாமியார்கள் பேசிகிட்டாங்க. அதை கேட்ட நாங்க அவங்க கிட்டயே அந்த ஜலலிங்கக் கோவிலுக்கு எப்படி போகணும்னு கேட்டோம். நாங்க அப்படி கேட்கவும் அந்த இரண்டு சாமியாரும் எங்களுக்கு எந்த



பதிலையும் சொல்லாம மலைக்கு கிளம்பிட்டாங்க. எங்களுக்குள்ளேயும் ஒரு ஆர்வம். அவங்களுக்கே தெரியாம அவங்கள பின் தொடர்ந்தோம். அவங்களோட போய் ஒரு பெரிய மரத்தடில ஒரு குளம் போன்ற இடத்துல ஜல லிங்கத்தை தரிசனமும் செய்தோம். அப்படியே அவங்கள தொடர்ந்து போய் சொர்ண தாராங்கற அருவிலயும் குளிச்சோம். அப்பதான் எங்களை அருவி வெள்ளம் அடிச்சுகிட்டு போயிடுச்சு.

நல்ல வேளை...

இரண்டு பேருக்கும் நீச்சல் தெரிஞ்சதால ஒரு இடத்துல கரை ஒதுங்கினோம். நாங்க ஒதுங்கின இடம் தான் தங்க மண் திட்டுங்கறதை பிறகு தெரிஞ்சுகிட்டோம். தங்கக் கட்டியை அரைச்சு மணலா செய்து கொட்டி வெச்ச மாதிரியான ஒரு இடம் அது. பிரமிச்சு போய்ட்டோம். காலை சூரிய வெளிச்சம் பட்டு அது ஜொலிச்சப்போ கண் இரண்டும் எங்க போயிடுமோங்கற அளவுக்கு கூசினுச்சு. எல்லாம் பத்து நிமிஷ நேரம் தான்... நாங்களும் எங்க சட்டை பாக்கெட் பேண்ட் பாக்கெட்ல அந்த தங்கத்தை அள்ளி போட்டுகிட்டு புறப்பட்டோம். புறப்பட்டது வரை தான் ஞாபகம் இருக்கு. இப்ப இங்க உன் கூட பேசறதுதான் நினைவுல இருக்கு. நடுவுல என்ன நடந்ததுன்னே தெரியல. எங்ககிட்ட இருந்த தங்க மண் எங்க போச்சுன்னும் தெரியல..."

- இளங்கோவின் தம்பி மூர்த்தி உள்ளதை உள்ளபடி சொல்லி முடித்தான். அதே ஜோரில் அந்த கோமணச் சாமியாரும், கிருஷ்ண பணிக்கரும் போன திசைக்கு எதிர் திசையில் ஊர் நோக்கி வேகமாக நடந்தபடி இருந்தனர். அவர்கள் எதிரிலேயே நடந்தாலும் எவருடைய கண்களுக்கும் புலனாகப் போவதில்லை

என்பதால் அவர்களிடம் பெரிதாக பயமோ பதட்டமோ இல்லை.

மூர்த்தியின் பேச்சுக்கு பாலாவிடம் இருந்து பதில் தொடங்கியது. "மூர்த்தி... நீங்க வர வழில உங்களுக்கு என்ன நடந்ததுங்கறதை அந்த கோமணச்சித்தன் சொல்லிட்டான். ஒரு மரத்து மேலே ஒளிஞ்சிருந்த எங்க காதுல அந்த பேச்சும் தெளிவா விழுந்தது. உங்களை வானத்து மனுஷங்கனு சொல்லப்பட்ற கவுணர்கள் பார்த்துட்டாங்க. அவங்க தூவின ஒரு மந்திரப் பொடியால உங்களுக்கு உங்க ஞாபகமே இல்லாமப் போச்சு. அந்த நிலைலதான் அந்த போலியை நீங்க பாத்துருக்கணும். அவனும் இந்த தங்க மண் திட்டை தேடி அலையற ஒருத்தன் தான்... தன் தேடலுக்கு எந்த பங்கமும் வரக்கூடாதுன்னு தான் சித்தன் வேஷத்துல அலையறான்.

அவனால சொர்ணதாரா அருவிப்பக்கம் கூட போக முடியல. ஆனா உங்களுக்கும் எங்களுக்கும் ஜல லிங்க தரிசனம் மட்டுமல்ல சொர்ண தாராவுல குளிக்கற பாக்யமும் நமக்கிருந்த உண்மையான பக்தி யால கிடைச்சதுன்னு தான் நினைக்கறேன். அதோட விளைவுதான் ஒரு சித்தர் தரிசனமும் அவர் மூலமாகவே உரு நீக்கி குளிகைகளும் கிடைச்சு இப்ப நாம யார் கண்களுக்கும் புலப்படாதபடி ஊருக்கும் போய்க்கிட்டிருக்கோம்.

இதுல பெரிய கிரிமினல் கிருஷ்ண பணிக்கர் தான் குமார். உங்க அப்பா உன்னை பத்தி தெரிஞ்சுக்க பிரசன்னம் பாக்க வீட்டுக்கு கூப்பிட்டுருக்கார். ஆனா அவனோ பிரசன்னத்துல இந்த மலையை பத்தின உண்மைகளை குறிப்பா கோமணசித்தன் கிட்ட நீங்க சிக்கியிருக்கிறதை தெரிஞ்சுகிட்டிருக்கான். ஆனா இந்த



உண்மையை உங்க வீட்ல யார்கிட்டேயும் சொல்லாம அவங்கள குழப்பி கிட்டத்தட்ட நீ இறந்துட்ட மாதிரியே அவங்கள நினைக்க வெச்சுட்டான். அவனை வழியில நாங்களும் பாத்தோம். எங்களையும் குழப்பினான். ஆனா எல்லாத்தையும் நமக்கிருந்த பக்தியால இப்ப ஜெயிச்சட்டோம்னு தான் நான் இப்ப நினைக்கறேன்...."

"ஆமாம் பாலா.... உன் பக்தியை இப்ப நான் ஒத்துக்கறேன். இந்த மலையையே லிங்கமா பார்த்து பூஜை செய்த உன் பக்தியும் தீவிரமும் அப்ப எனக்கு அலட்டலா தெரிஞ்சுது. இப்பதான் அதுல எவ்வளவு பலமும் அருளும் இருக்குங்கறது புரியுது. உன் அளவு எனக்கு பக்தி கிடையாது. ஆனா உன்னால எனக்கும் 18 சித்தர்களோட தரிசனமும், லிங்க தரிசனமும் சொர்ண தாராவுல குளிக்கிற பாக்யமும் கிடைச்சது. எல்லாத்துக்கும் மேலா தங்க மண் திட்டு ஜொலிக்கறதயும் ரெண்டு கண்களால பாக்க முடிஞ்சது.

இதை நாம் ருத்ரா கிட்ட சொன்னா அவர் எவ்வளவு தூரம் நம்புவாரோ தெரியாது. ஆனா இந்த அரசாங்கத்துக்கு ஒரு தங்கச் சுரங்கம் கிடைக்கறது நல்ல விஷயம் தானே?"

இளங்கோ சொன்னதை மூர்த்தியும் குமாரும் ஆமோதித்தனர். அதுவரை அமைதியாக அவர்கள் பேசுவதை கேட்டபடி வந்த ஊர்க்காரர்கள் இரண்டு பேரும் "நீங்க பேசிக்கறத எல்லாம் கேட்டா பிரமிப்பா இருக்கு. உங்கள தேடி வந்த எங்களுக்கும் ஒரு கட்டத்துல எங்க நினைப்பே இல்ல. நாங்களும் எப்படி இந்த போலிச்சாமிகிட்ட சிக்குனோம்னே தெரியல... ஆனா நாங்க எந்த சாமியாரையும் பாக்கல. ஆபத்தான மலைப் பாதைல அஞ்சு பாதைல இரண்டாவது பாதை வழியா போனது மட்டும் ஞாபகம் இருக்கு...." என்றனர்.

"எல்லாம் சரி... அந்த கிருஷ்ண பணிக்கரும், கோமண சித்தனும் நம்மள காணாம இப்ப அலையோ அலைன்னு அலைஞ்சுகிட்டிருப்பாங்க... எங்க தங்க மண்ணையும் அபகரிச்சுட்ட அவங்க எப்படியும் தங்க மண் திட்டுகிட்ட எல்லா முயற்சியும் செய்வாங்க. அவங்கள தடுத்து நிறுத்தணும். அந்த போலியை போலீஸ்லயும் பிடிச்சு கொடுக்கணும் இல்லேன்னா ஆபத்து" என்றான் குமார்.

"இல்ல... நாம எதுவும் செய்ய வேண்டாம். மலைல சித்தர் கொடுத்த குளிகை கலந்த தேனை இரண்டு பேரும் சாப்பிட்டுட்டாங்க. அது அவங்கள நிச்சயம் நல்லவிதமா மாத்திடும்னு தான் என் மனசுக்கு தோணுது. அப்படி இல்லாம போனாலும் அவங்களை அது ஏதோ ஒரு விதத்துல மாத்திடும்னு நினைக்கறேன்..." - என்றான் பாலா.

அப்போது அவர்கள் கிட்டத்தட்ட அடிவாரத்தை நெருங்கியிருந்தனர். அடிவாரத்தின் கருத்த தார்ச் சாலையும் அதன் மேல் ஒரு ஜீப்புக்கு வெளியில் ருத்ராவும் நிற்பதெல்லாமும் தெரிந்தது.

"நம்பளை அனுப்பிட்டு ருத்ரா சார் காத்துகிட்டிருக்கார். நாம இப்ப அவர் முன்ன போய் நின்னா நம்பளைப் பார்த்து ஆச்சரியப்படுவார்" என்றான் இளங்கோ. அதேசமயம் அந்த மூன்றரை மணி நேரக் கணக்கும் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது போல பாலா இளங்கோ இருவருக்கும் லேசாக தலையை சுழற்றத் தொடங்கியது. நடக்கக் கூட முடியாதபடி பக்கமாய் ஒரு பாறை மேல் அப்படியே அமர்ந்துவிட்டனர்.

"என்ன செய்யுது?"

"தலையைச் சுத்துது... மயக்கமா வருது..."



"சித்தர் சாமி சொன்ன 3 1/2 மணி நேரம் முடியப் போகுது. ஒரு வேளை முடியும்போது இப்படி எல்லாம் ஆகுமோ?"

- பாலாவும் இளங்கோவும் மாறி மாறிக் கேட்டுக் கொண்டனர். கேட்டுக் கொண்டே மயங்கியும் விட்டனர். அதைப் பார்த்த குமார், மூர்த்தி இருவருக்குமே பதட்டம் தொற்றிக் கொண்டது. அங்கிருந்தபடியே ருத்ராவைப் பார்த்து குரல் கொடுத்தனர்.

"இன்ஸ்பெக்டர் சார்... இங்க மலைப் பக்கம் திரும்பிப் பாருங்க..." என்று அவர்கள் கத்தியது அவர் காதில் விழவேயில்லை.

"நாம பேசறது கேக்க மாட்டேங்குது. நாம போய் தண்ணி கொண்டு வந்து மயக்கம் தெளிவிக்கப் பார்ப்போம். யாராவது ரெண்டு பேர் தண்ணி கொண்டு வாங்க. நாங்க இங்க காவல் இருக்கோம்" - என்ற மூர்த்தியோடு குமார் நின்று கொள்ள அந்த ஊர்க் காரர்கள் இருவரும் தண்ணீர் எடுத்துவர ஓடினர்.

நெருந்தூரத்தில் ஓரிடத்தில் சொர்ணதாராவின் ஒரு கிளைப்பகுதியானது மெலிதான ஒரு ஓடையை போல் ஓடிக் கொண்டிருந்தது. அங்கே இருந்து தண்ணீரை அள்ளிச் செல்ல பாத்திரங்களும் இல்லை. அணிந்திருந்த சட்டையை கழற்றி ஓடும் நீரில் நனைத்து எடுத்துக் கொண்டு ஓடி வந்து முகத்துக்கு மேலே பிழிந்தனர்.

பாலாவும் இளங்கோவும் மெல்ல கண்களைத் திறந்தனர். அடுத்த கட்டமாக அந்த நால்வரிடமும் அதேபோல மயக்க நிலை!

இந்த முறை பாலாவும் இளங்கோவும் சென்று தண்ணீரை எடுத்து வந்து பிழிந்து மயக்கத்தை

போக்கினர். உருநீக்கி குளிகையின் செயல்பாட்டுக் காலம் முடிந்துவிட்டது என்பது அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டதிலேயே தெரிந்தது.

பாலாவும் இளங்கோவுமே கூட ஒருவரை ஒருவர் அதிசயமாக பார்த்துக் கொண்டனர்.

"இளங்கோ நாம எப்படி இங்க?"

"அதானே பாலா... நாம எப்படி இங்க?"

"அண்ணே நீ எப்ப சென்னைல இருந்து வந்தே?"

"நான் வந்தது இருக்கட்டும். நீயும் குமாரும் மலைல காணாம போய்ட்டதா சொன்னாங்க. உங்கள தேடித்தான் வந்தோம். ஆனா இப்ப இங்க இருக்கோம். எப்படி?"

"அதானே.... எதுவுமே புரியலியே?"

"அதோ கீழ போலீஸ் ஜீப்... முதல்ல ருத்ரா சாரைப் போய் பார்ப்போம்..."

- அந்த ஆறு பேரும் வரிசையாக ஒருவர் பின் ஒருவராக கீழே இறங்கி ருத்ரா முன்னாலும் போய் நின்றனர்.

"வாவ் எக்சலண்ட்... பாலா கடைசில இவங்க நாலு பேரையும் கண்டுபிடிச்சு கூட்டிக்கிட்டே வந்துட்டியா?" ருத்ரா வியந்தார்.

"ருத்ரா இவங்கள நான் எங்க பார்த்தேன்னே தெரியல. தேடி போனதுமட்டும்தான் ஞாபகத்துல இருக்கு. மத்த எதுவும் தெரியல..."

"சரிதான்... ஜீப்புக்குள்ள எட்டிப் பாருங்க.... அப்பவாவது உங்களுக்கு ஏதாவது ஞாபகம் வருதான்னு பார்ப்போம்..." என்றார் ருத்ரா.



பாலாவும் இளங்கோவும் ஆவலாக எட்டிப் பார்த்தனர்.

உள்ளே துளியும் தன் நினைப்பே இல்லாதபடி கோமணச்சாமியும், கிருஷ்ண பணிக்கரும் அமர்ந்திருந்தனர். தாடையை தடவியபடி மேலே தெரியும் ஆகாயத்தையே பார்த்தபடி அவர்கள் அமர்ந்திருக்கும் கோலமே அவர்களுக்கு துளியும் பிரக்ஞை இல்லை என்பதை உணர்த்திவிட்டது.

"ரெண்டு பேரும் நடிக்கறாங்களா இல்லை நிஜமாலுமே சித்த சுவாதீனத்தை இழந்துவிட்டாங்களான்னு தெரியல... நார்கோ டெஸ்ட் வரை போனா தான் உண்மை தெரியும் போல இருக்கு. இவங்க மேல எந்த புகாரும் இல்லை. அதனால கைது பண்ணவும் வழியில்லை.

காணாம போன நீங்களும் வந்துட்டீங்க.

ஆமா எங்க போனீங்க.... என்ன நடந்தது? - ருத்ரா கேட்டார்.

"சார் எதுவுமே நினைவுல இல்ல சார்..." - என்றான் மூர்த்தி.

"பாலா, நீயாவது சொல்லு.... இவங்கள எங்க பாத்தே?"

"சத்யமா தெரியல ருத்ராபதி..."

"என்ன பாலா.... நேத்து ராத்திரி இந்த விவசாயி வேஷத்தோட இதோ இந்த சாமியாரை பாக்கப்போன ஆண்டிச்சாமி பின்னாலேயே போனீங்க... ஞாபகம் இல்லை..."

"அது ஞாபகம் இருக்கு... ஆனா அப்புறம் எதுவும் ஞாபகம் இல்லை..."

"அப்ப மலைல நீங்க சித்தர்களையோ சாமி யார்களையோ பாத்துருக்கணும். அவங்க தான் உங்கள இப்படி செய்திருக்கணும்."

"தெரியல ருத்ரா..."

"பாலா... ரொம்ப தெளிவான ஆள் நீ - நீயா இப்படி சொல்றே? நல்லா ஞாபகப் படுத்திப்பாரு..."

"ஓ... கே... ஞாபகத்துக்கு வந்தா நிச்சயம் சொல் றேன்... இப்ப தொலைஞ்ச இவங்களோட முதல்ல ஊருக்கு போவோம். இளங்கோ அப்பா அம்மாவுக்கு மூர்த்தியை பார்த்தா தான் உயிரே வரும்...

பிரசிடெண்ட் ஈஸ்வரய்யாவும் தவிச்சுக்கிட்டிருப் பார்."

"அது சரி இந்த இரண்டு பேரை என்ன பண்றது?"

"ஆஸ்பத்திரியில சேர்க்கலாமா?"

"அதுக்கு எனக்கு சரியான காரணம் வேணுமே...?"

"அப்ப இறக்கி விட்டுடு.. இவங்க பாட்டும் இந்த மலைல சுத்தற வரை சுத்தட்டும்." - பாலா சாதாரணமாக சொன்னான்.

ருத்ராவுக்கும் வேறு வழி தெரியவில்லை. இருவரையும் இறக்கி விட்டார்.

இருவருமே ஆளுக்கொரு பக்கம் மெல்ல நடந்து செல்லத் தொடங்கினர். பார்க்கவே பாவமாக இருந்தது.

பின் அவர்கள் ஆறு பேரோடும் அந்த ஜீப் புறப்பட்டது!



"ஒரு அஞ்சாறு நாளா எங்களை நல்லா அலைய வெச்சுட்டீங்க... கடைசில மொழுக்கட்ட மாதிரி வந்தும் நிக்கறீங்க. கேட்டா எதுவும் தெரியலன்னு சொல்றீங்க... இத எப்படி எடுத்துக்கறதுன்னே எனக்கு தெரியல. போலீஸ் ரெக்கார்டுல இந்த மலையோட மர்மம் மட்டும் அப்படியே இருக்கு." - என்று முணுமுணுத்தபடியே வந்தார் ருத்ரா. பாலா கழுத்தை வளைத்து திரும்பிப் பார்த்தான். கூம்பான அந்த மலை அவன் கண்களுக்கு திரும்பவும் சிவலிங்கம் போலவே காட்சி தந்தது.

அவனையுமறியாமல் கைகளை கூப்பினான்.

"யாரைக் கும்பிட்றே?" - ருத்ரா கேட்டார்.

"சாமியதான்...."

"எந்த சாமிய....?"

"அதோ அந்த மலையே சிவலிங்கமா எனக்கு தெரியுது. உனக்கு தெரியலியா?" - பாலா நிஜமாலுமே பக்தியோடு கேட்டான்.

ருத்ராவுக்கு எரிச்சல் தான் வந்தது.

"பாலா... விட்டா மலை மேல அந்த சிவன் நாட்டியம் ஆட்றது கூட தெரியும்னு சொல்வே போல இருக்கே?"

"பக்தியோட பார் ருத்ரா.. நிச்சயம் தெரியும்." என்றான் பாலா.

"சந்தேகமே இல்லை... இவங்களுக்கு என்னவோ ஆகிப்போச்சு. சித்தர் சாமிங்க விசயமே இப்படித்தான் போல... தலையும் புரியல வாலும் புரியல. ஒண்ணு மட்டும் நல்லா புரியுது..." - என்றார் ருத்ரா.

"என்ன ருத்ராபதி புரியுது?"

“நான் புரிஞ்சுக்க முயற்சி செய்தா நானும் உங்கள போல ஆயிடுவேன்னு நல்லா புரியுது…” - என்றபடி சிரித்தார் ருத்ரா.

அதுதானே உண்மையும் கூட…. அந்த ஜீப் முல்லைப் புதூர் விலக்கு சாலைக்குள் புகுந்து ஊரை நோக்கி ஓடியபடி இருந்தது.

முற்றிற்று